# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

முதல் பதிப்பு

சுடர் 32 கதிர் 321 புரட்டாதி 27ஆம் நாள் வெள்ளிக்கிழமை 13 ஒக்ரோபர் 2017 வள்ளுவர் ஆண்டு 2048

விலை: 20
பக்கங்கள்: 28


# வடக்கில் இன்று முழு அடைப்பு!

## அரசியல் கைதிகளுக்கு ஆதரவளித்து

யாழ்ப்பாணம், ஒக். 13
தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி வடக்கில் இன்று வெள்ளிக்கிழமை முழு அடைப்பு முன்னெடுக்கப்படவுள்ளது. அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்கள் உள்ளிட்ட 40 தரப்புக்கள் இன்றைய முழு அடைப்புப் போராட்டத்துக்கு தமது ஆதரவை வழங்கியுள்ளன.

இந்தப் போராட்டத்தால் வடக்கு மாகாணத்தின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்படும். போக்குவரத்துச் சேவை நடைபெறாது. பாடசாலைகள் மற்றும் அரச அலுவலகங்களுக்கு மாணவர்கள், ஊழியர்கள் வருகை தரமாட்டார்கள், கடைகள் அனைத்தும் >> 25

## மைத்திரி பங்கேற்கும் நிகழ்வை சம்பந்தர் புறக்கணிப்பு

### கூட்டமைப்பு எம்.பிக்களும் கலந்துகொள்ளார்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 13
யாழ்ப்பாணத்தில் நாளை நடைபெற உள்ள தேசிய தமிழ் மொழித்தின விழாவில் அரச தலைவர் மைத்திரிபால கலந்துகொள்ளவுள்ள நிலையில் அந்த நிகழ்வை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் புறக்கணிப்பார் என்று தெரிகிறது. கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் நிகழ்வில் கலந்துகொள்ளமாட்டார்கள் என்றும் கூறப்பட்டது. அவர்களில் சிலர் தாம் நிகழ்வில் கலந்துகொள்ளப்போவதில்லை என்பதை ஏற்கனவே தொலைநகல் மூலம் அறிவித்துவிட்டனர் என்றும் உதயன் அறிந்தான்.
அநுராதபுரம் சிறையில் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் தமிழ் அரசியல் கைதிகள் மூவர் ஈடுபட்டுள்ள நிலையில் அதற்கு ஒரு தீர்வை அரச தலைவர் வழங்காமல் இருப்பதை அடுத்தே அவரது நிகழ்வைப் புறக்கணிக்க சம்பந்தரும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் முடிவெடுத்துள்ளனர் என்று தெரிகிறது.
எதிர்க் கட்சித் தலைவரின் புறக்கணிப்புத் தொடர்பில் பகிரங்கமான ஊடக அறிவிப்புக் >> 25



**விபத்தில் சிக்கி அகற்றப்படாது நின்ற பஸ்ஸுடன் மோதியதில் ஒருவர் சாவு**
*உமையாள்புரத்தில் நேற்றுச் சோகம்*
கிளிநொச்சி, ஒக்.12
ஆனையிறவு, உமையாள்புரத்தில் நேற்று அதிகாலை நடந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.
ஏற்கனவே விபத்துக்குள்ளாகி நிறுத் >> 25

## பாடசாலைகளையும் மூடி வலுச்சேர்க்க வாருங்கள்!

### பல்கலை. மாணவர் ஒன்றியம் அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக்.13
அரசியல் கைதிகளின் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் இன்று வடக்கு- கிழக்கு மாகாணம் தழுவிய ரீதியில் முழுமையான கடையடைப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.
இந்தப் போராட்டத்துக்கு பாடசாலை மாணவர்களும் ஒத்துழைக்கவேண்டும். பாடசாலைகளை முழுமையாக மூடி அரசியல் கைதிகளின் கோரிக்கைகளுக்காக ஒருமித்துக் குரல்கொடுக்க வேண்டும் என யாழ்ப்பாண பல்க >> 25

## உறுதியான நிலைப்பாட்டை மைத்திரிக்கு காண்பிப்போம்

### சரவணபவன் எம்.பி. அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 13
இன்றைய முழு அடைப்புப் போராட்டமானது நாளை இங்கு வருகைதரும் அரச தலைவருக்கு நாம் வெளிப்படுத்தும் எமது உறுதியான நிலைப்பாடாகும். தமிழ் மக்கள் ஏகமனதாக அரசுக்கு விடும் எச்சரிக்கையாகும். அரசியல் கைதிகளின் கோரிக்கைகளைக் காலம் தாழ்த்தாது நிறைவேற்ற வேண்டும் என்பதுடன் அவர்களை பொதுமன்னிப்பில் விடுதலை செய்யவேண்டும்.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.
இன்றைய முழு அடைப்புப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து >> 25

## போராட்டம் நியாயமானது முழுமையாக ஆதரிப்போம்

### அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக்.13
உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் அரசியல் கைதிகளின் போராட்டம் நியாயமானது. அவர்களது கோரிக்கைகள் உடனடியாக நிறைவேற்றப்பட்டு விடுதலை செய்யப்படவேண்டும். இவ்வாறு >> 04

## பக்கபலமாக நிற்போம்

### கடற்தொழிலாளர் இணையம் ஆதரவு

யாழ்ப்பாணம் ஒக் 13
அரசியல்கைதிகள் விடயத்தில் இலங்கை அரசு உடனடியாக் நடவடிக்கை எடுக்கவேண்டும். >> 04

## கடற்றொழில் சம்மேளனம் ஆதரவு

யாழ்ப்பாணம், ஒக்.13
வடக்கு மாகாண கடற்றொழில் கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனம் இன்றைய தினம் அழைப்பு விடுக்கப்பட்டுள்ள கடையடைப்புப் போராட்டத்துக்கு முழு >> 04

## பனை தென்னை சங்கங்களும் பூட்டு

தமிழர் பிரதேசங்களில் இன்று நடைபெறும் கதவடைப்புப் போராட்டத்துக்கு யாழ்ப்பாண மாவட்ட பனை. தென்னை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனம் முழுமையான ஆதரவைத் தெரிவித்துள் >> 04

## புதுக்குடியிருப்பு வணிகர்கழகம் கதவடைப்புக்கு முழு ஆதரவு

புதுக்குடியிருப்பு, ஒக்.13
அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி இன்று முன்னெடுக்கப்படும் கதவடைப்புப் போராட்டத் துக்கு புதுக்குடியிருப்பு வணிகர் கழகமும் முழுமையான ஆதரவைத் தெரிவித்துள்ளது.
நீண்டகாலமாக சிறைகளில் வாழும் தமிழ் அர >> 04

## மைத்திரி, சம்பந்தர் பங்கேற்றால் அந்த நிகழ்வைப் புறக்கணியுங்கள்

### முதலமைச்சர் உள்ளிட்டவர்களிடம் பொது அமைப்புகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 13
அரசியல் கைதிகளின் கோரிக்கைகளைப் புறக்கணித்து அரச தலைவர் மைத்திரிபால, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் இருவரும் யாழ்ப்பாணத்தில் நாளை இடம்பெறும் நிகழ்வுகளில் கலந்துகொள்வார்களாயின், அந்த நிகழ்வுகளைப் புறக்கணிக்குமாறு வடக்கு மாகாண முதல >> 25

## அரசியல் கைதிகள் விவகாரம் அமைதிக்கு வலுவான தடை

### சுட்டிக்காட்டி மைத்திரிக்கு சம்பந்தர் கடிதம்

யாழ்ப்பாணம், ஒக். 13
அரசியல் கைதிகளின் விடுவிப்பு விடயம் அரசியல் ரீதியாகக் கையாளப்படாமலிருப்பது இன இணக்கத்தை ஏற்படுத்துவதிலும், நன்மதிப்பையும் அமைதி நிலைமையையும் மீள ஏற்படுத்துவதிலும் வலுவான தடையாகவே அமையும் >> 25

## சமூக நீதிக்கான அமைப்பும் ஆதரவு

யாழ்ப்பாணம், ஒக்.13
தமிழ் அரசியல்கைதிகளின் விடுதலைக்கு வலுச்சேர்க்கும் இன்றைய கடையடைப்புப் போராட்டத்துக்கு முழு ஆதரவு தெரிவிப்பதாக சமூக நீதிக்கான வெகு >> 04

## வளத்தைச் சுரண்டினால் இலங்கையர்கள் இந்தியாவுக்கு எதிராகத் திரும்புவார்கள்

### மகிந்த எச்சரிக்கை

>> 25

## கொழும்பிலும் போராட்டம்

உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் தமிழ் அரசி >> 04

## வடக்கில் இன்றைய கடையடைப்புக்கு தமிழர் ஆசிரியர் சங்கமும் முழு ஆதரவு

முன்னைய ஆட்சியிலும், தற்போதைய ஆட்சியிலும் தொடருகின்ற தமிழர்களின் சிறைவாழ்க்கை முடிவுக்கு வரவேண்டும். >> 25


உங்கள் சேமிப்பிற்கு கவர்ச்சிகரமான வட்டி வீதம்

வர்தன எக்ஸ்றீம் சேவர்

உங்களுடைய சேமிப்பு ரூ. 1000/- ஆக இருந்தாலும்
அதிகபட்ச வட்டியினை
பெற்றுக் கொள்ளுங்கள்

24 மணி நேர அழைப்பு மையம் : 011 2350000
இச்சலுகைகளை இன்றே அனுபவித்திட அருகிலுள்ள DFCC வங்கிக் கிளைக்கு விரைந்து வர்தன எக்ஸ்றீம் சேவர் கணக்கினை ஆரம்பியுங்கள்.
www.dfcc.lk
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

DFCC வங்கி

# மைத்திரியின் வெற்றியில் கிளம்பியது புதிய சர்ச்சை

## சட்ட ஆலோசனை பெறத் தீர்மானித்தது மகிந்த அணி

கொழும்பு, ஒக். 13

2015ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலில் அன்னச்சின்னத்தில் பொதுவேட்பாளராகக் களமிறங்கி வெற்றிபெற்ற மைத்திரிபால சிறிசேனவின் வெற்றி ஏற்புடையதா என்ற சர்ச்சை எழுந்துள்ளது. இது தொடர்பில் மகிந்த அணி சட்ட ஆலோசனை பெறத் தீர்மானித்ததை அடுத்து அரசியல் களத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

தாய்வான் வங்கி மோசடியுடன் தொடர்புபட்ட லிட்றோ சமையல் எரிவாயு நிறுவன முன்னாள் தலைவர் சாலிலா முனசிங்க எதிர்வரும் 25ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அவர் இங்கிலாந்தில் குடியுரிமை பெற்றவர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சாலிலா முனசிங்க தலைமையிலான புதிய ஜனநாயக முன்னணி கட்சியின் சின்னமே அன்னமாகும். அதன்கீழ் போட்டியிட்டே மைத்திரிபால சிறிசேன அரச தலைவராகத் தெரிவானார். இலங்கைக் குடியுரிமை அல்லாத ஒருவரின் கட்சியின் கீழ் போட்டியிட்டு வெற்றிபெற்றது செல்லுபடியாகுமா? என்று மகிந்த அணி கேள்வி எழுப்பியுள்ளது.

மகிந்த அணியினர் நேற்றுக் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச கருத்துத் தெரிவித்தார்.

“ஆட்சிமாற்றத்திற்கு மக்களிடம் வாக்குகளைப் பெற்றிருந்த அரசானது ஆட்சிமாற்றத்தின் பின்னர் வெளிநாட்டுக் குடி மக்களையே மத்திய வங்கியின் ஆளுநராகவும், லிட்றோ நிறுவனத்தின் தலைவராகவும் நியமித்துள்ளது.

இலங்கைக் குடியுரிமை பெறாத ஒருவர் இலங்கையில் கட்சியொன்றை உருவாக்கி அதில் இரண்டு முறை அரசதலைவர் வேட்பாளர்களும் போட்டியிட்டுள்ளனர். 2015ஆம் ஆண்டு அதில் மைத்திரிபால வெற்றியும் பெற்றுள்ளார்.

தேர்தல் ஆணையாளரிடம் நாங்கள் கேட்பதானது, இலங்கைக் குடியுரிமை இல்லாத ஒருவரின் கட்சியில் எவராவது தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றால் அது ஏற்புடையதா?. குடியுரிமை இல்லாத ஒருவருக்கு கட்சியொன்றைப் பதிவுசெய்ய முடியுமா? அந்தக் கட்சிக்குத் தலைவராக முடியுமா? அதில் போட்டியிட்டு வெற்றிபெற்றால் செல்லுபடியாகுமா? என்று அவர் கேள்வி எழுப்பினார். (ந-5)

# எதிர்க்கட்சிக்குரிய பணிகளை மறந்து இயங்குகிறது த.தே.கூ.

## கூட்டு எதிரணி குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக்.13

ஒழுக்கமான எதிர்க்கட்சியாக இருந்து நாட்டுக்குச் சேவை செய்வதை விடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசின் திட்டங்களை ஆதரக்கும் சகபாடியாகச் செயற்படுகின்றது.

இவ்வாறு குற்றஞ்சாட்டினார் முன்னாள் வெளிவிவகார அமைச்சரான ஜி.எல்.பீரிஸ்.

கூட்டு எதிர்க்கட்சியின் ஊடக சந்திப்பு நேற்று பொரல்லையில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சித் தேர்தலை ஜனவரி மாதம் நடத்துவதற்கான ஏற்பாடுகளை முன்னெடுக்கும் சமிக்ஞைகளை அரசு வெளியிடு வருகின்றது. ஆனால் தேர்தல் நடைபெறும் என்பதை உறுதியாகக் கூற முடியாது.

தேர்தலில் கூட்டு எதிர்க்கட்சி ஒன்றிணைந்து ஒரு சின்னத்தின் கீழ் போட்டியிடும். அதற்காகப் பங்காளிக் கட்சிகளுடன் நடத்தப்பட்ட பேச்சுக்கள் வெற்றியளித்துள்ளன. அரசின் சகபாடியாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்படுகின்றது. மாற்று எதிர்க்கட்சியின் தேவை உணரப்பட்டு கூட்டு எதிர்க்கட்சி அந்தப் பணியைச் செய்கின்றது.

தாய்வான் வங்கியில் இடம்பெற்ற வங்கிக் கொள்ளையில் இலங்கையர் தொடர்புப்பட்டுள்ளமை பெரும் அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளது. ரஷ்யாவிடமிருந்து கப்பல் வாங்குவதற்காக மத்தள விமான நிலையத்தை இந்தியாவுக்கு விற்கின்றனர். இதே போன்று ஊழியர் சேமலாப நிதியத்தில் இருந்து பெருந்தொகையான பணம் மோசடி செய்யப்பட்டுள்ளது. மோசமான ஊழல்களை நல்லாட்சி அரசின் உறுப்பினர்கள் முன்னெடுத்து வருகின்றனர். எமது தேர்தல் பரப்புரையின் தொனிப்பொருளாக நல்லாட்சி அரசின் ஊழல்களே காணப்படும். அரசமைப்பு ஊடாக நாட்டை பிளவுப்படுத்தும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதற்கு எதிராக குரல் எழுப்பப்படும் போது அடக்குமுறைகள் பிரயோகிக்கப்படுகின்றன. (ந-31)

# பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் விபத்தில் சாவு

திருகோணமலை, ஒக். 13

வீதி விபத்தில் சிக்கி படுகாயமடைந்திருந்த நிந்தவூர் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.ரீ. ஜப்பார்அலி (வயது 57) சிகிச்சை பயனின்றி நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார். உப்பாறு பாலத்துக்கு அருகில் சிற்றூர்ந்து மற்றும் பேருந்து நேருக்கு நேர் மோதியதில் நேற்று இந்த விபத்து ஏற்பட்டது.

இவர் திருகோண மலை பொது வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார். எனினும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ந)

# முள்ளிவாய்க்கால் சென்ற ஐ.நாவின் சிறப்புப் பிரதிநிதி

முல்லைத்தீவு, ஒக்.13

ஐக்கிய நாடுகள் சபையின் நிலைமாறுகால நீதி தொடர்பான சிறப்புப் பிரதிநிதி பப்லோ டி கிரீப் தலைமையிலான குழுவினர் நேற்று முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பகுதிக்குச் சென்றனர்.

நேற்றுமுன்தினம் திருகோணமலைக்குப் பயணம் மேற்கொண்டிருந்த குறித்த ஐ.நா. குழுவினர் நேற்று முல்லைத்தீவு மாவட்டத்தின் போரால் பாதிக்கப்பட்ட பல பகுதிகளுக்குச் சென்றனர்.

முள்ளிவாய்க்கால் மேற்கில் போரில் உயிரிழந்தவர்கள் நினைவாக சின்னப்பர் தேவாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியை அவர்கள் பார்வையிட்டனர். போரின் எச்சங்களாக மிஞ்சியுள்ள அடையாளங்களையும் பார்வையிட்டனர்.

போரின்போது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சிலரும் முறைப்பாடுகளை அந்தக் குழுவினரிடம் முன்வைத்திருந்தனர்.

போரின் போது ஏற்பட்ட அசம்பாவிதங்கள் மற்றும் இலங்கை தற்போது அடைந்துள்ள முன்னேற் றம் என்பன தொடர்பில் ஆராய்வதற்காகவே ஐக்கிய நாடுகள் சபையின் இடைநிலை நீதி தொடர்பான சிறப்புப் பிரதிநிதி பப்லோ டி கிரீப் இலங்கைக்குப் பயணம் செய்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ந)

# தீபாவளிக் கொடுப்பனவை இழுத்தடிக்கிறது கூட்டரசு

## சாடுகின்றார் தினேஸ் குணவர்த்தன

கொழும்பு, ஒக்.13

அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் தீபாவளி பண்டிகை கொடுப்பனவை அரசு இன்னும் வழங்கவில்லை. இதுவா நல்லாட்சி அரசின் தமிழ் மக்கள் மீதான பற்று?.

இவ்வாறு கேள்வியெழுப்பியுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன.

கூட்டு எதிர்கட்சியின் செய்தியாளர் சந்திப்பு நேற்று பொரல்லவில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

அம்பாந்தொட்டையில் இடம்பெற்ற அமைதியான ஜனநாயக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது மீது தாக்குதல் நடத்தப்பட்டமை மாத்திரமல்லாது ஊடகவியலாளர் ஒருவரும் கடுமையாக தாக்கப்பட்டுள்ளார். அவர் தற்போது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

நாட்டில் ஜனநாயக நல்லாட்சி ஏற்படுத்தப்படும் என்று கூறிய அரசு இன்று ஊடக சுதந்திரத்துக்குப் பெரும் சவாலாகியுள்ளது. சர்வதேச ஊடக அமைப்பு வெளிப்படையாகவே அரசின் மீது கண்டனத்தை தெரிவித்துள்ளது.

மறுபுறம் பொது மக்களின் பிரிதிநிதிகளாக கருதப்படக்கூடிய நாடாளுமன்ற உறுப்பினர்களும் இன்று சிறை வைக்கப்பட்டுள்ளனர். தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களில் அரசு பொறுப்பற்ற வகையில் செயற்படுமாயின் அதனைக் கண்டித்துப் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டியது மக்கள்பிரதிநிதிகள் என்ற வகையில் எமது கடமையாகும்.

அகிம்சை முறையில் முன்னெடுக்கப்பட் ஆர்ப்பாட்டத்தை மையப்படுத்தி கைதுகள் இடம் பெற்றுள்ளது. இதுவரையில் சுமார் 34 பேர் வரையில் சிறைவைக்கப்பட்டுள்ளனர். இது மிகவும் மோசமான நிலைமையாகும். பெண்கள் பலரும் சிறைவைக்கப்பட்டுள்ளனர்.

விதியில் சென்றவர்களை கூட பொலிஸார் கைது செய்து சிறைவைத்துள்ளனர். 74 வயதுடைய வயோதிப பெண்ணை கூட சிறை வைத்துள்ளனர். சிறுபான்மையின மக்களின் உரிமைகள் குறித்து பேசும் கூட்டரசு அரச ஊழியர்களுக்கான தீபாவளி பண்டிகைக்கான 10 ஆயிரம் ரூபாவை இன்னும் கொடுக்கவில்லை. இந்த நிலைமையிலேயே கூட்டரசு ஆட்சி செய்து வருகின்றது. என்றார். (ந-31)

# உடையார்கட்டில் நாள் விதைப்பு

முல்லைத்தீவு, ஒக்.13

தேசிய உணவு உற்பத்தி வாரத்தில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் ஆ.புவனேஸ்வரனால் உடையார் கட்டுப்பகுதியில் நாளுக்கு நெல் விதைக்கப்பட்டுள்ளது.

உடையார் கட்டு கமநலசேவை நிலையத்தின் ஏற்பாட்டில் கமக்காரர் வாரமான ஒக்ரோபர் 05 தொடக்கம் 12 வரையான காலப் பகுதியில் நேற்றையதினம் நெல்விதைக்கப்பட்டது.

கமக்கார அமைப்புகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் இதில் கலந்துகொண்டனர்.



# அமெரிக்காவுடன் சேர்ந்தியங்கும் ரணிலைப் பதவி நீக்கவேண்டும்

## இப்படிக் கூறுகின்றார் திஸ்ஸ

கொழும்பு, ஒக்.13

அமெரிக்காவுடன் ஒருமித்து இயங்கும் தலைமை அமைச்சரின் கொள்கைகள் இலங்கையின் தேசிய பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தலாகியுள்ளது. அவரை உடனடியாகப் பதவி நீக்க வேண்டும். அதற்கான போராட்டத்தை பொது மக்களுடன் ஒன்றிணைந்து முன்னெடுப்போம்.

இவ்வாறு தெரிவித்தார் பேராசிரியர் திஸ்ஸ விதாரண.

கூட்டு எதிர்க்கட்சியின் ஊடக சந்திப்பு நேற்றுப் பொரல்லவில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மேற்குலக செல்வந்த நாடுகளின் பொருளாதார கொள்கைகள் தற்போது வீழ்ச்சி அடைகின்றன. சீனாவிடமிருந்து அமெரிக்கா சுமார் 3.3 ரில்லியனை கடனாக பெற்றுள்ளது. இவற்றை பின்பற்றி செல்லும் தற்போதைய அரசும் பெரும் பொருளாதார ரீதியிலான நெருக்கடிகளை எதிர்கொள்ள போகின்றது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அடிப்பணிந்து கடனை பெற்றுள்ள இலங்கை எதிர்வரும் காலங்களில் அதன் விளைவுகளை சந்திக்கும் நிலமை ஏற்படும். அமெரிக்காவின் பின்னால் செல்லும் இலங்கை விரைவில் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் பேராபத்துக்களை எதிர்கொள்ள போகின்றது.

அமெரிக்கா இலங்கையின் தேசிய பாதுகாப்பு விடயங்களில் நேரடியாக தொடர்புப்பட்டுச் செயற்படுகின்றது. இலங்கைக்கு வந்துள்ள அமெரிக்க பாதுகாப்பு அதிகாரி சீனா மற்றும் இலங்கைக்கு இடையிலான தொடர்புகளை சவாலுக்கு உட்படுத்தும் வகையில் கருத்து தெரிவித்துள்ளார். சீனாவுடன் நட்பை பேணும் போது இலங்கை போன்ற நாடுகள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

இதை அனுமதிக்க முடியாது. இலங்கைக்கான உதவி திட்டங்களை அமெரிக்கா குறைத்துள்ளது. அமெரிக்காவுடன் ஒருமித்து செயற்படும் பிரதமரின் கொள்கைகள் இலங்கையின் தேசிய பாதுகாப்பிற்கு பெரும் அச்சுறுத்தலாகியுள்ளது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலமையிலான கூட்டு அரசு, தலைமை அமைச்சரை உடனடியாக பதவி நீக்க வேண்டும். அதற்கான போராட்டத்தை பொது மக்களுடன் ஒன்றிணைந்து முன்னெடுப்போம்.

சமஷ்டி கொள்கைக்குள் நாட்டை கொண்டுச் செல்வதற்கு அரசியலமைப்பு ஊடாக தலைமை அமைச்சர் செயற்படுகின்றார். சிறுபான்மையின மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கான தீர்வு திட்டத்தை சர்வக்கட்சி மாநாட்டில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அதனை பின்பற்றி தீர்வை காண வேண்டுமே தவிர நாட்டை துண்டாடியல்ல. என்றார். (ந-31)

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளைச் சந்தித்தார் கிரீப்

கிளிநொச்சி, ஒக்.13
கிளிநொச்சியில் தொடர் போராட்டம் நடத்திவரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை ஐக்கிய நாடுகள் சபையின் விசேட பிரதிநிதி பப்லோ டி கிரீப் நேற்றுச் சந்தித்தார்.

நிலைமாறு கால நீதி தொடர்பாகவும், அதில் உள்ள குறைபாடுகள் தொடர்பாகவும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அவருடன் கலந்துரையாடினர். காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் அமைக்கப்பட்டமை தம்முடன் கலந்தாலோசிக்கப்படாது எடுக்கப்பட்ட முடிவு என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் போராட்டத்தை மதிக்கின்றேன் என்று தெரிவித்துள்ள கிரீப், இங்கு சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைக் கருத்திற் கொண்டு அரசுடன் பேசுவேன் என்றும் குறிப்பிட்டுள் ளார். (ற-35)



## சூடுபட்டு இருவர் காயம்

புத்தளம், ஒக்.13
புத்தளம், தப்போவ சரணாலயத்துக்குச் சொந்தமான சியம்பலெ வெவ இல்மத்த காட்டுப் பகுதியில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று அதிகாலை இந்தச் சம்பவம் நடந்துள்ளது. கருவலகஸ்வெவ சியம்பலேவ பிரதேசத்தை சேர்ந்த 18 வயதான இளைஞர் ஒருவரும், 31 வயதான நபர் ஒருவருமே உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் மரம் வெட்டுவதற்காக நான்கு பேர் சென்றபோதே சூட்டுச் சம்பவம் நடந்தது என்று தெரிவிக்கப்பட்டது. துப்பாக்கிச் சூடு நடத்தியவர்கள் தப்பிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் கருவெலகஸ்வெவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற-ரி2)

## லசந்த கொலை தொடர்பில் 295 பேரிடம் வாக்குமூலம்

கொழும்பு,ஒக்.13
ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலை வழக்கில் இதுவரை இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த 295 பேரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது என்று இரகசியப் பொலிஸார் நேற்று கல்கிசை நீதிவான் நீதிமன்றில் தெரிவித்தனர்.

லசந்த விக்கிரமதுங்கவின் கொலை வழக்கு நேற்றுக் கல்கிசை நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

அங்கு முன்னிலையான இரகசியப் பொலிஸ் பிரதிநிதி பெறப்பட்ட வாக்குமூலங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தொலை பேசி உரையாடல்கள் குறித்த விவரங்கள் இதுவரை தமக்குக் கிடைக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

வழக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் 18 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## நுண்நிதிக் கடன்களை பெறுவதை தவிருங்கள்

### மத்திய வங்கி வறுமை ஒழிப்பு பிரிவின் குழுத் தலைவர் அறிவுரை

மட்டக்களப்பு, ஒக்.13
மட்டக்களப்பு மாவட்டத்தில் நுண்நிதிக் கடன் தொடர்பான விழிப்புணர்வுப் பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவித்தார் இலங்கை மத்திய வங்கி வறுமை ஒழிப்புப் பிரிவின் குழுத் தலைவர் ஆர்.சிறிபத்மநாதன்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

தனியார் கடன் வழங்கும் நிறுவனங்களிடம் இருந்து கடன்களைப் பெற்றுக் கொள்ளும் மக்கள் பின்னர் அவற்றைத் திருப்பிச் செலுத்த முடியாது பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இது வறுமை ஒழிப்பு என்ற நோக்கத்தைப் பெரிதும் பாதிக்கின்றது.

அதிக வட்டிக்குப் பெற்றுக் கொண்ட நுண்நிதிக் கடன்களைத் திருப்பிச் செலுத்த வீட்டிலுள்ள பெறுமதியான பொருள்களை விற்பதும், கடன்களைச் செலுத்த முடியாது தலைமறைவாகி வாழ்வதும், குடும்பத்தைப் பராமரிக்க முடியாத நிலைமையும் ஏற்படுகின்றது. அது இறுதியில் தவறான முடிவுகளை எடுக்க வழிகோலுகின்றது.

கடனை மீளப் பெற வரும் நிறுவனப் பணியாளர்கள் கடனாளியின் வீட்டுக்குள் வந்து அமர்ந்து கொண்டதும், அவர்களை எதிர்கொள்ள முடியாத குடும்பப் பெண் ஒருவர் கிணற்றுக்குள் இறங்கி மறைந்து கொண்ட சம்பவம் ஒன்று அண்மையில் நடந்துள்ளது. இது ஒரு பரிதாபகரமான ஆனால் தவிர்த்திருக்கக் கூடிய நிலைமையாகும்.

போரால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்டம் உட்பட, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மக்களை விழிப்படையச் செய்ய வேண்டியிருக்கின்றது. பாதிக்கப்பட்ட குடும்பங்களில் உள்ள இளைஞர்கள், இளம் பெண்கள் ஏதாவது ஒரு உற்பத்தித்துறையில் தமக்கான பயிற்சிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். சுயதொழில் உற்பத்தித் தொழில் துறையில் அவர்களது ஆர்வம் கூட்டாக முன்வைக்கப்படுமாயின் அவர்கள் தெரிவு செய்யும் தொழில் துறைகளுக்கான பயிற்சிகள் இலங்கை மத்திய வங்கியின் வறுமை ஒழிப்புப் பிரிவால் இலவசமாக வழங்கப்படும்.

இந்த வாய்ப்பை வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள இளைஞர்களும் இளம் பெண்களும் உற்பத்தித் துறை சார்ந்தோரும் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

தகைமையான சகல விவரங்களோடும் வங்கிகளை அணுகி இலகு கடன் வசதிகளைப் பெற்றுக் கொள்ள முடியும். தொழிற்றுறையைக் கூட்டாகவோ தனியாகவோ தொடங்க ஆர்வம் கொண்டுள்ள எவருக்கும் நிதி ஆதரவு வழங்க, எந்த வங்கியும் மறுக்க மாட்டாது. அப்படி எந்த வங்கி அதிகாரியாவது மறுத்தால் அதுபற்றிய முறைப்பாட்டைச் சமர்ப்பிக்க முடியும்.

ஆவலில் துரிதமாக, அதேவேளை அதிக வட்டிக்கு நிறுவனங்களிடமிருந்து கடன் பெற்று பின்னர் அதனை மீளச் செலுத்த முடியாமல் சிரமப்படும் நிலைமை போரின் பின்னரான மீண்டெழும் அபிவிருத்தி நோக்கிய மாற்றத்தைச் சீர் குலைத்து விடும் - என்றார். (ற)

## கடும் மழையால் வாகனங்கள் விபத்து

யாழ்ப்பாணம், ஒக்.13
மாங்குளம் , புளியங்குளம் பகுதியில் நேற்றுப் பொழிந்த அடை மழை காரணமாக ஏ9 வீதியில் பயணித்த பல வாகனங்கள் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகின.

மாங்குளம் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக வேகமாகப் பயணித்த ஓர் டிப்பர் வண்டி வீதியோரம் நின்ற மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. கொல்லர்புளியங்குளம் பகுதியில் பயணித்த கார் மதகுடன் மோதியதில் விபத்துக்குள்ளானது.

புளியங்குளம் பகுதியில் பயணித்த பிக்கப் ஒன்று வீதியை விட்டு விலகி வீதியோரம் இருந்த பிரதான மின் கம்பத்துடன் மோதியது. அதனால் மின்சாரம் 2 மணிநேரம் தடைப்பட்டது. இலங்கை மின்சார சபையினர் அதைச் சீர் செய்தனர். விபத்தால் ஏற்பட்ட சேதத்துக்காக ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை வாகன உரிமையாளர் மின்சார சபைக்குச் செலுத்த வேண்டி ஏற்பட்டது. (ற-101)



உங்கள் பிரதேசங்களில் நடக்கும் நிகழ்வுகளை உலகறியச் செய்ய எமக்கு அனுப்புங்கள்



உதயன் DIGITAL newuthayan.com
newuthayan.com
Leading Tamil News website in Sri Lanka
(+) 94 77 316 5555



# உள்ளூராட்சித் தேர்தல் திகதி விரைவில் அறிவிக்கப்படும்

## மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 13
உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் திருத்தச் சட்டங்கள் தொடர்பில் தடையாகவிருந்த மாநகர, நகர, பிரதேச சபைகளுக்கான தேர்தல் திருத்தச் சட்டம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளிவந்தவுடன் தாமதமின்றி தேர்தலுக்கான திகதியை அறிவிப்புச் செய்ய முடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலுடன் தொடர்புடைய மாநகரசபை, நகர சபை, பிரதேச சபை ஆகியவற்றுக்கான தேர்தல் திருத்தச் சட்டங்களில் சபாநாயகர் கரு ஜயசூரிய நேற்றுக் கைச்சாத்திட்டார். மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான அமைச்சர் பைசர் முஸ்தபா மற்றும் நாடாளுமன்ற செயலாளர் தம்மிக தசநாயக்க உள்ளிட்ட அதிகாரிகள் பலர் இதன்போது பிரசன்னமாகியிருந்தனர்.

விரைவில் சட்டத்தை வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் பைசர் இதன்போது குறிப்பிட்டார். தேர்தல்கள் ஆணைக்குழுவை இன்றைய தினம் சந்தித்துப் பேச்சு நடத்தப்போவதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறானதொரு நிலையிலேயே, தேர்தல் திகதியை விரைவில் அறிவிப்புச் செய்ய முடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார். (5,31)

# தொடருந்துப் பணியாளர்களின் போராட்டம் முடிவுக்கு வந்தது

## நேற்று இரவு சேவைகள் வழமைக்குத் திரும்பின

கொழும்பு, ஒக். 13
தொடருந்துச் சாரதிகள், காப்பாளர்கள் சங்கத்தினர் நேற்று முன்தினம் இரவு திடீரென ஆரம்பித்த பணிப்புறக்கணிப்பு முடிவுக்கு கொண்டுவரப்பட்டதாக அந்தச் சங்கம் அறிவித்துள்ளது.

அரச தலைவர் மைத்திரிபாலவின் செயலர், ஒஸ்டின் பெர்னாண்டோவுடன் இடம்பெற்ற பேச்சைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு முதல் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து திடீர் பணிப்புறக்கணிப்பு நடவடிக்கைகளில் தொடருந்துப் பணியாளர்கள் ஈடுபட்டனர். திடீர் பணிப்புறக்கணிப்புக் காரணமாக தொடருந்துப் பயணிகள் கடும் சிரமத்துக்கு ஆளாகியிருந்தனர். நேற்றுக் காலை வேளையிலும் தொடருந்து சேவை வழமைக்கு திரும்பும் என்ற எதிர்பார்ப்புடன் தொடருந்து நிலையங்களுக்குச் சென்ற பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுக்கும் தொடருந்துச் சாரதிகள் தொழிற்சங்கத்தினருக்கும் இடையில் நேற்றுக் காலை பேச்சு இடம்பெற்றது. தொடருந்து சாரதிகள் சங்கத்தினரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை அமைச்சர் ஏற்றுக்கொள்ளாததனால் பேச்சுத் தோல்வியில் நிறைவடைந்ததாக சங்கம் அறிவித்திருந்தது.

நேற்று மாலை அரச தலைவர் செயலகத்தில் இடம்பெற்ற பேச்சுக்களில் தங்கள் கோரிக்கைகளுக்கு அரச தலைவரின் செயலர் இணங்கியுள்ளதால், போராட்டத்தைக் கைவிடுவதாக அவர்கள் தெரிவித்தனர். (5,31)

தாய்வான் வங்கி விவகாரம்

# சிறப்புக் குழு இலங்கை வருகை

தாய்வான் வங்கிக் கட்டமைப்புக்குள் புகுந்து பணத்தைக் களவாடிய விவகாரம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு தாய்வானிலிருந்து சிறப்பு பொலிஸ் குழு இலங்கைக்கு வந்துள்ளது.

தாய்வான் நாட்டுக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் இரு முன்னணி அதிகாரிகளும் வங்கி விசாரணையாளர் ஒருவரையும் உள்ளடக்கிய மூவர் கொண்ட குழுவே இலங்கைக்கு வருகை தந்து இலங்கைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினருடன் இணைந்து கூட்டு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

நியூயோர்க் சிட்டி வங்கி கணினிக் கட்டமைப்பை 'ஹக்' செய்யப்பட்டு தாய்வான் வங்கியிலிருந்து 69 பில்லியன் அமெரிக்க டொலர்கள் களவாடப்பட்டது. அதிலிருந்து 20 கோடி ரூபா பணம் இலங்கைக்குப் பரிமாற்றப்பட்டுள்ளது. இது தொடர்பில் லிட்றோ சமையல் எரிவாயு நிறுவன முன்னாள் தலைவர் உள்ளிட்ட இருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5,31)

# நுணாவிலில் வாள்வெட்டு: ஒருவர் காயம்

சாவகச்சேரி, ஒக்.13
சாவகச்சேரி, நுணாவிலில் நேற்று நடந்த வாள்வெட்டுச் சம்பவம் ஒன்றில் ஒருவர் காயமடைந்தார்.

நுணாவில் மேற்கைச் சேர்ந்த அமுதன் (வயது-27) என்பவரே காயமடைந்துள்ளார்.

காலை வேளை காணி ஒன்றில் விறகு வெட்டிக் கொண்டிருந்த போது இனந்தெரியாதவர்கள் இவர் மீது வாள்வெட்டு நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது. காயமடைந்தவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற-ரி2,9)

# இலங்கை – இந்திய மீனவர் விவகாரம் அரச மட்டப் பேச்சு டில்லியில் நாளை

கொழும்பு, ஒக். 13
இலங்கை-இந்திய மீனவர்களிடையேயான பிரச்சினை தொடர்பில் அரச மட்டத்திலான பேச்சு நாளை சனிக் கிழமை டில்லியில் நடைபெறவுள்ளது. இந்தப் பேச்சுக்களில் பங்கேற்பதற்காக மீன்பிடி அமைச்சர் மகிந்த அமரவீர தலைமையிலான குழுவினர் டில்லிக்கு இன்று பயணமாகவுள்ளனர்.

இலங்கை - இந்திய மீனவர்கள் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் டில்லியில் முதல் சுற்றுப் பேச்சு நடத்தப்பட்டிருந்தது. அரச தரப்புகளுக்கு இடையிலான பேச்சைத் தொடர்ந்து இரு நாட்டு மீனவ அமைப்புக்களிடையேயும் பேச்சு நடத்தப்பட்டிருந்தது. இதன் தொடர்சியாக அடுத்த சுற்று அரச மட்டப் பேச்சு கொழும்பில் நடைபெற்றிருந்தது. மூன்றாம் சுற்றுப் பேச்சு டில்லியில் நாளை இடம்பெறவுள்ளது.

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து, தடை செய்யப்பட்ட இழுவைமடியைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுவதால் தாம் பாதிக்கப்படுவதாக இலங்கை மீனவர்கள் தெரிவிக்கின்றனர். இலங்கை கடற்படையினால் தாம் கைது செய்யப்படுவதாகவும், தாக்கப்படுவதாகவும், இந்திய மீனவர்கள் குறிப்பிடுகின்றனர். இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கே இரு தரப்புக்கும் இடையில் பேச்சு ஆரம்பிக்கப்பட்டது. (5,31)

# எமது கல்விமுறை மாணவர் மீது அழுத்தத்தைக் கொடுக்கின்றது

## பின்லாந்து கல்விமுறையை ஆராய்ந்த பின்னர் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 13
பின்லாந்து கல்வி முறை மற்றும் இலங்கைக் கல்விமுறை தொடர்பாக ஒப்பிட்டு ஆராயும் போது இலங்கைக்கல்விமுறைமைகளின் ஊடாக மாணவர்களுக்கு அழுத்தம் பிரயோகிக்கப்பட்டுள்ளதை அறியமுடிகின்றது. ஒவ்வொரு பாடத்திலும் ஒரு வருடத்துக்கு கற்பிக்கப்படும் விடயங்களின் அளவு அதிகமாகும் என்பது தெரியவருகின்றது. இவ்வாறு கொழும்பு அரசின் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

பின்லாந்துக்குச் சென்று அங்குள்ள கல்விமுறைமைகளைப் பார்வையிட்ட பின்னர் அவர் நேற்றுவிடுத்துள்ள பத்திரிகைச் செய்திக் குறிப்பிலேயே மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

வேறு நாடுகளுடன் ஒப்பிடுகையில் பின்லாந்து பாடசாலைகளில் மாணவர்கள் கல்வி கற்கும் நேரம் வரையறுக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிந்தது. குறைந்த கல்வி மூலம் செயன்முறை கல்விக்கு முன்னுரிமை வழங்குதல், மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைகள், சகல ஆசிரியர்களுக்கும் குறைந்த பட்சம் பட்டம் மற்றும் பட்டப்பின் படிப்பு கற்கைநெறி கட்டாயமாகும். ஒவ்வொரு வகுப்பிலும் குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்கள் இருப்பதனால் ஒவ்வொரு மாணவனையும் தனிப்பட்ட ரீதியில் கவனம் செலுத்துதல் போன்ற சிறப்பம்சங்கள் பின்லாந்து கல்வி முறைமைகளுக்குள் இருக்கின்றது.

பின்லாந்தில் செயன்முறைக் கல்வியில் கூடுதல் அவதானம் செலுத்தப்படுகின்றது.

எமது நாட்டின் கல்வித்துறையில் பல நூற்றாண்டுகளாக பெரிய மாற்றங்கள் ஏற்பட்டதில்லை. பாடத்திட்டங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளல் நவீன உலகத்திற்கு ஏற்ற வகையில் கல்வி முறைமையொன்றை பெற்றுக்கொள்வதற்கு எங்களால் முடியாமல் போயுள்ளது. நாங்கள் ஆரம்பித்துள்ள 13 வருடங்கள் கட்டாய பாடசாலை கல்வி மற்றும் அறிமுகப்படுத்தப்படவுள்ள புதிய 26 பாடத்திட்டங்கள் ஊடாக எதிர்காலத்தில் எமது கல்வித்துறையில் பெரியதொரு புரட்சியை ஏற்படுத்துவதற்கு நாங்கள் எதிர்பார்த்துள்ளோம்.

பின்லாந்தில் பரீட்சை முறைசார் நடைமுறைகள் செயற்படுத்தப்படுவதில்லை. மாறாக ஆரம்பக்காலம் முதல் மாணவர்களின் திறைமை மற்றும் ஆற்றல் அடிப்படையில் அவர்கள் செல்லக்கூடிய வழியை காட்டிக்கொடுக்கும் செயன்முறையொன்று பின்பற்றப்பட்டு வருகின்றது. இவற்றை நாம் எதிர்காலத்தில் முன்னெடுப்போம்- என்றார். (5,31)

## (தொடர்ச்சிகள்...)

### கடற்றொழில்...

மையான ஆதரவை வழங்கும் என அதன் தலைவர் வே.தவச்செல்வம் தெரிவித்தார்.

உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள கைதிகளின் உடல்நிலையைக் கருத்திற் கொண்டு எமது தலைவர்களும், இலங்கை அரசும் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும். அவர்கள் விடுதலை செய்யப்படவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். இதேவேளை வடமராட்சி கடற்றொழில் சமாசமும் இன்றைய போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளது. (ய-8)

### புதுக்குடியிருப்பு...

சியல்கைதிகளின் விடுதலைக்கு அரசு ஒரு தீர்வைக் காணவேண்டும். இழுத்தடிப்புச் செய்யாமல் அவர்களை விடுதலை செய்து, அவர்களின் இயல்பு வாழ்வுக்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என வணிகர் கழகத் தலைவர் செல்வச்சந்திரன் தெரிவித்தார். (ய-ரி3)

### பக்கபலமாக...

அவர்களின் போராட்டத்துக்கு நாம் எப்போதும் பக்கபலமாக இருப்போம் என வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலர் வே.சுப்பிரமணியம் தெரிவித்தார். இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

அநுராதபுரம் சிறைச்சாலை யில் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் அரசியல்கைதிகளின் கோரிக்கைகளை அரசு நிறைவேற்றவேண்டும்.

எமது தமிழ் இளைஞர்கள் அதிகமானோர் இன்றும் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். போர்முடிந்தும் அவர்கள் விடுதலை செய்யப்படவில்லை. ஒருசிலரின் வழக்குகளை அநுராதபுரத்துக்கு மாற்றுவதற்கு எதிராக 3 கைதிகள் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அவர்களின் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையிலான இன்றைய கடையடைப்புப் போராட்டத்துக்கு நாம்முழுமையான ஆதரவைவழங்குகின்றோம் - என்றார். (ய-8)

### பனை...

ளது. கூட்டுறவுச் சங்கங்கள் யாவும் மூடப்பட்டு ஆதரவு வழங்கப்படும் என சங்கத்தின் தலைவர் லே.கணேசன் தெரிவித்தார். (ய-8)

### சமூக...

சன அமைப்பு தெரிவித்துள்ளது. ஆயுதம் தாங்தாங்கிப் போராடியவர்கள் தேசிய நீரோட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளனர். அரசியல்கைதிகள் அனைவரும் உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும் என அமைப்பின் செயலாளர் சு.டொன் பொஸ்கோ விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். (ய)

### போராட்டம்...

யாழ்ப்பாண மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் தலைவர் தே.தேவானந்த் தெரிவித்துள்ளார்.

இன்றையகடையடைப்புக்குஇணையமும், இணை யத்தின் அதன் 28 அங்கத்துவ நிறுவனங்களும் முழு ஆதரவு தெரிவிக்கும்.

ஏனைய சிவில் அமைப்புக்களையும் வெகுஜன அமைப்புக்களையும் ஆதரவு வழங்குமாறு கோருகிறோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ய)

### கொழும்பிலும்...

யல் கைதிகளுக்கு ஆதரவாகவும், அனைத்து அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும் கொழும்பிலும் இன்று கவனயீர்ப்புப் போராட்டம் நடைபெறவுள்ளது. கொழும்பு தொடருந்து நிலையத்துக்கு முன்னால் பிற்பகல் 3.30 மணிக்கு இந்தப் போராட்டம் இடம்பெறும் என்று அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்தார். (உ-5)

# பெற்றோர்களின் தியாகமே பிள்ளைகளை உயர்த்தும்

## வலிகாமம் உதவிக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.13
பெற்றோர்கள் தம்மைத் தியாகம் செய்து பிள்ளைகளின் கல்வித் தேவைகளைநிறைவேற்றவேண்டும். அப்போதுதான் அவர்களை எதிர்காலத்தில் நற் பிரஜைகளாக உருவாக்க முடியும் என வலிகாமம் கல்விவலய முறைசாராக் கல்விப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.
உடுவில் மான்ஸ் தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் அதிபரைப் போலலே பெற்றோரும் முக்கியத்தும் பெறுகின்றனர். பிள்ளைகளின் ஒவ்வொரு அசைவிலும் பெற்றோரின் பங்களிப்பு அவசியமாகின்றது. தாமத வரவு, ஒழுங்கற்ற வரவு, இடைவிலகல் போன்ற முக்கிய பிரச்சினைகளுக்குப் பெற்றோர்களின் அக்கறையின்மையே முதன்மைக் காரணியாக அமைகின்றது.
பாடசாலைகளில் மாணவர்கள் பின்தங்குவதற்கு பெற்றோர்களே காரணம். கல்வியின் முக்கியத்துவத்தை அறியாத பெற்றோர்கள் தேவையற்ற வாதங்களைமுன்வைக்கின்றனர். பிள்ளைகளை வேலைக்கு அனுப்புகின்றனர்.
இவை முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும் என்றார்.
பாடசாலை அதிபர் இரா.ஜெயக்குமார் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது. முதன்மைவிருந்தினராக ஆ. ரவீந்திரன் (தலைவர்- வாழ்வகம்), கோட்டக் கல்வி அலுவலர் ரி. மாதவன், ஓய்வுநிலை கோட்டக் கல்வி அலுவலர் சு. சண்முககுலகுமாரன் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ய)

## தச்சன்தோப்புக் கொள்ளை இரண்டுபேர் சிக்கினார்கள்

யாழ்ப்பாணம், ஒக்.13
தச்சன் தோப்புப் பகுதியில் கொள்ளைச் சம்பவம் ஒன்றுடன் தொடர்புபட்ட இருவரைக் கைதுசெய்துள்ளதாக சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்தனர்.
இதுதொடர்பில் தெரியவருவதாவது:
அண்மையில் தச்சன் தோப்பு வளைவில் மறைந்திருந்தவர்கள் மோட்டார் சைக்கிளில் சென்ற நபரை வழிமறித்தனர். அவரது கழுத்தில் கத்தி வைத்து மிரட்டினர். 20 ஆயிரம் ரூபா பணம் மற்றும் ஆவணங்களைக் கொள்ளையடித்துச் சென்றனர். பாதிக்கப்பட்டவர் சாவகச்சேரி பொலிஸில் முறைப்பாடு செய்தார்.
கொள்ளையர்கள் சென்ற மோட்டார் சைக்கிளின் இலக்கத்தையும் பொலிஸாரிடம் வழங்கியிருந்தார்.
விசாரணைகளை அடுத்து இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ய-21-288)

## பயிர்களை அழித்துவரும் கால்நடைகள் பிடிக்கப்படும்

தென்மராட்சி, ஒக்.12
தென்மராட்சிப் பிரதேசத்தில் காலபோக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வளர்ப்புக் கால்நடைகளை கட்டிவளர்க்குமாறு கமநல சேவைகள் நிலையத்தினர் அறிவித்துள்ளனர்.
கட்டாக்காலி கால்நடைகளால் நெற்பயிர்களுக்கு அழிவுகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.
பயிர்களை அழித்து வரும் கால்நடைகள் பிடிக்கப்படும். உரிமை கோரப்படாத பட்சத்தில் அவை ஏலத்தில் விற்பனை செய்யப்படும். இந்த நடைமுறை எதிர்வரும் 15ஆம்திகதி தொடக்கம் 2018 ஜுலை மாதம் வரை நடைமுறையில் இருக்கும் எனகமநலசேவை நிலையத்தினர் அறிவித்துள்ளனர். (ய-9)

## கற்கைநெறி நேர்முகம் பிற்போடல்

யாழ்ப்பாணம், ஒக்.13
யாழ்ப்பாண பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினரால் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த வணிகமானி கற்கைநெறிக்கான நேர்முகத்தேர்வு எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு பிற்போடப் பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது. சனி ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறவிருந்த நேர்முகத்தேர்வுகள் வழமை போல இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ய-109)

## வாத்தியத் துறையில் இளம் கலைஞர்விருது

யாழ்ப்பாணம், ஒக்.13
வடக்கு மாகாணப் பண்பாட்டுப் பெருவிழாவில் முதன்முறையாக வழங்கப்பட்ட வாத்தியத் துறைக்கான இளங்கலைஞர் விருதை பிரம்மஸ்ரீ நா.சிவசுந்தரசர்மா பெற்றுக்கொண்டார். சுன்னாகம் மயிலணியைச்சேர்ந்தஇவர்ஒருமிருதங்கவித்துவான் என்பது குறிப்பி டத்தக்கது. (ய)

## இயற்றாலையில் குண்டுகள் மீட்பு

வரணி இயற்றாலைப் பகுதியில் பற்றையாகக் காணப்பட்ட 20 பரப்புக் காணி துப்புரவு செய்யப்பட்டது. காணியில் வெடிக்காத நிலையில் குண்டு காணப்பட்டது. காணி உரிமையாளர் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய சிறப்பு அதிரடிப் பொலிஸார் மூலம் குண்டை அப்புறப்படுத்தி செயலிழக்கச் செய்யுமாறு பொலிஸாருக்கு சாவகச்சேரி நீதிமன்றம் உத்தரவிட்டது. (ய-9)

## விடுதலைக்கு பலம்சேர்க்க வாரீர் அனந்தி அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக்.13
தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி இன்று வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் கதவடைப்புப் போராட்டத்தில் பங்கேற்று அவர்களின் விடுதலைக்கு பலம் சேர்க்க முன்வருமாறு மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் அழைப்பு விடுத்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
எமது இளைஞர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் துணையோடு கைதுசெய்யப்பட்டனர். அதிகார அத்துமீறலின் கீழான அச்சுறுத்தல் நிலையில் குற்ற ஒப்புதல் வாக்குமூலங்கள் பெறப்பட்டன. அவற்றை மட்டுமே அடிப்படை ஆதாரமாகக்கொண்டு நீதிக்குப் புறம்பாக அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களின் விடுதலை தொடர்பில பொய் வாக்குறுதிகளை வழங்கி காலம் கடத்திவருகிறது இலங்கை அரசு. அதன் தந்திரத்தனமான போக்கை எமது ஒன்றுபட்ட பலத்தின் மூலம் முறியடிப்போம். தாயக மக்கள் அனைவரும் இக்கடையடைப்புப் போராட்டத்தில் பங்கேற்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார். (ய-106)

## வாள்வெட்டுக் குற்றச்சாட்டில் மானிப்பாயில் ஒருவர் கைது

### சிசிரிவி கமராவை அவதானிக்கும்வரை பொலிஸார் அடித்தனர் என்று குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக். 13
வாள்வெட்டுக் குற்றச்சாட்டில் தேடப்பட்டு வந்தவர் என்று குற்றஞ்சாட்டி இளைஞன் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.
அவரைக் கைது செய்யும்போது பொலிஸார் அடித்து உதைத்தனர் என்றும் அங்கு பொருத்தப்பட்டிருந்த சிசிரிவி கமராவைப் பார்த்த பின்னரே பொலிஸார் அடிப்பதை நிறுத்தி பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர் என்றும் இளைஞனின் உறவுகளால் குற்றஞ்சாட்டப்படுகிறது.
சம்பவம் மானிப்பாய் லோட்டன் சாலையில் உள்ள வீடு ஒன்றில் நேற்றுமாலை இடம்பெற்றதாக உறவினர்களால் தெரிவிக்கப்பட்டது.
பொலிஸார் பெற்றோர்கள் முன்னிலையில் இளைஞனைக் கடுமையாகத் தாக்கினர். அதனை தடுக்க முற்பட்ட அவரது தாயாரையும் பொலிஸ் உத்தியோகத்தர்களில் ஒருவர் தாக்க முற்பட்டுள்ளார். கமரா பூட்டப்பட்டிருந்ததை அவதானித்த மற்றொரு பொலிஸ் உத்தியோகத்தர் அதனைத் தடுத்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.
இளைஞன் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (4-103)

## சிறுவர் கழகத்தின் கட்டடத் திறப்புவிழா

தென்மராட்சி, ஒக்.13
தென்மராட்சி தெற்கு, த்னங்களப்பில் புதிதாக அமைக்கப்பட்ட புதிய மலரும் மொட்டுக்கள் சிறுவர் கழக கட்டடத் திறப்பு விழாவும், கலைநிகழ்வுகளும் நாளை சனிக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு இடம்பெறும். வேள்ட் விஸன் லங்கா நிறுவன சாவகச்சேரி பிரதேச அபிவிருத்தித் திட்ட முகாமையாளர் அ. கி. றொசையோ கட்டடத்தைத் திறந்துவைப்பார்.
முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட சமுர்த்தித் திணைக்களப் பணிப்பாளர் க.மகேஸ்வரனும், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச சிறுவர் மேம்பாட்டு அலுவலர் திருமதி ச.வரதீஸ்வரி, பிரதேச சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஆ.அன்ரனி, மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி ஆசிரியர் தி.விக்கினேஸ்வரன் ஆகியோரும், மதிப்புறு விருந்தினர்களாக ஓய்வு நிலை அதிபர் சி.நாகையா, கிராம அலுவலர் க.தர்மேந்திரா, தனங்களப்பு வீடமைப்புக் குழுத் தலைவர் க.நவரத்தினம் ஆகியோரும் கலந்துகொள்வர்.
நிகழ்வில் முதியோர் மற்றும் விருந்தினர்கள் மதிப்பளிப்பு நிகழ்வும் கலை நிகழ்வும் இடம்பெறும். கு.இந்துஜா நிகழ்வுக்கு தலைமை தாங்குவார். அப்பகுதியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை நவரத்தினம் கழகத்துக்குக் காணி வழங்கியிருந்தார்.
வேள்ட் விஸன் லங்கா நிறுவனத்தினரால் கட்டடம் அமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ய)

## கந்தபுராண விளக்கவுரை

யாழ்ப்பாணம், ஒக்.13
யாழ்ப்பாணம் சின்மயா மிசன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யாவின் கந்தபுராணம் வாராந்த விளக்கவுரை இன்று நடைபெறும்.
பிரதி வெள்ளிக்கிழமை தோறும் மாலை 6.30 மணிமுதல் 7.30 மணி வரை, பருத் தித்துறை வீதி, ஞானவேல் ஆச்சிரமத்தில் நிகழ்வு இடம்பெற்று வருகின்றது. (ய)

## பொது இடத்தில் இடையூறு; 160 மணித்தியாளங்களுக்கு சமூகப் பணி

சாவகச்சேரி ஒக். 13
பொது இடத்தில் போதையில் பொது மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் செயற்பட்ட நபருக்கு 160 மணி நேர சமூகப் பணியும், 180 மில்லிலீற்றர் கசிப்பு வைத்திருந்த நபருக்கு 80 மணி நேர சமூகப் பணியும் மேற்கொள்ளுமாறு சாவகச்சேரி நீதிமன்று உத்தரவிட்டது.
குறித்த இருவருக்கும் எதிராகப் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்தனர். நீதிமன்றில் வழக்கு விசாரணைக்கு வந்தபோது இருவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டனர். அதனையடுத்து இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டது. (4-9)

## தென்மராட்சியில் மேலும் 25 பயனாளிகளுக்கு வீடுகள்

சாவகச்சேரி, ஒக்.13
தென்மராட்சிப் பிரதேசத்தில் மேலும் 25 பயனாளிகளுக்கு வீடுகள் வழங்கப்படவுள்ளன. மீள்குடியமர்வு மற்றும் புனர்வாழ்வு அமைச்சினால் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கே வீடுகள் வழங்கப்படும்.
காணாமல் ஆக்கப்பட்டோர், மறுவாழ்வு பெற்று சமூகத்தில் இணைக்கப்பட்டோர், போரில் உயிரிழப்புகளைச் சந்தித்தவர்கள், கணவனை இழந்த மற்றும் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்டவர்கள் மாற்றுத் திறனாளிகள் மற்றும் பெற்றோரை இழந்த பிள்ளைகளைக் கொண்ட குடும்பங்களுக்கே வீடுகள் வழங்ப்படவுள்ளன. தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்கள் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
இந்த வருடத்தில் பிரதேசத்தைச் சேர்ந்த 195 பயனாளிகள் வீட்டுதிட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டனர்.
இவர்களுக்கான வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்தநிலையில் மேலும் 25 வீடுகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பி டத்தக்கது. (ய-9)

## நன்றி ஆராதனை

யாழ்ப்பாணம், ஒக்.13
யாழ்ப்பாணம் சியோன் தேவாலய மேற்பார்வைப் போதகர் ஜொசாயா ஷமீந்திரநாத் பிலிப் 45 வருடகால போதகர்ப் பணியை நிறைவு செய்கின்றார். இதனையிட்டு ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நன்றி ஐக்கிய ஆராதனை இடம் பெறும்.
ஆராதனையில் 35 கிளைச் சபைகளும் இணைந்து பங்குபெறும்.
இதில் அனைவரையும் கலந்துகொண்டு தேவனை மகிமைப்படுத்துமாறு தேவாலய தலைமைப் போதகர் வண.ஜோஹணன் டேவிஸ்பிலிப் வேண்டுகின்றார்.(ய)

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 60 | 100 | 60 | 80 |
| கத்தரி | 120 | 120 | 100 | 100 | 100 |
| மரவள்ளி | 80 | 80 | 60 | 70 | 60 |
| பயிற்றை | 90 | 80 | 100 | 150 | 100 |
| பாகல் | 140 | 300 | 200 | 300 | 300 |
| க.கிழங்கு | 90 | 100 | 80 | 80 | 100 |
| பெ.வெங்காயம் | 90 | 100 | 110 | 140 | 140 |
| சி.வெங்காயம் | 240 | 250 | 200 | 200 | 300 |
| பூசணி | 40 | 40 | 60 | 40 | 40 |
| தக்காளி | 120 | 140 | 200 | 200 | 180 |
| வாழைக்காய் | 80 | 80 | 90 | 100 | 80 |
| கீரை | 40 | 40 | 40 | 30 | 15 |
| பொன்னாங்கானி | 40 | 40 | 40 | 30 | 30 |
| ப.மிளகாய் | 350 | 280 | 400 | 350 | 400 |
| புடோல் | 80 | 80 | 100 | 100 | 120 |
| கோவா | 140 | 120 | 120 | 140 | 140 |
| வெண்டி | 80 | 80 | 100 | 100 | 120 |
| போஞ்சி | 200 | 180 | 120 | 200 | 160 |
| லீக்ஸ் | 180 | 140 | 200 | 200 | 200 |
| தேங்காய் | 75 | 75 | 80 | 80 | 90 |
| உ.கிழங்கு | 90 | 120 | 110 | 100 | 110 |
| தேசிக்காய் | 300 | 100 | 280 | 250 | 250 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 25 | 15 |
| கறிமிளகாய் | 200 | 140 | 280 | 280 | 240 |
| கரட் | 120 | 140 | 130 | 100 | 120 |
| முருங்கைக்காய் | 140 | 150 | 200 | 300 | 120 |

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 1000 | 1000 |
| நண்டு | 400 | 400 | 600 | 300 |
| கணவாய் | 800 | 600 | 900 | 1000 |
| பாரை | 500 | 500 | 600 | 600 |
| சுறா | 400 | 700 | 1000 | – |
| சீலா | 400 | 400 | 500 | 400 |
| விளை | 500 | 400 | 450 | 600 |
| முரல் | 400 | 350 | 400 | 400 |
| கும்பிளா | 300 | 300 | 400 | 400 |
| கிளாக்கன் | 800 | – | 300 | – |
| ஓரா | 350 | 300 | 450 | 300 |
| திரளி | 250 | 200 | 300 | 200 |
| நகரை | 250 | 150 | 400 | 200 |
| சூடை | 100 | 100 | 200 | 200 |
| ஒட்டி | 200 | 200 | 300 | 250 |
| திருக்கை | 300 | 200 | 400 | 400 |
| மதனம் | 200 | 150 | 300 | 500 |
| கொய் | 150 | 70 | 80 | 100 |
| பாலை | 150 | 200 | 500 | 350 |
| வாளை | 150 | 200 | 400 | 300 |

# நியாயமான விலைக்கு ஆடைகளை விற்கவும்

## யாழ். வணிகர் கழகம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.13
தீபாவளிப் பண்டிகை நெருங்கிவருகின்றது. வர்த்தக நிலையங்களில் மக்கள் முண்டியடித்துக்கொண்டுஆடைகளைக் கொள்வனவு செய்து வருகின்றனர். விலைகள் இடத்துக்கிடம் மாறுபட்டுக் காணப்படுகின்றன.
சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வர்த்தகர்களும் இலாபமீட்ட முனைகின்றனர்.
எனினும், அனைத்துத் தரப்பினரும் ஆடைகளைக் கொள்வனவு செய்யும் வகையில் நியாயமான விலை நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படவேண்டும் என யாழ்ப்பாணம் வணிகர் கழகம் அனைத்துவர்த்தகர்களையும்அறிவுறுத்தியுள்ளது.
இதுதொடர்பாக வணிகர் கழகம் நேற்று விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:
புடைவை நிலைய உரிமையாளர்கள் தனியே இலாபமீட்டுவதை மாத்திரம் குறிக்கோளாகக் கொண்டு செயற்படக் கூடாது. பொதுமக்களின் நலனிலும் அக்கறை காண்பிக்கவேண்டும்.
பண்டிகைக்கால விற்பனையின்போது சாதாரண மக்களும் தீபாவளியைக் கொண்டாடுவதற்கு ஏற்றவகையில் உடுபுடைவைகளை விற்பனை செய்ய வேண்டும்.
மாநகரசபையால் அனுமதிக்கப்பட்ட இடங்களில் ஆடைகளைக் காட்சிப்படுத்த வேண்டும். தமது வர்த்தக நிலையங்களுக்கு முன்பாகவும் காட்சிப்படுத்தலாம். மக்கள் அலைச்சல் இன்றி இலகுவாக ஆண்டகளைத் தெரிவுசெய்யும் வகையில் அவற்றைக் காட்சிப்படுத்த வேண்டும்.
ஆடைகள் அனைவருக்கும் நியாய விலைகளில் கிடைப்பதை வர்த்தகர்கள் உறுதிசெய்யவேண்டும். உரிய நடைமுறைகளைக் கடைப்பிடித்து அனைத்து மக்களும்தீபாவளிப்பண்டிகையை சிறப்பாகக் கொண்டாட அனைத்து வர்த்தகர்களும் உதவவேண்டும் - என குறிப்பிடப்பட்டுள்ளது. (ய-ரி)

## கொட்டடியில் நிர்வாகத்தெரிவு

யாழ்ப்பாணம், ஒக்.13
கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கான புதிய நிர்வாகத் தெரிவுக் கூட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறும்.
தலைவர் நா.தனேந்திரன் தலைமையில் நிலையக் கட்டடத்தில் கூட்டம் நடைபெறும். கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம அலுவலர்கள் கலந்துகொள்வர். ஜே/83 பிரிவில் வசிக்கும் அனைத்து ஆண்களும் இதில் கலந்துகொள்ளுமாறும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ய-ரி)

## சட்டவிரோதமாக மணல் ஏற்றியவருக்கு விளக்கமறியல்


தென்மராட்சி ஒக். 13
சட்டவிரோதமாக மணல் எற்றிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட கெற்பேலியைச் சேர்ந்த நபரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்று உத்தரவிட்டது.
கொடிகாமம் பொலிஸார் குறித்த நபரைக் கைது செய்து அனுமதிப் பத்திர மின்றி வாகனத்தில் மணல் ஏற்றி வந்தார் என்று குற்றஞ்சாட்டி வழக்குத் தொடர்ந்தனர். அவரை எதிர்வரும் 25 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (4-9)

# சொந்தக் கடற்பரப்பில் தமிழ் மீனவர்களுக்கு கடும் சவால்

## மாகாணசபை உறுப்பினர் ரவிகரன்



முல்லைத்தீவு, ஒக்.13
வடக்கு மாகாண தமிழ் மீனவர்கள் தமக்குச் சொந்தமான கடற்பரப்புகளில் மீன்பிடிப்பதில் பலத்த சவால்களை எதிர்கொள்கிறார்கள் என வடக்கு மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.
இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
எமது தமிழ் மீனவர்களின் தொழில் நிலையில் 2009ஆம் ஆண்டுக்குப் பின்பு ஒரு விடுதலையற்ற நிலையே காணப்படுகின்றது.
அண்மையில் காரைநகர்ப் பகுதியில் மீனவர்கள் மீது கடற்படையின் அதிவேக கண்காணிப்புப் படகு மோதியது. மீனவர் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் படுகாயம் அடைந்தார்.
புதுமாத்தளன் பகுதியில் படகுமீது தென்னிலங்கையைச் சேர்ந்த மீனவர்கள் படகால் மோதியிருக்கிறார்கள். தமிழ் மீனவர்கள் கடலில் குதித்ததால் உயிர்பிழைத்துள்ளனர். இது போன்ற செயற்பாடுகள் கண்டனத்துக்குரியவை.
முள்ளிவாய்க்கால் பகுதியில் மீனவர்கள் தொன்றுதொட்டு கடற்றொழில் செய்துவந்தனர். இதன் நீண்ட கடற்பரப்புகளையும், ஒருபகுதி இறங்குதுறையையும் கடற்படையினர் கையகப்படுத்தி வைத்திருக்கின்றனர்.
கொக்கிளாய் பகுதியில் ஏற்கனவே எமது தமிழ் மீனவர்களுடைய படகு, வலை முதலான பொருள்கள் எரிக்கப்பட்டுள்ளன. கொக்கிளாய் மீனவர்களுக்கு இறங்குதுறை இல்லாத நிலையும் இன்றுவரை தொடர்கிறது.
இவ்வாறாக எமது வடக்கு மீனவர்களுக்கு எதிரான செயற்பாடுகள் அண்மைக்காலமாக வலுப்பெற்று வருகின்றன. தென்னிலங்கை மீனவர்களைக் குடியிருத்தி, எமது தொழில்நிலைக்கு வேட்டு வைத்திருக்கிறார்கள்.
இவ்வாறாக எமது தமிழ் மீனவர்கள் சொந்தக் கடற்பரப்பில், தொன்றுதொட்டு தொழில் செய்த இடங்களில் தற்போது உரித்தற்று அச்சத்துடன் தொழில் செய்வது கவலைதரும் விடயமாகும் - என்று தெரிவித்தார். (ய)



## இது புதுசு

ஆண்களுக்கான ரீசேட் வகைகள் சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை ஆயிரத்து 400 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

## புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள்

**நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி**
ம.புவிஷன் - 163, ந.காம்ஷிகா -155

**கரணவாய் மணியக்காரன் தோட்டம் அ.த.க பாடசாலை**
க.சுபஸ்தி-179, சி.அம்ஷானி-179, க.மகிழினி-178, கு.ஜெதுசன்-173, பி.நிர்விகா-168, ந. சுஜீந்தன் -166, சி.அக்ஷயன்-165, பி.ஷார்மி-161, கு.எழில்வாணி-160, உ.சகானா-160, பு.றட்சிகன்-159, நி.பவநிதன்-156, க.துவாரகன்-156

**வட்டு மேற்கு அ.மி.த.க பாடசாலை**
ர.ரனுகன் - 171



## மின்கம்பம் சரிந்ததால் மக்கள் பெரும் சிரமம்

வவுனியா, ஒக்.13
புளியங்குளம், ஏ9 வீதியில் உள்ள முத்துமாரி அம்மன் ஆலயத்துக்கு முன்னுள்ள மின்சாரக் கம்பம் ஒன்று நேற்று உடைந்து வீழ்ந்தது. மின்னல் தாக்கியமையாலேயே தூண் சரிந்தது என்று தெரிவிக்கப்படுகின்றது.
மின்சாரக் கம்பிகள் அறுந்து வீழ்ந்திருந்ததாலும், மழை பெய்து கொண்டிருந்ததாலும் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் கொண்டனர்.
புளியங்குளம் பொலிஸார் அந்தப் பகுதியில் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டனர். (ற)

## பாடசாலைக்கு எதிராக அவதூறு ஆசிரியர்கள் பணிப்புறக்கணிப்பு

வவுனியா, ஒக்.13
வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலயம் தொடர்பில் முகநூலில் அவதூறான தகவல்கள் பரப்பப்படுகின்றன என்று தெரிவித்து பாடசாலை ஆசிரியர்கள் நேற்று பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.
பாடசாலை தொடர்பாகவும், ஆசிரியர்கள் தொடர்பாகவும் முகநூலில் அவதூறான தகவல்கள் பரப்பப்படுகின்றன என்று தெரிவித்து ஆசிரியர்கள் பணிப் புறக்கணிப்பை மேற்கொண்டனர். பாடசாலை அதிபர் முகநூல் அவதூறு தொடர்பாக நெளுக்குளம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினார். பாடசாலைக்குப் பொலிஸார் வந்ததுடன் பாடசாலை நலன் விரும்பிகள், பெற்றோர், இணைந்து ஆசிரியர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.
பாடசாலைக்குச் சென்ற வலயக் கல்விப் பணிப்பாளர் மு. ராதாகிருஸ்ணனும் ஆசிரியர்களுடன் கலந்துரையாடினார்.
அண்மைக்காலமாக பாடசாலை தொடர்பில் முகநூலில் அவதூறான தகவல்கள் பரப்பப்படுகின்றன. அது தொடர்பாக தீர்க்கமான முடிவு எடுக்கப்பட வேண்டும் என்று ஆசிரியர்கள் வலியுறுத்தினர்.
வவுனியா பொலிஸ் நிலைய உதவி பொலிஸ் பொறுப்பதிகாரி, அதிபர், வலயக்கல்விப்பணிப்பாளர் மற்றும் பாடசாலை நலன்விரும்பிகள், பெற்றோருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார். அதையடுத்துப் பணிப் புறக்கணிப்புக் கைவிடப்பட்டது. பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாவிடில் மீண்டும் பணிப் புறக்கணிப்பு நடத்தப்படும் என்று ஆசிரியர்கள் தெரிவித்தனர். "பாடசாலை அண்மைக்காலத்தில் வளர்ச்சி அடைந்து வருகின்றது. கல்வி மட்டத்திலும் விளையாட்டுகளிலும் பிரகாசிப்பதை பொறுத்துக்கொள்ள முடியாத சிலர் இவ்வாறு அவதூறான தகவல்களைப் பரப்பி வருகின்றனர். அதற்கு உரிய நடவடிக்கையை பொலிஸார் எடுப்பார்கள் என நாம் நம்புகின்றோம்." என்று பாடசாலை அதிபர் தெரிவித்தார். (ற-402)

## லகிருவுக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, ஒக்.13
நீதிமன்ற உத்தரவை மீறிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட அனைத்துப் பல்கலைக் கழக மாணவர்கள் குழுவின் ஒருங்கிணைப்பாளர் லகிரு வீரசேகர, மற்றும் பிக்குகள் மாணவ குழுவின் ஒருங்கிணைப்பாளர் டெம்பிட்டியே சுத்தானந்த தேரர் ஆகியோரின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. சைட்டம் மருத்துவக் கல்லூரிக்கு எதிராக கடந்த 10 ஆம் திகதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமைக்காக குறித்த இருவரும் கைது செய்யப்பட்டனர். விளக்கமறியலில் வைக்கப்பட்ட அவர்கள் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட னர். அவர்களை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (ற-ரி2)

## நாடு திரும்பினார் ரணில்

கொழும்பு, ஒக்.13
பின்லாந்துக்கு உத்தியோக பூர்வ பயணம் மேற்கொண்டிருந்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடு திரும்பினார்.
இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதாரத் தொடர்புகளை விரிவாக்கும் நோக்குடன் தலைமை அமைச்சரின் இந்தப் பயணம் அமைந்தது. தொழில் நிறுவனங்களுடன் சந்திப்பை மேற்கொண்ட அவர் நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார். (ற)

# உயிரை விடவும் நிலமே மேலானது

### ஐ.நா. விசேட பிரதிநிதியிடம் கேப்பாபிலவு மக்கள் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஒக்.12
எமது உயிரை விட எமது சொந்த நிலமே எமக்கு வேண்டும். அந்த நிலத்தில் வாழும் உரிமையே எமக்கு மேலானது.
இவ்வாறு உறுதிபடத் தெரிவித்தனர் கடற்படை வசமுள்ள காணிகளை விடுவிக்கக் கோரி தொடர் போராட்டம் நடத்திவரும் கேப்பாபிலவு மக்கள்.
ஐக்கிய நாடுகள் சபையின் விசேட பிரதிநிதி பப்லோ டி கிரீப் தலைமையிலான குழுவினர் நேற்று கேப்பாப்பிலவில் போராட்டம் நடத்திவரும் மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடினர். அதன்போதே கேப்பாபிலவு மக்கள் இவ்வாறு தெரிவித்தனர்.
"219 நாள்களாக கொட்டும் மழையிலும், சுட்டெரிக்கும் வெயிலிலும் போராட்டம் நடத்துகின்றோம். அரசு பல வாக்குறுதிகளைத் தந்து அவற்றை நிறைவேற்றாது ஏமாற்றுகின்றது. 9 ஆண்டுகளால் அகதி முகாமில் வாழ்கின்றோம். எமக்கு எமது சொந்த நிலங்கள் வேண்டும். அது கிடைக்கும் வரை இப்படியே போராடிக் கொண்டிருப்போம். உயிரை விட எமக்கு உரிமையே மேலானது. எமது கஷ்டங்களை இன்று நேரில் பார்க்கிறீர்கள். உங்களுக்குப் புரியும் என்று நினைக்கின்றோம்." என்று போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் தெரிவித்தனர்.
சட்டரீதியாக உங்கள் நிலங்களைப் பெறுவதற்கு நீங்கள் ஏதாவது முயற்சி எடுத்தீர்களா என்று ஐ.நா.விசேட பிரதிநிதி கேள்வி எழுப்பினார்.
"ஆம். நாம் 2012ஆம் ஆண்டு 5 பேர் இணைந்து முல்லைத்தீவு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தோம். அந்தப் பகுதியில் எமது காணிகளுக்குப் பதிலாக வேறு காணிகள் தரப்படும் என்றே இராணுவத்தினர் தெரிவித்தனர். நாம் அதற்குச் சம்மதிக்கவில்லை." என்று போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் பதிலளித்தனர்.
காணி விடுவிப்புத் தொடர்பில் அரச தரப்புடன் கலந்துரையாடினீர்களா என்று ஐ.நா. பிரதிநிதிகள் கேள்வியெழுப்பினர்.
"காணி விடுவிப்புத் தொடர்பில் நாம் மீள்குடியேற்ற அமைச்சுக்குச் சென்று கலந்துரையாடினோம். எமது சார்பில் மக்கள் பிரதிநிதிகளும அரசுடன் பல முறை பேச்சு நடத்தினர். எனினும் எமது காணிகள் இதுவரை கையளிக்கப்படவில்லை." என்று மக்கள் தெரிவித்தனர். (ற)

# கிரவல் பெறுவதில் தடங்கல் வீதிச் சீரமைப்புகள் தாமதம்

### வவு. பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டு

வவுனியா, ஒக்.13
வவுனியாவில் உள்ளூர் வீதிச் சீரமைப்புக்கான கிரவல் மண்ணைப் பெறுவதில் தடங்கல்கள் உள்ளன என்று பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்தார்.
வவுனியா பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று இணைத் தலைவர் சிவசக்தி ஆனந்தன் தலைமையில் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.
வவுனியாவில் கிராமிய வீதிகள் பல திருத்தப்படா துள்ளன. அதனால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்று கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது. அதற்குப் பதிலளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
சீரமைப்புப் பணிகளுக்கான கிரவலைப் பெற்றுக் கொள்வதில் எதிர்கொள்ளும் நெருக்கடி தாமதத்துக்கு முக்கிய காரணம் என்று அவர் குறிப்பிட்டார்.
மகாறம்பைக்குளம் போன்ற பகுதிகளில் கடந்த காலங்களில் பிரதான மின் இணைப்பு வயர்களை கொண்டு சென்ற மின்சார சபையினர் வீட்டு உரிமையாளர்களின் சம்மதம் இன்றி குடியிருப்புக்களின் நடுவே மின் கம்பிகளை இழுத்தனர். இது தொடர்பில் பலமுறை சுட்டிக்காட்டிய பின்னர் தற்போது நட்ட ஈடு வழங்க சம்மதித்துள்ளனர். இது போன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நடக்கக் கூடாது என்றும் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.
பல பிரதேசங்களில் நிலவும் யானை அச்சுறுத்தல் தொடர்பில் சுட்டிக் காட்டப்பட்டபோதும் இதுவரை ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ற-101)

## சிறுமியைக் கொடுமைப்படுத்திய நபருக்கு ஒத்திவைத்த சிறை

யாழ்ப்பாணம், ஒக்.13
16 வயதுக்குட்பட்ட சிறுமியை கடத்திச் சென்று துர்நடத்தைக்குட்படுத்திய நபருக்கு 5 ஆண்டுகள் ஒத்திவைக்கப்பட்ட 2 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்து யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
"பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 50 ஆயிரம் ரூபா இழப்பீடு வழங்க வேண்டும். அதனை வழங்கத் தவறின் ஒரு ஆண்டு கடூழியச் சிறைத் தண்டனையை அனுபவிக்க நேரிடும். 4 குற்றச்சாட்டுக்களுக்குமாக 8 ஆயிரம் ரூபா தண்டம் செலுத்த வேண்டும். அதைச் செலுத்தத் தவறின் 4 மாதங்கள் கடூழியச் சிறைத் தண்டனையை அனுபவிப்பீர்" என்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தீர்ப்பளித்தார்.
வட்டுக்கோட்டையில் 2013ஆம் ஆண்டு 16 வயதுக்குட்பட்ட சிறுமியை அவரது பாதுகாவலரின் (பெற்றோர்) பொறுப்பிலிருந்து கவர்ந்து கடத்திச் சென்று துர்நடத்தைக்கு உட்படுத்தினார் என்று அதே இடத்தைச் சேர்ந்தவருக்கு எதிராக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரால் 4 குற்றச்சாட்டுக்கள் அடங்கிய குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.
இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. குற்றப் பத்திரிகை எதிரிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டது.
"எதிரி தனது குற்றத்தை ஏற்றுக்கொள்கின்றார். அது தொடர்பில் அவர் தற்போது மனம் வருந்துகின்றார். அவருக்கு குறைந்தபட்ச தண்டனையை வழங்கி இந்த மன்று விடுவிக்கவேண்டும்" என்று எதிரி சார்பில் முன்னிலையான சட்டத்தரணி மன்றில் விண்ணப்பம் செய்தார்.
அவரது விண்ணப்பத்தை ஆராய்ந்த மேல் நீதிமன்ற நீதிபதி, தண்டனைத் தீர்ப்பை அறிவித்தார். பாதிக்கப்பட்ட சிறுமிக்கு இழப்பீடு வழங்குவதற்கும் தண்டப் பணம் செலுத்துவதற்குமாக எதிர்வரும் நவம்பர் 27ஆம் திகதிவரை கால நீடிப்பு வழங்கி வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ற)

## போரால் பாதிக்கப்பட்டோருக்கு ஐரோப்பிய ஒன்றியம் உதவும்

### அதன் நிகழ்ச்சித்திட்டப் பணிப்பாளர் தெரிவிப்பு

வவுனியா, ஒக். 13
போரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையைக் கட்டியெழுப்ப ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவி பெரும் பங்களிப்பைச் செய்து வருகிறது.
இவ்வாறு ஐரோப்பிய ஒன்றியத்தின் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் முகமட் முசேல் தெரிவித்தார்.
பங்காண்மைகளின் கொண்டாட்டம் என்ற கண்காட்சி நேற்று ஐரோப்பிய ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வவுனியாவில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
எந்தவொரு சமூகபொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சிகளையும் எடுத்துக் கொண்டாலும் உடனடிப் பெறுபேறுகளை வெளிப்படுத்த சில காலங்கள் எடுக்கும். போரால் பாதிக்கப்பட்ட மற்றும் பாதிப்புக்குள்ளான மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பும் முனைப்புடன் ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவியுடன் பல்வேறு வாழ்வாதாரத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வெற்றி கண்டுள்ளோம்.
அதன் ஒரு அங்கமாக இந்தக் கண்காட்சி அமைந்துள்ளது மக்களின் வாழ்வாதாரம் போரால் பாதிக்கப்பட்ட சகல இடங்களிலும் கட்டியெழுப்பும் தேவையுள்ளது என்ற உண்மையை புரிந்து எல்லோரும் செயற்பட வேண்டும் - என்றார்.
இந்த நிகழ்வில் வவுனியா மாவட்டச் செயலகத் திட்டமிடல் பணிப்பாளர் கிருபாசுதன் மற்றும் பணிப்பாளர்கள் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதி கர்சினி கலன்கொட உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ற-402)



# 200க்கு மேற்பட்ட பெண்கள் மயக்கமுற்றதால் பதற்றம்

கண்டி, ஒக்.13

தனியார் ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் பணியாற்றிய 200க்கும் மேற்பட்ட பெண்கள் நேற்று மயக்கமுற்ற நிலையில் கண்டி போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

கண்டி, ஹகரமவில் உள்ள தனியார் தொழிற்சாலை ஒன்றிலேயே இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

ஆடைத் தொழிற்சாலையில் வழங்கப்பட்ட காலை உணவு ஒவ்வாமையாலேயே அவர்கள் மயக்கமுற்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, கடந்த ஒக்ரோபர் 4 ஆம் திகதி நுவரெலியா மாவட்டத்தின் ஹட்டன் நோர்வூட் நிவ்வெளி பகுதியிலுள்ள தனியாருக்கு சொந்தமான ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றிய பெண்கள் 155 பேர் தொழிற்சாலையில் வெளியான ஒருவித வாயு காரணமாக மயக்கமுற்றனர். (ற)

# சாட்சிகளுக்காக வேறு நீதிமன்றுக்கு வழக்கை மாற்றுவது சட்டப்படி தவறு

## வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 13

சாட்சிகளுக்காக வழக்கை இன்னொரு நீதி மன்றத்துக்கு மாற்றுவது சட்டப்படி கண்டனத்துக்குரியது. ஒன்றரை இலட்சம் படையினர் வடக்கு மாகாணத்தில் குடிகொண்டிருக்கும் போது சாட்சிகள் பயந்துவரத் தயங்குகின்றார்கள் என்பது நொண்டிச்சாட்டாகவே தென்படுகிறது. சாட்சிகளைப் பொலிஸாரே மன்றுக்குக் கொண்டுவந்து திரும்பவும் கொண்டு போய் அவர்களது வதிவிடங்களில் சேர்ப்பிக்க முடியும்.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். ஊடகவியலாளர்களின் கேள்விக்கான முதலமைச்சரின் பதில் என்ற தலைப்புடன் அவர் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

2009 இல் இருவர் கைது செய்யப்பட்டு 2012 வரையில் நடவடிக்கை ஏதும் எடுக்காமல் தொடர்ந்து மறியலில் வைத்திருக்கப்பட்டார்கள். மூன்றாம் நபரைக் கைது செய்த பின் 2012இல் குற்றச்சாட்டுப் பத்திரம் கையளிக்கப்பட்டுள்ளது. ஐம்பது தடவைகளுக்கு மேல் வழக்குத் தவணை கொடுக்கப்பட்டு ஈற்றில் மூன்று நாள்களுக்கு தொடர் விளக்கம் வவுனியா மேல் நீதிமன்றத்தில் நியமிக்கப்பட்டு வழக்கு தொடங்கவிருக்கும் நேரத்தில் அநுராதபுரத்துக்கு மாற்றுமாறு சட்டத்துறை தலைமை அதிபதி ஆணை வழங்கியுள்ளார். இது ஒரு பொறுப்பற்ற செயல். வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி வேண்டாவெறுப்பாகத்தான் உத்தியோகபூர்வ கட்டாயத்தின் நிமித்தம் வழக்கை அநுராதபுரத்துக்கு மாற்றினார். காரணங்கள் கூறப்படாவிட்டாலும் சாட்சிகள் பயமுறுத்தப்பட்டதாலேயே இவ்வாறு மாற்றியதாகக் கூறப்படுகின்றது.

எனக்குக் கிடைத்த தகவல்களின்படி, முன்னரே கைது செய்யப்பட்டிருந்த சிலரை போர் முடிவடையும் தறுவாயில் விடுதலைப்புலிகள் கொன்றார்கள் என்றும் அதனுடன் இந்த குறிப்பிட்ட கைதிகள் தொடர்புபட்டிருந்தார்கள் என்பதும் அவர்கள் மீதான குற்றச்சாட்டு களுக்கு அடிப்படை என்று தெரிய வந்துள்ளது. கைதில் இருக்கும் வேறு சில கைதிகள் அரச சாட்சிகளாக மாறி குறித்த கைதிகளுக்கு எதிராகச் சாட்சியம் கூறினால் விடுதலை கிடைக்கும் என்று அவர்களுக்குக் கூறப்பட்டதாகத் தெரிகின்றது. அப்படியெனில் அரச சாட்சிகளாகமாறிய இந்த மூன்று தமிழ்ச் சாட்சிகள் பற்றியே அரசுக்கு கரிசனை போலத் தெரிகிறது. இங்கு அரசியல் கலந்திருப்பதை நான் காண்கின்றேன். நடந்ததோ இல்லையோ எப்படியாவது விடுதலைப் புலிகள் கடைசிக் கட்டத்தில் தம்வசம் இருந்த சிறைக்கைதிகளைச் சுட்டுக்கொன்றார்கள் என்பது நீதிமன்றத்தில் நிரூபணமாகிவிட்டால் படையினர் செய்த அட்டூழியங்களுக்குச் சமனாகப் புலிகளும் போர்க் குற்றங்களில் ஈடுபட்டிருந்தனர் என்று பன்னாட்டு அரங்குகளில் இலங்கை அரசு கூறமுடியும். இதனால்தான் வேறு கைதிகளையே அரச சாட்சிகளாக்கி தமக்கு வேண்டிய ஒரு முடிவை குறித்த வழக்கில் கொண்டுவர அரசு முயற்சிப்பது தெரிகிறது. இவை என்னுடைய ஊகமே தவிர முழுமையான தரவுகள் எனக்கு இன்னமுந்தரப்படவில்லை.

சாட்சிகள் வவுனியா வரப் பயப்படுகின்றார்கள் என்றால் யார் யார் என்னமாதிரியான பயமுறுத்தல் காரணமாக அங்கு வரப் பயப்படுகின்றார்கள் என்று சட்டத்துறை தலைமையதிபதிக்கு சத்தியக் கடதாசிகள் கையளித்துள்ளார்களா என்பதை அவர் வெளிப்படுத்த வேண்டும்.

குறித்த தமிழ் அரச சாட்சிகள் தமிழ்ப் பிரதேச நீதிமன்றத்தில் தமிழ் நீதிபதி முன்னிலையில் சுதந்திரமாக சாட்சியமளிக்க முடியும். அவ்வாறு சாட்சியமளிக்கும்போது தம்மிடம் இருந்து எவ்வாறு சாட்சியங்களுக்கான விவரங்களை அரச தரப்பு பெற்றுக்கொண்டது என்பதை அவர்கள் வெளிப்படுத்தி விடுவார்களோ என்ற பயமே வழக்கை அநுராதபுரத்துக்கு மாற்றியமைக்கான காரணம் என நான் ஊகிக்கிறேன். உண்மை வெளிவந்தால் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி வழக்கைத் தூக்கி எறியத் தயங்க மாட்டார் என்பது சட்டத்துறைத் தலைமை அதிபதிக்குத் தெரியும்.

எது எவ்வாறு இருப்பினும் இவ்வாறான மாற்றுதல் கைதிகளின் மனித, சட்ட உரிமைகளைப் பாதிக்கின்றன. சட்டத்துறைத் தலைமையதிபதி புற நிலை வைத்து இவ்வாறான வழக்குகளை நோக்கவேண்டுமேயொழிய அக நிலையில் இருந்து நோக்குவது கண்டிக்கத்தக்கது - என்றுள்ளது. (4)

# வனரோபா மாதத்தை முன்னிட்டு மரநடுகை

வவுனியா, ஒக்.13

வனரோபா மாதத்தை முன்னிட்டு வனவளத் திணைக்களத்தால் பயன் தரு மரக்கன்றுகள் நடப்பட்டன.

நெடுங்கேணி வனவளத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பயன்தரு மரக்கன்றுகளான வேம்பு, சம்மளை, விளாத்தி, இலுப்பை, கருங்காலி போன்ற மரக்கன்றுகள் நடப்பட்டன. இந்த நிகழ்வு வனவளத் திணைக்கள அதிகாரி து. கௌதன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

கனகராயன்குளம் பொற்குளம் காட்டுபகுதியில் சட்டவிரோத மண் அகழ்வு நடைபெற்ற இடத்தைப் பாதுகாக்கும் நோக்குடனேயே இந்த மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

மரக் கன்றை வவுனியா மாவட்ட வனவளத் திணைக்களத்தின் பொறுப்பதிகாரி ர.ரவிராஜ் வைபவ ரீதியாக நட்டு திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்

நிகழ்வில் வனவள உத்தியோகத்தர்கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற)

# வவுனியாப் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை

## ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் தீர்மானம்

வவுனியா, ஒக்.13

பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்பில் வவுனியா மாவட்டத்தின் பின்தங்கிய கிராமங்களைச் சேர்ந்த வேல்யற்ற பட்டதாரிகளுக்கு முன்னுரிமையளிக்க வேண்டும் என்று வவுனியா பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

வவுனியா பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று பிரதேச செயலகத்தில் இணைத்தலைவர் சிவசக்தி ஆனந்தன் தலைமையில் நடைபெற்றது.

அதில் வவுனியாவில் அதிக பட்டதாரிகள் உள்ளனர். வேலை வாய்ப்பில் அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். பின்தங்கிய கிராம வேலையற்ற பட்டதாரிகளுக்கு முன்னுரிமையளிக்க வேண்டும். என்ற தீர்மானத்தை செல்வம் அடைக்கலநாதன் முன்மொழிந்தார்.

அந்தத் தீர்மானத்தில் பங்கு கொண்டு உரையாற்றிய சிவசக்தி ஆனந்தன் வேலையற்ற பட்டதாரிகள் தொடர்பில் தெரிவித்தும் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் எதனையும் நிறைவேற்றவில்லை எனத் தெரிவித்தார்.

அந்தச் சந்தர்ப்பத்தில் குறுக்கிட்ட சக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இது அரசியல் மேடை கிடையாது. இதில் அரசியல் பேச முடியாது. அதேநேரம் இந்தப் பிரச்சினையில் அனைவருக்கும் பங்குள்ளது என்று தெரிவித்து அடக்கி வைத்தார். (ற-101)

# பொலிஸ் பொறுப்பதிகாரி கைது

மாத்தளை, ஒக்.13

மாத்தளை ரத்தொட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நேற்றுக் காலை பொலிஸ் சிறப்பு விசாரணைப் பிரிவால் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. பெண் கிராம உத்தியோகத்தர் ஒருவருக்கு பாலியல் ரீதியாக துன்புறுத்தல்களை மேற்கொண்ட சம்பவம் தொடர்பில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் இவர் கைது செய்யப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. இவர் கண்டி , உடதும்பர பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியாக பணியாற்றிய காலப்பகுதியில் இந்தச் செயலில் ஈடுபட்டார் என்று கூறப்படுகின்றது. (ற-ரி2)

# விபத்தில் இருவர் காயம்

தென்மராட்சி, ஒக்.13

சாவகச்சேரி, மட்டுவிலில் நடந்த விபத்து ஒன்றில் இருவர் படுகாயமடைந்தனர். மோட்டார் சைக்கிளும், சைக்கிளும் மோதியே விபத்துக்குள்ளாகின. மட்டுவில் கிழக்கைச் சேர்ந்த ச.சுப்பிரமணியம் (வயது 74), வவுனியா, வெள்ளாங்குளத்தைச் சேர்ந்த சுதாகரன் லக்சன் (வயது21) ஆகியோரே காயமடைந்தனர்.

சுப்பிரமணியம் யாழ்.போதனா மருத்துவனையிலும், லக்சன் சாவகச்சேரி மருத்துவமனையிலும் சேர்க்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-9)

# மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறுபோகம் பெரும் வெற்றி

மட்டக்களப்பு, ஒக்.13

நடப்பாண்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட 49 ஆயிரம் ஏக்கர் சிறுபோக செய்கை பெரும் வெற்றியடைந்துள்ளது என்று மட்டக்களப்பு விவசாயத் திணைக்களத்தின் நெற்செய்கைக்கு பொறுப்பானபாடவிதான உத்தியோகத்தர் சின்னத்தம்பி சந்திரவேல் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கடந்த ஐந்து வருடங்களில் நெல் அறுவடை விவசாயிகளுக்கு பெரும் இலாபத்துடனான விளைச்சல் கிடைத்துள்ளது. போசணைத் திட்டம், நீர்ப்பாசனம் என்பனவே இதற்குக் காரணம்.பெரும்போக நெற் செய்கையையும் உப உணவுப் பயிற்செய்கையும் செய்வதற்கு விவசாயிகள் ஊக்கத்தோடு தயாராக உள்ளனர் - என்றார். (ற)

# புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் 9 பேர் கைது

பொலனறுவை, ஒக்.13

ஹபரணை, பலுகஸ்வெவ காட்டில் புதையல் தோண்டும் நோக்கில் அகழ்வு நடவடிக்கையில் ஈடுபட்ட 9 பேர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஹபரணை பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் இவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்து பெக்கோ வாகனமும், வேறு சில வாகனங்களும் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

ஹபரணை, கந்தளாய், இனாமஹெலுவ ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த நபர்களே கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற)

# நீரில் மூழ்கி இளைஞர் உயிரிழப்பு

திருகோணமலை, ஒக் 13

திருகோணமலை கந்தளாய்ப் பகுதியில் நேற்று ஜமாத் கடமைக்குச் சென்றிருந்த இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. கல்முனைபாண்டிருப்புப் பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞர் ஒருவரே உயிரிழந்துள்ளார் என்று தெரிய வருகின்றது.

இளைஞர்கள் சிலர் குளத்துக்குக் குளிக்க சென்றுள்ளனர். அதன்போது இந்த இளைஞன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என்று கந்தளாய் தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை கந்தளாய் தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி2)

# ஐ.நாவின் நேரடித் தலையீடு அவசியம்

## ஐ.நா. சிறப்பு அறிக்கையாளரிடம் வட-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு கோரிக்கை

கொழும்பு, ஒக். 13

நிலைமாறுகால நீதிப் பொறிமுறையை இலங்கையில் நடைமுறைப்படுத்துவதில் ஐக்கிய நாடுகள் சபையின் நேரடிப் பங்கேற்பு அவசியம். இவ்வாறு இலங்கைக்கு வந்துள்ள ஐ.நா. சிறப்பு அறிக்கையாளரிடம், வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுக் கோரிக்கை விடுத்துள்ளது.

திருகோணமலையிலுள்ள அந்த அமைப்பின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்பிலேயே, சிறப்பு அறிக்கையாளரிடம் மேற்படிக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

தான்தோன்றித்தனமான முறையில் தனக்கு விரும்பிய போது பன்னாட்டுச் சமூகத்தைத்திருப்திப்படுத்துவதற்காக சில விடயங்களை அரசு மேற்கொண்டு வருவதாகவே காண்கிறோம். நிலைமாறுகால நீதிப்பொறிமுறைகள் ஒருங்கிணைந்தமுறையிலும் ஒன்றை ஒன்று பலப்படுத்தும் வகையிலும் நடைமுறைப் படுத்தப்படும் போதே அவை நீண்டகாலத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் உரிமைகளை உத்தரவாதப்படுத்துவதுடன் நிலையான நல்லிணக்கத்துக்கும் இட்டுச்செல்லும். இது சார்ந்து உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்த எமது கொள்கை நிலைப்பாட்டைத் தங்களின் கவனத்துக்குக் கொண்டுவருகிறோம்:

நிலைமாறுகால நீதி அமைச்சகத்தை நிறுவுதல்வேண்டும். இந்தச் சட்டத்தை உருவாக்குவதற்கான ஆலோசனைகளையும் ஒத்துழைப்பையும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் மற்றும் உரிய சிறப்பு நிபுணர்களிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் என்பது இலங்கையில் குற்றமாக்கப்பட வேண்டும்.

மீள நிகழாமையை உறுதிப் படுத்தப்படவேண்டும்.

2010ஆம் ஆண்டின் பின்னர் இலங்கையில் நிலைமாறுகால நீதியை முன்னெடுப்பதில் ஐ.நா. அதிக அக்கறை செலுத்தியதுடன் 2012ஆம் ஆண்டில் இருந்து தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. கடந்த மார்ச் மாதம் இலங்கைக்குக் காலநீடிப்பு வழங்கப்பட்டும் அரசு அதற்கு உரிய முக்கியத்துவம் வழங்கவில்லை. 2019ஆம் ஆண்டு இலங்கை விவகாரமானது ஐ.நா. நிகழ்ச்சி நிரலில் இருந்து ஒதுக்கப்படும் நிலையில் இலங்கை அரசு தமிழ் மக்கள் சார்ந்ததனது பன்னாட்டு மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானக் கடப்பாடுகளை முற்றாகக் கைவிடும் நிலையே ஏற்படும்.

நிலைமாறுகால நீதிப் பொறிமுறைகளை உரியமுறையில் நடைமுறைப்படுத்துவதற்கு ஐ.நாவின்நிபுணத்துவஆலோசனைகள் மற்றும் கண்காணிப்பு என்பதற்கும் அப்பால் நடைமுறைப்படுத்தலில் நேரடிப் பங்கேற்பு என்பதும் மிக அவசியமாகும்.

போர்க்குற்ற விசாரணைகளுக்குக் கலப்பு நீதிமன்றப் பொறிமுறை அவசியமாகும். மேலும் இலங்கையிலுள்ள மனித உரிமைச் செயற்பாட்டாளர்களின் பாதுகாப்பு உறுதிப் படுத்தப்பட வேண்டும் - என்றுள்ளது. (5)

## இனவாதமே மகிந்தவை வீழ்த்தியது: *ராஜித*



கொழும்பு, ஒக். 13

மகிந்த ராஜபக்ச கடந்த அரச தலைவர் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டமைக்கு இனவாதமே காரணம் என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாதுகாப்புச் செயலராக இருந்த தனது சகோதரர் கோத்தபாய ராஜபக்சவையும், சிங்கள பௌத்த அடிப்படைவாத அமைப்புகளையும் மகிந்த ராஜபக்ச கட்டுப்படுத்தத் தவறி விட்டார். சிறுபான்மையினர் அந்நியப்பட்டு, அவருக்கு எதிராகத் தேர்தலில் வாக்களித்தனர்.

மகிந்த ராஜபக்ச ஒரு பருவகால அரசியல்வாதியாக இருந்தாலும், சிங்கள பௌத்த வாக்குகளுடன் மாத்திரம் மூன்றாவது தடவையும் ஆட்சியைப் பிடித்து விடலாம் என்று தவறாக எடைபோட்டிருந்தார். உணர்வுகள் அவரது பலத்தைக் குறைத்து விட்டது. பசில் ராஜபக்ச மாத்திரமே, சிறுபான்மையினரின் வாக்குகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொண்டிருந்தார். கோத்தபாய ராஜபக்சவின் கருத்துக்களையே மகிந்த ராஜபக்ச செவிமடுத்தார் - என்றார். (5)

## தொடருந்துப் பருவகாலச் சீட்டுக்களைப் பேருந்துகளில் பயன்படுத்தலாம்

கொழும்பு, ஒக். 13

தொடருந்துப் போக்குவரத்துக்கான பருவகாலச் சீட்டுக்களை வைத்திருப்பவர்கள் அரச பேருந்து சேவைக்குப் பயன்படுத்தலாம் என்று போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது.

அதிவேக நெடுஞ்சாலைகளிலும் சேவையில் ஈடுபடுத்தப்படும் பேருந்துகளிலும் இந்தப் பருவகாலச் சீட்டுக்கள் செல்லுபடியாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5)

நாமல் கைது:

## மகிந்த உடனடியாக நாடு திரும்புகிறார்

கொழும்பு, ஒக். 13

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச ஜப்பானுக்கான பயணத்தை அவசரமாக நிறைவு செய்து இன்று வெள்ளிக்கிழமை இரவு இலங்கைக்கு வருகின்றார்.

நீதிமன்ற தடை உத்தரவை மீறி ஆரப்பாட்டத்தில் ஈடுபட்டமை மற்றும் பொது சொத்துக்களுக்குச் சேதம் ஏற்படுத்தியமை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச உள்ளிட்ட மகிந்த அணியின் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் கைது செய்யப்பட்டதை அடுத்தே முன்னாள் அரச தலைவர் மகிந்த அவசரமாக நாடு திரும்புகின்றார்.

அம்பாந்தோட்டைப் பொலிஸ் நிலையத்தில் விசாரணைக்காக அழைக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாமல் ராஜபக்ச, பிரசன்ன ரணவீர மற்றும் டி.வி.சானக உள்ளிட்டவர்கள் கைது செய்யப்பட்டனர். ஜப்பானுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த மகிந்த ராஜபக்ச தனது பயணத்தை முடித்துக் கொண்டு இன்று இரவு நாடு திரும்பவுள்ளார். (5)

The Thinnai
Rest Relax Reunite
An All-Suite Boutique Hotel

அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட எமது துலா உணவுச்சாலையில் பல்வேறு தரமான சுவை நிறைந்த சிற்றுண்டி மற்றும் தின்பண்ட வகைகளை குறைந்த விலையில் த திண்ணை ஹோட்டலில் பெற்றுக்கொள்ள முடியும்.

**Bread Selection -** பாண் வகைகள்

| | |
|---|---|
| Rye Bread (300 gram) | - LKR 195 |
| Rossana Bread (300 gram) | - LKR 240 |
| Corn Pepp Bread (275 gram) | - LKR 264 |
| Multigrain Bread (275 gram) | - LKR 180 |
| Garlic French Bread (300 gram) | - LKR 135 |
| Sesame French Bread (300 gram) | - LKR 135 |
| Plain Bread | - LKR 150 |
| Brown Bread | - LKR 175 |

**Short Eats (Non-vegetarian)** சிற்றுண்டி வகைகள் (அசைவம்)

| | |
|---|---|
| Chicken Puff | - LKR 80 |
| Chicken Hot Dog | - LKR 150 |
| Chicken Roll | - LKR 75 |
| Mutton Puff | - LKR 125 |
| Fish Roll | - LKR 75 |
| Fish Patty | - LKR 60 |
| Egg Roll | - LKR 75 |

**Cake by Kilo –** கேக் வகைகள் (கிலோ படி)

| | |
|---|---|
| Black Forest Cake | - LKR 2,500 |
| Opera Cake | - LKR 2,750 |
| Red Velvet Cake | - LKR 3,500 |
| Chocolate Cake (Normal) | - LKR 1,250 |
| Chocolate Cake (with Chocolate Mousse) | - LKR 3,000 |
| Coffee Cake | - LKR 1,500 |
| Caramel Cake | - LKR 1,500 |
| Fruit Cake | - LKR 1,250 |
| Eggless Fruit Cake | - LKR 1,400 |
| Ribbon Cake | - LKR 1,400 |
| Chocolate Swiss Roll | - LKR 1,500 |
| Butter Cake | - LKR 1,250 |
| Banana Cake | - LKR 1,000 |

*மேலே குறிப்பிடப்பட்டுள்ள விலைகள் ஒரு கிலோவிற்கானவை

**Sweets by Slice –** இனிப்புப் பண்டங்கள் (ஒரு துண்டு)

| | |
|---|---|
| Opera Cake | - LKR 140 |
| Chocolate Fudge | - LKR 140 |
| Fruit Cake | - LKR 100 |
| Butter Cake | - LKR 100 |
| Brownie | - LKR 150 |
| Danish | - LKR 75 |
| Caramel Éclair | - LKR 100 |
| Chocolate Éclair | - LKR 100 |

**Baked Fresh Muffins**

| | |
|---|---|
| Almond Muffin | - LKR 100 |
| Banana Muffin | - LKR 100 |
| Chocolate Muffin | - LKR 100 |
| Plain Muffin | - LKR 100 |

**Dessert by Cup**

| | |
|---|---|
| Cream Caramel | - LKR 150 |
| Watalappam | - LKR 150 |
| Chocolate Mousse | - LKR 200 |

**Ice Cream Selection**

வழமையான Chocolate மற்றும் Vanilla சுவைகளுடன் புதிய பனம் பழ மற்றும் நெல்லிச் சுவைகளிலும் கிடைக்கிறது

| | |
|---|---|
| Cone (Small) | - LKR 60 |
| Cone (Large) | - LKR 80 |

**Short Eats (Vegetarian) –** சிற்றுண்டி வகைகள் (சைவம்)

| | |
|---|---|
| Vegetable Puff | - LKR 75 |
| Vegetable Patty | - LKR 60 |
| Vegetable Roll | - LKR 60 |
| Vegetable Roti | - LKR 60 |




திறந்திருக்கும் நேரம் - காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை

உங்கள் வீட்டு நிகழ்வுகளுக்குத் தேவையான சிற்றுண்டி மற்றும் தின்பண்ட வகைகளையும் மதிய உணவுப் பொதிகளையும் முன்பதிவு செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

"Kiddies pool available at the Solai Veedhi on Saturdays, Sundays, Poya days and public holidays from 10.00 am to 4.00 pm for customers who visits the Thulaa café". You could also "Come with your loved ones and enjoy the great atmosphere at The Thinnai".

86, Palaly Road, Thirunelveli, Jaffna, Sri Lanka
T+ 94 21 20 30 400 | E info@thethinnai.com | W www.thethinnai.com

# தொடருந்துப் பணியாளர்கள் வேலைநிறுத்தம்; பேருந்துப் பணியாளர்களின் விடுமுறைகள் ரத்து

கொழும்பு. ஒக். 13
சாரதிகள் மற்றும் காப்பாளர்களின் வேலை நிறுத்தத்தால் தொடருந்துச் சேவைகள் முடங்கியுள்ளன. பொதுமக்களின் நலனைக் கருத்திற்கொண்டு இலங்கைப் போக்குவரத்துச் சபையில் பணியாற்றும் சாரதிகள் மற்றும் நடத்துனர்களின் விடுமுறைகள் அனைத்தும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

பயிலுனர் சாரதிகளை சேவையில் உள்ளீர்த்துக்கொண்ட முறைமையில் விதிமுறைகள் மீறப்பட்டுள்ளதாகக் கூறி, நேற்று முன்தினம் இரவு திடீர் வேலை நிறுத்தத்தில் தொடருந்துச் சாரதிகள் மற்றும் காப்பாளர்கள் இறங்கினர். மிகக் குறைவான தொடருந்துகள் மட்டுமே இயக்கப்படும் நிலையில், தமது கோரிக்கை நிறைவேற்றப்படும் வரையில் வேலை நிறுத்தம் தொடரும் என்று தொடருந்து ஊழியர் சங்கங்கள் அறிவித்துள்ளன.

மக்களின் வசதியைக் கருத்திற்கொண்டு போக்குவரத்துச் சபையில் பணியாற்றும் பேருந்துச் சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் அனைவரினது விடுமுறைகளும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. அதிகமான பேருந்துகளைச் சேவையில் ஈடுபடுத்தவும் போக்குவரத்துச் சபை திட்டமிட்டுள்ளது. (5)

## மத்திய அதிவேக நெடுஞ்சாலை மோசடி: நாடாளுமன்றில் விவாதம்

கொழும்பு. ஒக். 13
மத்திய அதிவேக நெடுஞ்சாலை திட்டத்தில் ஊழல், மோசடி இடம்பெற்றுள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுவரும் நிலையில் இது தொடர்பில் எதிர்வரும் 19ஆம் திகதி நாடாளுமன்றத்தில் விவாதம் நடைபெறவுள்ளது. இதற்கான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையை மக்கள் விடுதலை முன்னணி கொண்டுவரவுள்ளது.

மத்திய அதிவேக நெடுஞ்சாலைத் திட்டத்துக்கான விலைமனுகோரல், நிறுவனத் தேர்வு, உத்தேச மதீப்பீடு உட்பட மேலும் சில விடயங்களில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன என்று நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கு எதிராகக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. கடந்த அமைச்சரவைக் கூட்டத்தின்போதும் அதிவேக வீதி தொடர்பில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது. (5)


### முச்சக்கர வண்டி ஒன்றை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல் - அறிவுரைப் பத்திரம் இலங்கை புகையிரத சேவை

மூன்று மாத காலத்திற்காக புகையிரத ஓட்ட பணியாளர் குழு யாழ்ப்பாண புகையிரத நிலையத்திற்கும், தங்குமிட வதிவிடத்திற்கும் இடையே நாளாந்தம் போக்குவரத்து செய்வதற்கு முச்சக்கர வண்டி உரிமையாளர்களிடமிருந்து விலைமனு கோரப்படுகின்றது.

இதற்குரிய அறிவுறுத்தல் மற்றும் கேள்விப்பத்திரம் புகையிரத நிலையப் பொறுப்பதிகாரி - யாழ்ப்பாணம் அலுவலகத்தில் மற்றும் போக்குவரத்து அதிகாரி - அநுராதபுரம் அலுவலகத்தில் 16.10.2017 ஆம் திகதியில் இருந்து 24.10.2017 ஆம் திகதி வரை இலவசமாக விநியோகிக்கப்படும்.

இது தொடர்பான சகல விவரங்களை பின்வரும் தொலைபேசி இலக் கங்களிற்கு அழைத்து பெற்றுக்கொள்ள முடியும்.

**பிரதம புகையிரத நிலையப் பொறுப்பதிகாரி யாழ்ப்பாணம்.**
**021 222 2371**
**போக்குவரத்து அதிகாரி அலுவலகம் - அநுராதபுரம்**
**025 223 5005**

**பிரதேச போக்குவரத்து அதிகாரி,**
**பிரதேச போக்குவரத்து அதிகாரி அலுவலகம், அநுராதபுரம்.**

### வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை
### மானிப்பாய் கிராம உப அலுவலகம் - ஆனைக்கோட்டை
### ஆதன பெயர்மாற்ற அறிவித்தல்

**வட்டாரம் :- 08**
**ஆதன இல :- 100/6**
**வீதி:- பழம் வீதி**
**கிராம சேவையாளர் பிரிவு :- J/135 நவாலி கிழக்கு**

வட்டாரம் 08, பழம் வீதி, ஆதன இல 100/6 இல் அமைந்துள்ள உறுதிப்படி வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் தென்மேற்கு பகுதி மானிப்பாய் கோவிற்பற்று ஆனைக்கோட்டை இறை "குருந்தடி" என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 01 குளி 09 கொண்ட இவ்வாதனம் நவாலி 02ஆம் ஒழுங்கையைச் சேர்ந்த கதிரமலை மகள் உதயமலர் அவர்களால் ஆனைக்கோட்டையில் அமைந்திருக்கும் கிறிஸ்துவின் இராஜ்யத்துக்குப் பிரசித்த நொத்தாரிஸ் தேவராசா சுபாஜினி அவர்கள் முகதாவில் நிறைவேறிய 343ஆம் இலக்க 24.07.2017ஆம் திகதிய நன்கொடை உறுதி மூலம் தமக்கு சொந்தம் எனத் தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளனர். நில அளவையாளர் திரு. T.தங்கராஜா அவர்களால் வரையப்பட்ட 9387ஆம் இலக்க 17.06.2017ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ்வாதனமானது "குருந்தடி" நிலப்பரப்பு 01 குளி 09 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பிரசுரத்திகதியிலிருந்து 14 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்துக் குறித்த ஆதனமானது கிறிஸ்துவின் இராஜ்யம் என்ற பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத் தருகின்றேன்.




**செயலாளர்,**
**வலி.தென்மேற்கு பிரதேசசபை,**
**மானிப்பாய்.**

### பாஷாண உத்வாசன சபிண்டீகரண அழைப்பு



கடந்த 29.09.2017 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

**அமரர்**
**சுப்பிரமணியம் கருணாநிதி (நிதி)**

அவர்களின் பாஷாண உத்வாசனம் (கல் எடுப்பு) எதிர்வரும் 15.10.2017 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு நடைபெறும். மறுநாள் 16.10.2017 திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளும் வண்ணம்
அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**கரம்பைக்குறிச்சி மேற்கு,**
**வரணி.**
**குடும்பத்தினர்.**

### 19ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர்**
**சுகந்தினி**
**சிறீஸ்கந்தராஜா**

**பிறப்பு**
**22.10.1978**

**இறப்பு**
**13.10.1998**

எங்கள் இல்லம் செழிக்க வந்த
இதயத் தாமரையே!
எங்கள் உள்ளம் களிக்க வந்த
உதயத் தாரகையே!

எங்கள் இதயத்தில்
என்றும் நீ சிலையாவாய்!
இறைவன் பாதத்தில்
என்றும் நீ மலராவாய்!



**குடும்பத்தினர்**
**மற்றும் உறவினர்கள்**
**419,**
**கொழும்புத்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

### 5ஆம் ஆண்டு நினைவலைகள்

கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம்
பிலிப்பியர் 1:21

**நிஜமானதோ**
**07 . 11 . 1994**



**நிழலானதோ**
**13 . 10 . 2012**

**விஜயச்சந்திரன் டினேஸ்**
(சென்ஜோன்ஸ் கல்லூரி 2013 - வர்த்தகப்பிரிவு மாணவன்)

**என் செல்ல மகன் டினே!**

எம்மைவிட்டுப் பிரிந்து ஐந்தாண்டுகள் வெகுவிரைவில் சென்றுவிட்டதையா. எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் எம் செல்ல மகனை மறப்போமா? நீ நடந்த பாதையெல்லாம் நெருஞ்சிமுள்ளாய் குத்துதையா.

குலம் விளங்கவென்று வந்த கோமகனே! பலமிழந்து போனோமையா. ஆனாலும் நீர் தேடிய நல் மரியாதை எம்மை தலை நிமிர வைத்ததையா.

சிறுவயதினிலே சிரத்தையுடன் நீ கல்வி கற்று சிறந்த அறிவாற்றல் கொண்டவனாய் வாழ்ந்தாய் ஐயா. உன் வாலிபக் காலத்தில் நீ வாழ்ந்து காட்டிய கறையற்ற கபடமற்ற உன் வாழ்வை எல்லோரும் போற்ற வாழ்ந்தாய் மகனே. உன் பெற்றோர் நீர் இல்லாவிட்டாலும் நீர் வாழ்ந்த வாழ்வை மற்றவர்கள் சொல்லும்போது பூரித்துப் போய் நிற்கின்றோம்.

**மண்ணில் உன் ஜனிப்பு வீண் அல்ல**
**விண்ணக வேந்தனின் நற்செய்தியை பூமியில்**
**பறைசாற்றி ஓய்ந்த ஒலிபெருக்கி**

நீ ஓய்வு எடுத்த போதும் ஓய்வின்றி ஒலிக்கும் நீர் கூறிய ஆண்டவரின் வார்த்தைகள் எம் செவிகளில் இனி.

என் செல்ல மகனே பேர் விளங்கவென்று வந்து பெருமை கொண்டு வந்த மகன். குலம் செழிக்க வந்த கோமகனே! எங்கு சென்றாய்? உன்னைப் பிரிந்து அடிவயிறு நெருப்பெரிய அழுது புலம்புகின்றோம். நீர் வளர்ந்த வீடோ நெருஞ்சிக்காடாய் ஆனதையா.

இம்மண்ணில் உம்மைப் பிரிந்தாலும் விண்ணில் உம்மைக் காண்போம் என்ற நம்பிக்கையில் மிகுதி நாள்களைக் கழிப்போம் என்ற நம்பிக்கையில் மிகுதி நாள்களை கழிப்போம். நீங்காத நினைவாய் என்றும் எம் உள்ளத்தில் உள்ளாய் மகனே!

**என்றும் உன் நினைவுகளுடன்**

**38/46, சிவன் புதுவீதி,**
**மணல்தறைலேன், கந்தர்மடம்.**
**பெற்றோர்.**

# ரஞ்சன் ராமநாயக்கவுக்கு அழைப்பாணை

கொழும்பு. ஒக். 13
நீதிமன்றத்தை அவமதித்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவை எதிர்வரும் 25ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை நேற்று விடுக்கப்பட்டுள்ளது.
மாகல்கந்தே சுதந்த தேரர் முன்வைத்திருந்த மனுவைப் பரிசீலனை செய்ததன் பின்னரே உயர்நீதிமன்றம் இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது.
நாட்டில் உள்ள பெரும்பாலான சட்டத்தரணிகள் ஊழலுடன் தொடர்புடையவர்கள் என்று பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க ஊடகச் சந்திப்பில் கருத்து வெளியிட்டிருந்தார். இது தொடர்பிலேயே மனுத் தாக்கல் செய்யப்பட்டது. (5)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



தரம் 5 இற்கான புலமைப்பரிசில் பரீட்சையில்
யா/நல்லூர் சென்பெடிக்ற் றோமன் க.த.க. பாடசாலையின்
மாணவி
**சுரேஸ்குமாரன் பிரசா**
175 புள்ளிகளை பெற்று சித்தியடைந்துள்ளார்.
இவரை வழிப்படுத்திய அதிபர், கற்பித்த ஆசிரியர்
அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கல்வியங்காடு வாழ்த்துவோர் : மாமா, மாமி, சித்தப்பா, சித்தி


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை
மாணவச் செல்வன்
**கிருஷ்ணகுமார் மதுமிதன்**
2017 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 165 புள்ளிகளைப் பெற்றும் மாவட்ட நிலையில் 592 இல் சித்தியடைந்துவெற்றியீட்டிய மாணவனைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்
யா/ அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




கோண்டாவில் வாழ் சமூக சேவையாளரும் எமது சனசமூகநிலைய உறுப்பினருமான
**திரு.மகேந்திரன் சுதாகரன்**
அவர்களுக்கு கோண்டாவில் மேற்கு மக்கள் நலன் பேணும் அமைப்பின் ஐந்தாம் ஆண்டு நிகழ்வில் அவரது சமூக சேவையை கௌரவித்து முன்னாள் தவிசாளர் வலி வடக்கு பிரதேசசபை சோ. சுகிர்தன் அவர்களால் **"சமூக சேவையாளர்"** எனும் கௌரவம் வழங்கி கௌரவிக்கப்பட்டமையை பாராட்டி நாமும் வாழ்த்துவதோடு மேலும் பல சமூக சேவைகள் செய்து பல்லாண்டு காலம் வாழ ஸ்ரீ அற்பத நர்த்தன விநாயகப் பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

பணிதொடர வாழ்த்துவோர்:
**ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலயமும்
குமரன் விளையாட்டுக்கழகமும்
கோண்டாவில் கிழக்கு.**

## சேவையால் உயர்ந்த உத்தமரை பாராட்டி வாழ்த்துகின்றோம்


பொன்மனத் திறலோன், கல்விக் கொடையாளர்
**உயர்திரு இராசையா குவேந்திரநாதன்**(உரிமையாளர் ராஜா பிளாசா)



கோண்டாவில் மேற்கு மக்கள் நலன்பேணும் அமைப்பினால் 08.10.2017 அன்று நடத்தப்பட்ட ஐந்தாம் ஆண்டு நிகழ்வில் கோண்டாவில் வாழ் சமூக சேவையாளர்கள்
**உயர்திரு இராசையா குலேந்திரநாதன்,
குலேந்திரநாதன் றஞ்சினிதேவி**
தம்பதியினருக்கு " **இல்லக ஜோதி**" என்னும் கௌரவப் பட்டத்தினை இலங்கை தமிழரசுக்கட்சி தலைவர் மாவை சேனாதிராஜா அவர்களும் பேராசிரியர் க.தேவராஜா அவர்களும் இணைந்து வழங்கிக் கௌரவித்தமையைப் பாராட்டி நாமும் வாழ்த்துவதோடு மேலும் பல பட்டங்கள் பெற்று மேலும் சேவையாற்ற பல்லாண்டு காலம் வாழ ஞானப்பழனி முருகனை வேண்டி நிற்கின்றோம்.
**இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!**

"ஆகம கிரியா திலகம்" ஈசான சிவாச்சாரியார்
சிவஸ்ரீ த.ரவீந்திரராசா குருக்கள் (பிரதமகுரு கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ ஞானப்பழனி முருகன் தேவஸ்தானம்)

## மன மகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்



சிவதர்மவள்ளல் பதிவரோதயன்
**உயர்திரு. இராசையா
குவேந்திரநாதன்**
(உரிமையாளர் ராஜா பிளாசா)
கோண்டாவில் மேற்கு மக்கள் நலன்பேணும் அமைப்பினால் 08.10.2017 அன்று நடத்தப்பட்ட ஐந்தாம் ஆண்டு நிகழ்வில் கோண்டாவில் வாழ் சமூக சேவையாளர்கள் **உயர்திரு இர்ராசையா குவேந்திரநாதன், குவேந்திரநாதன் றஞ்சினிதேவி தம்பதியினருக்கு "இல்லக ஜோதி"** எனும் கௌரவ-பட்டத்தினை கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா அவர்களும் பேராசிரியர் க.தேவராஜா அவர்களும் இணைந்து வழங்கி கௌரவித்தமையை பாராட்டி நாமும் வாழ்த்துவதோடு மேலும் பல பட்டங்களைப் பெற்று மேலும் சேவையாற்ற பல்லாண்டு காலம் வாழ ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகப் பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

மன மகிழ்வுடன் வாழ்த்துவோர்:
**ஐங்கரன் களஞ்சியம்
இல.6, பலாலி வீதி, திருநெல்வேலி.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கிளி/பளை இந்து ஆரம்ப வித்தியாலயத்தில்
ஐந்தாம் தரம் புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி
155 புள்ளிகளைப் பெற்ற
பளை வண்ணாங்கேணியைச் சேர்ந்த
தசிறாகன் சுமிதா தம்பதிகளின் செல்வப் புதல்வன்
**த.கிசான்**
அவர்களைப் பாராட்டுவதோடு அவரது வெற்றிக்கு அயராது உழைத்த பாடசாலை அதிபர், வகுப்பாசிரியர், ஆசிரியர்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றி-களைத் தெரிவித்துக் கொள்வதோடு கிசான் மேலும் பல பட்டங்கள் பெற்று நீடுழி வாழவேண்டுமென கலிகைக் கந்தனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்:-
தசிறாகன் -அப்பா, சுமிதா - அம்மா,
மதுஷா - அக்கா, கபிஷா - தங்கை,
ஜெயம் - அம்மப்பா

கபிஷா மரக்காலை,
பளை.

## பாராட்டி உயர்வுபெற வாழ்த்துகிறோம்
## யா/உடுவில் மகளிர் கல்லூரி



செல்வன்
**விபுலன் பவுஜன்**
2017 ஆம் ஆண்டு தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் 180 புள்ளிகளைப் பெற்று சிறப்பாக சித்தியடைந்த விபுலன் பவுஜன் அவர்களைப் பாராட்டி மகிழ்வதோடு இவர்மேலும் கல்வியில் உயர்புபெற இறைவனை பிரார்த்தித்து மகிழ்கின்றோம்.

வாழ்த்துவோர்:
அன்பு அம்மா, தாத்தா, அம்மம்மா,
பெரியமாமா, ஆசைமாமா, அத்தை,
அனபுத் தங்கை
காவியா மற்றும் உறவினர்கள்.
"சிவகமலை"
முதலாம் ஒழுங்கை,
உரும்பிராய் தெற்கு.

## பதவி வெற்றிடம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ்.கிளை. யாழ்.மாவட்டத்தில் டெங்கு ஒழிப்பு செயற்திட்டத்தினைநடைமுறைப்படுத்துவதற்கு. பொருத்தமான தகுதியுடைய விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி :- இணைப்பாளர் (டெங்கு ஒழிப்பு நடவடிக்கை)**

**தகமைகள் / அனுபவம் :-**

பொதுச்சுகாதாரத்தில் டிப்ளோமா துறை அல்லது அது தொடர்பான வேறு தகமை **அத்துடன்** ஆகக்குறைந்தது மூன்று வருடங்கள் முன் அனுபவம் சமூகமட்டத்தில் குறிப்பாக பொதுச் சுகாதாரத்துறையில் சேவையாற்றியமை **அல்லது** A/L கல்வித் தகமையுடன் ஆக்குறைந்தது ஐந்துவருட அனுபவத்துடன் குறிப்பாக சமூகத்தில் பொதுச்சுகாதாரத்துறையில் சேவையாற்றிய அனுபவம் **அத்துடன்** அரச சார்பற்ற நிறுவனங்களில் சுகாதாரத் துறையில் ஐந்துவருடங்கள் பணியாற்றியமை விரும் பத்தக்கது.

**சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.**

ஆர்வமுடைய விண்ணப்பதாரிகள் தங்களுடைய சுயவிபரக்கோவை-யுடன் உறவினர் அல்லாத இருவரின் சிபார்சுகளுடன் பெயர். விலாசம். தொடர்பு இலக்கங்களை குறித்து.விண்ணப்பங்களை பின்வரும் மின்னஞ்சல் முகவரி jaffnabeo@redcross.lk**அல்லது கிளை நிறை வேற்று உத்தியோகத்தர். இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ்.கிளை. இல.67 கோவில் வீதி.யாழ்ப்பாணம் என்னும்முகவரிக்கு 16.10.2017 இக்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.**


# அமெ. அரசியல் இராஜாங்க செயலருடன் நிதி அமைச்சர் மங்கள சமரவீர சந்திப்பு



கொழும்பு, ஒக். 13

அமெரிக்காவின் அரசியல் விவகாரங்களுக்கான இராஜாங்கச் செயலர் தோமஸ் சானொனை, நிதி அமைச்சர் மங்கள சமரவீர சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

உலக வங்கி மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பங்கேற்க, நிதி அமைச்சர் மங்கள சமரவீர வொசிங்டன் சென்றுள்ளார்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் அரசியல் விவகாரங்களுக் கான இராஜாங்கச் செயலர் தோமஸ் சானொனை கடந்த செவ்வாய்க் கிழமை சந்தித்தார். சந்திப்பில் நிதி அமைச்சரின் மூத்த ஆலோசகர் மனோ தித்தவெல மற்றும் தூதரக அதிகாரிகளும் பங்கேற்றனர்.

அமெரிக்கா-இலங்கைஇடையிலான இரண்டாவது கூட்டுக் கலந்துரையாடலில் பங்கேற்க, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக் கான உதவிச் செயலர் தோமஸ் சானொன் அடுத்த மாதம் கொழும்பு வரவுள்ளார்.

இருநாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பைவலுப்படுத்திக் கொள்வதற்காக, 2016ஆம் ஆண்டு, மங்கள சமரவீர அயலுறவுத் துறை அமைச்சராகப் பதவியில் இருந்தபோது, ஆண்டு தோறும் இந்தக் கலந்துரையாடலை நடத்த இணக்கம் காணப்பட்டமை,குறிப்பிடத்தக்கது. (5)

# ஆளில்லா வானூர்தியால் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

## வான்படைத் தளபதி தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 13

'ட்ரோன்' எனப்படும், ஆளில்லா வானூர்தியால் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக வான்படைத் தளபதி எயர்மார்சல் கபில ஜெயம்பதி தெரிவித்துள்ளார்.

வான்படைத் தலைமையகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய சூழ்நிலையில், தொழில்நுட்பம் விரைவாக வளர்ந்து வருகிறது. ட்ரோன்கள் மற்றும் ஏனைய ஆளில்லா வானூர்திகளினால் தேசியப் பாதுகாப்புக்கு ஏற்படக் கூடிய அச்சுறுத்தல்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

உலகம் முழுவதிலும் ட்ரோன்கள் மற்றும் அதுபோன்ற பறக்கும் பொருள்கள், பாதுகாப்புக்கான பிந்திய அச்சுறுத்தலாக மாறியுள்ளன.

தொழில்நுட்ப வளர்ச்சி வாழ்க்கையை இலகுபடுத்துகிறது. ஆனால், ட்ரோன் போன்ற பொருள்கள், எந்தவொரு நாட்டினதும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக மாறியுள்ளன. பயங்கரவாதிகள் மற்றும் துரோகிகள் சமூகத்தில் அச்சத்தை உருவாக்க ட்ரோன்களைப் பயன்படுத்தலாம். இந்த அச்சுறுத்தல்கள் எவ்வாறு குறைக்கலாம் என்பதில் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒரு கிலோவுக்கு அதிக எடையுள்ள ட்ரோன்களை வைத்திருப்பவர்கள் அதனைப் பயன்படுத்துவதற்கு, சிவில் வானூர்திப் போக்குவரத்து அதிகாரசபையின் அனுமதியைப் பெற வேண்டும். வான்படையும், இதற்கு அனுமதி வழங்கப்படுவதைக் கண்காணித்து வருகிறது. இதுபோன்ற அச்சுறுத்தலை ஏற்படுத்தும் விடயங்கள் தொடர்பாகப் பன்னாட்டுப் படைகளுடன் வான்படை நிபுணத்துவத்தைப் பரிமாறிக் கொள்கிறது - என்றார். (5)


### குருவேதுணை

வாழ்க வையகம்



வாழ்க வளமுடன்

உறவுகள் மேம்படும் உள்ளங்கள் பெருக்கவும். ஏமாற்றம் தாங்கும் வலிமை பெருக்கவும் வன்முறை துறந்த வையகம் பெருக்கவும். மனிதம் போற்றும் மனங்கள் பெருக்கவும். ஏற்றங்கள் சேர்க்கும் எண்ணங்கள் பெருக்கவும். உழைப்பைப் போற்றும் தன்னம்பிக்கை பெருக்கவும். தோழமை போற்றும் உறவுகள் பெருக்கவும். தினமொரு பொன்னாளாய் விடியல்கள் பெருக்கவும்.

2016-10-15 மலர்ந்தது அறிவுத்திருக்கோவில்.அதன் ஆண்டு விழா இனிதாய் நடைபெறவிருக்கிறது.

**15.10.2017 - ஞாயிறுக்கிழமை**

**காலை நிகழ்வு**

காலை 10.00 மணி - பயிலரங்கம்

**வாழ்க்கைச் சிக்கல்களும் வளமான தீர்வுகளும்**

**நெறியாளர் சொல்வேந்தர் சுகிசிவம்**

**மாலை நிகழ்வு**

**மாலை 4.00 மணி**

**தலைமை**

**மனவளக்கலைப் பேராசிரியர் சி.முருகானந்தவேல் அவர்கள்.**

(மனவளக்கலைமன்ற அறக்கட்டளையின் தலைவர்)

**பிரதம விருந்தினர்**

**பேராசிரியர் இ.விக்னேஸ்வரன் அவர்கள்.**

(துணைவேந்தர் யாழ் பல்கலைக்கழகம்)

**சிறப்பு விருந்தினர்கள்**

**பேராசிரியர் இ. ஜெயபால் அவர்கள்.**

**பேராசிரியர் ச. இந்திரா அவர்கள். (தமிழ்நாடு இந்தியா)**

**சிறப்புசொற்பொழிவு**

நாளும் உயர்வோம் நாம்

**கலைமாமணி சொல்வேந்தர் சுகிசிவம்**

என்றுமே எல்லோரும் இன்புற்றிருக்க எம் அன்புநிறை உள்ளங்களை வரவேற்கின்றோம்.

**அனைவரும் வருக அனுமதி இலவசம்**

மனவளக்கலை யோகா பயிற்சிகள் 16.10.2017 திங்கட்கிழமை மாலை 5.00 மணி தொடக்கம் தமிழகத்திலிருந்து வருகைதரும் பேராசிரியர்கள் மூலம் விஞ்ஞான பூர்வமான விளக்கங்களுடன் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

**அறிவுத்திருக்கோவில்,**
**இல 81 பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம். 0212222772**



### மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை வடமாகாணம்

**வடமாகாண சுகாதார அமைச்சின் கீழுள்ள வைத்தியசாலைகளில் ஒப்பந்த அடிப்படையிலான நியமனம்**

வடமாகாண சுகாதார அமைச்சின் கீழ்வரும் வைத்தியசாலைகளில் நிலவும் பின்வரும் பதவிகளுக்கான வெற்றிடங்களை ஒப்பந்த அடிப்படையில் நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களை உரிய மாவட்டத்தின் **பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைகள், மாவட்ட பொது வைத்தியசாலைகளில்** பெற்றுக்கொள்ள முடியும்.

1. **வைத்திய / பதிவு வைத்திய உத்தியோகத்தர்கள்**
2. **தாதிய உத்தியோகத்தர்கள்**
3. **துணை மருத்துவ சேவை / நிறைவு காண் மருத்துவ சேவை** (Para Medical, PSM)

பின்வரும் தகுதியுடையவர்கள் **05.11.2017** ஆம் திகதிக்கு முன்னர் உரிய மாவட்டத்தின் **பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைகள் மற்றும் மாவட்ட பொது வைத்தியசாலைகளில்** அவர்களினால் அறிவுறுத்தப்படும் ஆவணங்களுடன் விண்ணப்பங்களை ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

- ✓ **உடல் உள ஆரோக்கியம் - தகுதிச் சான்றிதழ்**
- ✓ **70 வயதுக்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.**
- ✓ **வடமாகாணத்தில் எப்பகுதியிலும் கடமையாற்றுவதற்குத் தயாராக இருத்தல் வேண்டும்.**
- ✓ **அரச சேவையில் கடமையாற்றாதவர்களாயின் மேற்குறித்த பதவிகளுக்காக இலங்கை மருத்துவ சபையில் பதியப்பட்டவராக இருத்தல் வேண்டும்.**
- ✓ **தாமாகவே பதவியை விட்டு விலகிய கட்டளை மற்றும் ஒழுக்காற்று தண்டனையில் இல்லாதவர்களாக இருத்தல் வேண்டும்.**

ஏனைய விவரங்கள் விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளும் இடங்களில் அறிந்து கொள்ள முடியும். நேர்முகப் பரீட்சை ஒன்றினூடாக அவசியமான வெற்றிடங்களுக்குத் தேர்வு நடைபெறும்.

**வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்,**
**மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்,**
**வடமாகாணம்.**



### வேலைக்கு ஆள்கள் தேவை

**Binding, Screen Printing** வேலைகளுக்கு ஆள்கள் தேவை.

**சாயி பிறிண்டர்ஸ், இணுவில்.**
**077 220 9474**

### வீடு வாடகைக்குத் தேவை

யாழ் மாநகர சபைக்குட்பட்ட பிரதேசத்தில் 4 பேர் கொண்ட குடும்பத்துக்கு அடிப்படை வசதியுடன் 6 மாதத்துக்கு அல்லது ஒரு வருடத்துக்கு மட்டும் தேவை.

**தொடர்பு :- 077 361 1282**





## இணுவில் திருப்பதி அருள்மிகு திருவேங்கடேஸ்வரர் ஆலயம்

### சனீஸ்வரர் தனி பரிகார சந்நிதி

**புரட்டாதி சனி வார மகா சனீஸ்வர பரிகார ஹோமமும் சனீஸ்வரர் பரிகார விஷேட பூசையும்**

**14.10.2017**

அடியார்களே!

விஷ்ணு பக்தனாகிய சனீஸ்வர பகவான் தன்னுடைய எஜமானாகிய திருமாலுடன் தனிச்சந்நிதி அமைத்து அங்கே அடியார்களின் தோஷ நிவர்த்திக்காக நள புஷ்கரணி எனும் தீர்த்தம் கொண்டு அருள்பாலித்துக் கொண்டு இருக்கும் இணுவை திருப்பதியில் இவ்வாண்டு பிரதி புரட்டாதி சனி வாரம் தோறும் விஷேட சனீஸ்வர பரிகார ஹோமம் நடைபெற திருவருள் கூடியுள்ளது.

நாளை (14.10.2017) சனிக்கிழமை காலை 8.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை அடியார்கள் ஹோமத்தில் கலந்து அதற்குரிய ஹோமத் திரவியங்களைத் தங்களின் கைகளால் சமர்ப்பிக்க முடியும்.

மேலும் நளபுஷ்கரணியில் நீராடியும், எள்சாதம் நைவேத்தியம் செய்தும், எள் எண்ணெய் தீபம் ஏற்றியும் வழிபட முடியும் என்பதனை அறியத் தருகின்றோம்.

குறிப்பு: சனீஸ்வர பரிகார அபிஷேகம் செய்ய விரும்பும் அடியார்கள் தங்களின் பதிவுகளை காரியாலயத்தில் மேற்கொள்ளலாம்.

**தொடர்பு :021 224 2300** **ஆலய தர்மகர்த்தா.**

# சுவிஸில் கொல்லப்பட்டவர் பற்றி விசாரணை நடத்தப்படவேண்டும்

## மாகாண அமைச்சர் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், ஒக்.13
சுவிட்சர்லாந்தில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ஈழத்தமிழர் ஒருவர் உயிரிழந்துள்ளார். கடல்கடந்த நிலையிலும் அநியாயமான உயிர்ப்பறிப்புகள் தமிழர்களைத் துரத்துகின்றன. இதுதொடர்பில் முழுமையான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என வடக்கு மாகாணசபை மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அடைக்கலம் கோரி சுவிட்சர்லாந்தில் தஞ்சம் புகுந்தோர் பிரிசாகோ நகரில் உள்ள முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அங்குள்ள ஈழத்தமிழர்களிடையே தகராறு ஏற்பட்டுள்ளது.

முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைக்காக பொலிஸார் சென்றுள்ளனர். அப்போது பொலிஸாருடன் சென்ற சக ஈழத்தமிழர்கள் இருவரையும் கத்தி கொண்டு தாக்க முற்பட்டுள்ளனர். அப்போது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இதில், புதுக்குடியிருப்பு 6 ஆம் வட்டாரம், ஆனந்தபுரம் பகுதியைச் சேர்ந்த 38 வயதான சுப்பிரமணியம் ஹரன் என்பவர் உயிரிழந்துள்ளார் என அந்நாட்டுப் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த சம்பவத்தின் பின்னணி ஒருபக்கமிருக்கட்டும். தாக்குதல் நடவடிக்கைக்கு தற்காப்பு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. நேரடியாகவே துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் பேரவைத் தலைமையகம் அமைந்திருக்கும் சுவிட்சர்லாந்து நாட்டில் இவ்வாறு நடந்துள்ளமை மிகமோசமான முன்னுதாரண மாக அமைந்துள்ளது.

உயிரிழந்தவரது தாக்குதல் முயற்சிக்கு இலக்கானதாக கூறப்பட்டவர்கள் காயப்படவில்லை. எனவே, இச்சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும்.

அகதிகளாக தஞ்சமடையும் ஈழத்தமிழர்களை மனிதாபிமானத்துடன் நடத்தவேண்டும். கடல்கடந்த தேசங்களில் இவ்வாறான அநியாய உயிரிழப்புகள் இனியும் நடக்கக்கூடாது எனக் குறிப்பிட்டுள்ளார். (ய -ரி3)

# இழுவைமடி மீன்பிடித் தடைச்சட்டத்தை அதிகாரிகள் நடைமுறைப்படுத்தவில்லை

## கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் விசனம்

யாழ்ப்பாணம், ஒக் 13
வடக்கு மாகாண மீனவர்கள் போர்க்காலம் தொட்டு இன்று வரை தமது தொழில் நடவடிக்கைகளில் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இவ்வாறு வடக்கு மாகாண கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் வி.சுப்பிரமணியம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடற்படையினரின் நெருக்குவாரங்கள் மற்றும் இந்தியக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறல்கள் என அவர்களின் பிரச்சினைகள் நீண்டு கொண்டே செல்கின்றன. குறிப்பாக எல்லைதாண்டும் இந்திய மீனவர்கள் தடை செய்யப்பட்ட வலைகளைப் பாவித்து மீன்வளத்தை அள்ளிச் செல்கின்றனர் என மீனவர்கள் குற்றஞ் சாட்டுகின்றனர். உரிய அரசு இதுதொடர்பில் காலத்துக்குக் காலம் நடவடிக்கை எடுத்தாலும் அவை பயனளிப்பதில்லை என்றும் மீனவர்கள் தரப்பில் விசனிக்கப்படுகின்றது. இந்தவகையில் இழுவைமடி மீன்பிடித் தடைச்சட்டமும் பிசுபிசுத்துப் போயுள்ளது.

இழுவைமடி மீன்பிடி தொடர்பில் தடைச்சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. ஆனால் அதிகாரிகள் அதனைக் கட்டுப்படுத்துவதில்லை.

இந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட பின்னர் இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் அத்துமீறல் குறைவாகக் காணப்பட்டது. எனினும் எமது அதிகாரிகள் அதனை சரிவர நடைமுறைப்படுத்தாத காரணத்தால் தற்போது இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் ஆரம்பித்துள்ளன. இதனால் எமது கடல்வளம் தொடர்ச்சியாக அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதேவேளை, இலங்கை, இந்திய மீனவர்களின் பிரச்சினை புதுடில்லியில் ஆராயப்படவுள்ளது. இருநாட்டு அமைச்சுமட்ட பிரதிநிதிகள் இதுகுறித்துப் பேசவுள்ளனர். எமது பிரதிநிதிகள் இந்திய அரசுக்கும், அங்குள்ளவர்களுக்கும் இழுவைமடிச் சட்ட வரைபு பற்றித் தெளிவுபடுத்த வேண்டும். அது நிறைவேற்றப்பட்டதையும், நடைமுறைகளையும் அவர்களுக்கு எடுத்துக்கூறவேண்டும். இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார். இதுதொடர்பாக நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளிடம் கேட்டபோது, இலங்கையில் இழுவைமடி மீன்பிடி முறைமை தடைசட்டத்துக்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. இதுதொடர்பில் நாம் எவ்வாறான நடவடிக்கையை எடுக்கலாம் என ஆலோசித்து வருகின்றோம் - என்றார். (ய-8)

# வடக்கு மாகாணத்தில் இந்த வருடம் 300 பேருக்கு வாழ்வாதார உதவி

யாழ்ப்பாணம், ஒக்.13
வடக்கு மாகாணத்தில் நடப்பு வருடத்தில் 300 பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன என கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் ஜெ.ஜெ. பெலீசியன் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:

வாழ்வாதார உதவிகளுக்கான பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். போரில் பாதிக்கப்பட்டவர்கள், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் இதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இதற்காக மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியில் 15 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. மாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களில் தலா 60பேர் வீதம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். கால்நடைகளும், சிறுதொழில் முனைவோருக்கான உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. கால்நடைகள் வழங்கும் செயற்பாடுகள் நிறைவடையும் நிலையில் உள்ளன். ஏனையவர்களுக்கான உதவிகள் அனைத்தும் இந்தமாத இறுதிக்குள் வழங்கப்படும் என்றார். (ய-ரி)

# வவுனியா மாவட்டத்தில் தகவல் அறிவோர் அதிகரிப்பு

வவுனியா மாவட்டத்தில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினூடாக தகவல்களைப் பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ஆனால் அவை பொதுநோக்கம் கொண்டவை அல்ல. இதனால் எமக்கு வேலைப்பளு ஏற்பட்டுள்ளது என பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக்கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்களால் கேட்கப்படும் தகவல்களில் அதிகளவானவை பொது நோக்கத்திற்குரியவை இல்லை. பொது நோக்கத்திற்குரிய தகவல்களைக் கோரினால் அவற்றை வழங்கக்கூடியதாக இருக்கும். எமது செயலகத்தில் பெரிய இரகசியத் தகவல்கள் எவையும் இல்லை. இதனால் எங்களுக்கு வேலைச் சுமை அதிகமாகவே உள்ளது. எனவே, தகவல்களைப் பெறுவோர் பொதுநோக்கத்தின் தேவைகளைக் கோரினால் அதை வழங்கத் தயாராக இருக்கிறோம் - என்றார். (ய)

### உணவுப்பொதிக்குள் ஹெரோயின்:

# யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு கைதியைப் பார்க்கப்போனவர் கைது

யாழ்ப்பாணம், ஒக்.13
யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்குள் ஹெரோயின் போதைப்பொருளைக் கடத்த முயன்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சந்தேகநபர் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் உள்ள கைதி ஒருவரைப் பார்க்கச் சென்றுள்ளார். இவர் கொண்டுசென்ற உணவுப்பொதியை சிறைச்சாலை அதிகாரிகள் சோதனையிட்டனர். அப்போது உணவுப் பொதிக்குள் மறைத்து வைத்திருந்த 320 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டது. கைதுசெய்யப்பட்ட இவர் விசாரணைகளின் பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் கைதிகளைப் பார்க்க வருவோர் உணவுக்குள் போதைப்பொருள்களை மறைத்துவைத்து கைதிகளுக்கு வழங்க முற்படுகின்ற சம்பவங்கள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ய-8)

# காசநோயால் பீடிக்கப்பட்டிருக்கும் 183 பேருக்கு ரூ.5,000 உதவித்தொகை

## சமூகசேவைகள் திணைக்களம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.13
வடக்கு மாகாணத்தில் காசநோயால் பாதிக்கப்பட்ட 183 பேருக்கு உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளதாக மாகாண சமூகசேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதுபற்றி மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் வறுமைக்கோட்டுக்கு கீழ்ப்பட்டவர்களுக்கு பல்வேறு உதவித்திட்டங்களை திணைக்களம் வழங்கி வருகின்றது. காசநோயால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்ச்சியாக சிகிச்சை பெறுவது அவசியம். இதன்போது அவர்களுக்கு போசாக்குள்ள உணவும் அவசியமாகின்றது.

ஆகவே வறுமைக்கோட்டுக்கு கீழ்ப்பட்ட நபர்களுக்கு திணைக்களத்தால் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகின்றது. ஒரு மாதத்துக்கு 5 ஆயிரம் ரூபாவீதம் அவர்களுக்கு வழங்கப்படுகின்றது.

இதனைப் பெற்றுக்கொள்ள வேண்டுமானால் நோய்க்குள்ளானவர் மருத்துவரின் உறுதிப்படுத்தலுடன் திணைக்களத்துக்கு தெரியப்படுத்தவேண்டும். உதவித் தொகை வழங்கப்படும். இது வரை வடக்கு மாகாணத்தில் 183 பேருக்கு இந்த உதவித் தொகையை திணைக்களம் வழங்கியுள்ளது. ஒருவரின் சிகிச்சை 9 மாதமளவில் நிறைவு நிலைக்கு வரும். 9 மாதம் வரை மருத்துவரின் உறுதிப்படுத்தலுக்கு அமைவாக திணைக்களம் உதவிகளை வழங்கிவருகின்றது - என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ய-ரி)



# வவுனியா தபால் அலுவலருக்கு விருது

யாழ்ப்பாணம்,ஒக்.13
வடக்கு மாகாணத்தின் சிறந்த தபால்சேவையாளராக வவுனியா தபால் நிலையத்தின் உத்தியோகத்தர் எஸ்.மனோகரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 9ஆம் திகதி பொலன்னறுவையில் பன்னாட்டு தபால்தின நிகழ்வுகள் நடைபெற்றன. இந்த நிகழ்வுக்கு அரச தலைவர் தலைமை தாங்கினார். இதன்போதே இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. தபால் விநியோகத்தில் ஈடுபடும் உத்தியோகத்தர், தபால் விநியோகம் தவிர மின்சாரக் கொடுப்பனவுகளையும் சேகரிக்க முடியும். அவ்வாறு வவுனியா மாவட்டத்தில் அதிகளவான கொடுப்பனவுகளைச் சேகரித்ததால் இவருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. (ய-ரி)

# அரசியல் கைதிகள் விவகாரம்: மல்வத்துபீட தேரர் கரிசனை

யாழ்ப்பாணம், ஒக்.13
வவுனியா சிறைச்சாலையில் இருந்து அநுராதபுரம் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் உரிய நடவடிக்கை எடுப்பதற்கு அரசதலைவரை வலியுறுத்தப் போவதாக மல்வத்துபீட தேரர் விஜித சிரி அனுநாயக்க தெரிவித்துள்ளார்.

தமது வழக்கை வவுனியா நீதிமன்றத்திற்கு மீண்டும் மாற்றுமாறு கோரி அநுராதபுரத்தில் தமிழ் அரசியல் கைதிகள் உணவு ஒறுப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அரசியல் கைதிகளுக்கு நியாயம்கோரி நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் மனு ஒன்றை விடுத்துள்ளார்.

அதனை ரெலோ இயக்கத்தின் கொள்கை பரப்புச் செயலாளர் கணேஸ்வரன் வேலாயுதம் நேற்றுமுன்தினம் கண்டி மல்வத்து பீடத்தின் விஜிதசிரி அனுநாயக்க தேரரிடம் கையளித்தார். அப்போது இவ்விடயம் தொடர்பாக அரச தலைவருக்கு தெளிவுபடுத்தி நியாயத்தை விளக்குவார் என தேரர் உறுதியளித்துள்ளார்.

ரெலோ இயக்கத்தின் கொள்கை பரப்புச் செயலாளர் கணேஸ்வரன் அனுநாயக்க தேரரை நேரில் சென்று சந்தித்தார். சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளினது விடுதலை தொடர்பாக கலந்துரையாடினார். உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மூவரது நிலைமைகள் பற்றி தேரருக்குத் தெளிவுபடுத்தினார் என்று கணேஸ்வரனின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ய)

## வடகொரியாவை அடக்குவதற்காக இராணுவத் தரப்புடன் ட்ரம்ப் பேச்சு



வொஷிங்டன், ஒக். 13
வடகொரியாவை அடக்குவது தொடர்பில் அமெரிக்க இராணுவ அதிகாரிகளுடன் ட்ரம்ப் முக்கிய ஆலோசனை நடத்தினார் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

கொரியத் தீபகற்பத்தில் போர் ஏற்பட்டால் ஜப்பான் சாம்பராகும் என்று வடகொரியா எச்சரிக்கை விடுத்தது.

அமெரிக்காவுடன் சேர்ந்து கொண்டு வடகொரியாவுக்கு எதிரான நகர்வுகளை வெளிப்படுத்தக்கூடாது என்றும் ஜப்பானை வடகொரியா எச்சரித்தது. இதற்குப் பதிலடியாகக் கொரியத் தீபகற்பத்துக்கு தனது போர் வானூர்திகளை அனுப்பி வடகொரியாவை எச்சரித்தது அமெரிக்கா.

இத்துடன் நின்றுவிடாமல் வடகொரியாவுக்கு எதிரான இராணுவத் திட்டம் தொடர்பில் தனது இராணுவ அதிகாரிகளுடன் ட்ரம்ப் நேற்று முன்தினம் முக்கிய கலந்துரையாடலில் ஈடுபட்டார் என்றும் பன்னாட்டு ஊடகங்கள்செய்தி வெளியிட்டன.(ம)

# கட்டலோனியா விடயத்தில் கெடு விதித்தது ஸ்பெய்ன்

## 19ஆம் திகதிக்குள் முடிவு அறிவிக்கப்பட வேண்டும்

மட்ரிட், ஒக். 13
ஸ்பெய்னில் இருந்து பிரிந்து செல்வது தொடர்பில் எதிர்வரும் 19ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கட்டலோனியா தனது இறுதி முடிவை அறிவிக்க வேண்டும் (ஐந்து வேலை நாள்களுக்குள்) என்று ஸ்பெய்ன் கெடுவிதித்துள்ளது.

ஸ்பெய்னின் பொருளாதாரம் உள்ளிட்ட பலவிடயங்களில் கட்டலோனியா காத்திரமான பங்களிப்பை வழங்குகிறது. ஸ்பெய்னின் சுற்றுலாத் தளமாகவும் கட்டலோனியா விளங்குகிறது. ஸ்பெய்னில் மேற்கொள்ளப்படும் முதலீடுகளில் சுமார் 20 சதவீதமானவை கட்டலோனியாவை மையமாக வைத்தே மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் கட்டலோனியாவை தனிநாடாக அறிவிக்க வேண்டும் என்று அங்குள்ள மக்கள் கடந்த ஐந்து வருடங்களாகக் குரல்கொடுத்து வருகின்றனர். இந்த மாதம் முதலாம் திகதி



இது தொடர்பான வாக்கெடுப்பையும் தன்னிச்சையாக நடத்தி முடித்தது கட்டலோனியா. வாக்களித்த 2.3 மில்லியன் மக்களில் 90 சதவீதமானவர்கள் பிரிந்து செல்வதற்கு ஆதரவாகவே வாக்களித்தனர். இந்த வாக்கெடுப்பை அடுத்து பிரிவினைக் குரல்கள் கட்டலோனியாவில் மேலும் வலுப்பெற்றுள்ளன. இதையடுத்து எதிர்வரும் 19ஆம் திகதிக்குள் பிரிந்து செல்வதா அல்லது தொடர்ந்தும் ஸ்பெய்னுடன் இருப்பதா என்பது தொடர்பில் கட்டலோனியா தனது இறுதி அறிவிப்பை வெளியிட வேண்டும் என்று ஸ்பெய்ன் கெடு விதித்துள்ளது. ஸ்பெய்னின் தலைமை அமைச்சர் மரியானோ ரஜாய் இந்த அறிவிப்பை வெளியிட்டார். (ம)

## சின்மோடேக் எரிமலை வெடிக்கத் தயாராகிறது

டோக்கியோ, ஒக். 13
ஜப்பானின் கியூ தீவில் உள்ள சின்மோடேக் என்ற எரிமலை ஆறு ஆண்டுகளுக்குப் பின்னர் தற்போது கரும் புகையை வெளிப்படுத்தி வருகிறது.

இந்த எரிமலை பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு உருவானதாக நம்பப்படுகிறது. 1716, 1717, 1771, 1822, 1959, 1991, 2008, 2009 மற்றும் 2011ஆம் ஆண்டுகளில் சின்மோடேக் எரிமலையில் வெடிப்புகள் நிகழ்ந்ததாகப் பதிவாகியுள்ளன. இந்த எரிமலை நேற்றுமுன்தினம் மீண்டும் புகையை வெளிவிடத் தொடங்கியுள்ளது. இந்த புகையும் சாம்பலும் வானில் சுமார் 600 மீற்றர்கள் வரை பரவியுள்ளது. எரிமலை உள்ள பகுதிக்குள் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. (ம)





அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் 8 நகரங்களில் எரிந்து கொண்டிருக்கும் காட்டுத் தீ இன்னும் முடிவுக்குக் கொண்டுவரப்படவில்லை. பலத்த காற்று காரணமாகத் தீ அதி விரைவாகப் பரவி வருகிறது என்று சொல்லப்படுகிறது. இந்தக் காட்டுத் தீயால் 17 உயிரிழந்துள்ளனர். 2 ஆயிரம் கட்டடங்கள் தீயில் எரிந்து சேதம் அடைந்துள்ளன. நூற்றுக் கணக்கான வாகனங்களும் தீக்கிரையாகியுள்ளன. (ம)

## வியட்நாமில் வெள்ளப்பெருக்கு 15 பேர் சாவு

ஹனோய், ஒக். 13
வியட்நாமில் கடந்த சில நாள்களாக பெய்த கனமழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்கி 15 பேர் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்கிழக்கு ஆசிய நாடான வியட்நாமின் நோயன், ஜென் பாய் உள்ளிட்ட மாகாணங்களில் கடந்த சில நாட்களாக கடுமையாக மழை பெய்து வருகின்றது. இதன் காரணமாக அந்த மாகாணங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. வெள்ளத்தில் சிக்கி இதுவரை 15பேர் உயிரிழந்துள்ளனர். மீட்புப் பணிகள் துரித கதியில் இடம் பெற்று வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)



## தென்சீனக் கடற்பரப்பில் அமெரிக்கப் போர்க்கப்பல்



*சீனாவின் ஆக்கிரமிப்புக்கு சவால் விடும் வகையில் அமெரிக்காவின் போர்க் கப்பல்கள் அவ்வப்போது தென்சீனக் கடற்பரப்புக்கு அனுப்பப்படுகின்றன.*

வொஷிங்டன், ஒக். 13
சர்ச்சைக்குரிய தென்சீனக் கடற்பரப்பில், அமெரிக்கப் போர்க் கப்பல் அத்துமீறிச் சென்றுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தென்சீனக் கடல்பரப்பை சீனா, தைவான், பிலிப்பைன்ஸ், வியட்நாம் உள்ளிட்ட பல நாடுகள் சொந்தம் கொண்டாடி வருகின்றன. சீனா சற்று கூடுதல் கரிசனை காட்டியது.

இதனால் பன்னாட்டுத் தீர்ப்பாயத்தில் சீனாவுக்கு எதிராக பிலிப்பைன்ஸ் வழக்குத் தொடர்ந்தது.

அதில் தென்சீனக் கடற்பரப்பில் சீனாவுக்கு உரிமையில்லை என்று முடிவாகியது. இதற்கு சீனா எதிர்ப்புத் தெரிவித்து குறித்த பகுதியில் தொடர்ந்தும் தனது இராணுவ நடவடிக்கைகளை நடத்தி வருகிறது. சீனாவின் நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. தென்சீனக் கடற்பரப்பு பொதுப்போக்குவரத்துக்கு உரிய பாதை. அவற்றில் சீனா தனது ஆதிக்கத்தை நிலைநாட்டுவதை ஏற்க முடியாது என்பது அமெரிக்காவின் கருத்தாக அமைந்தது.

சீனாவின் ஆக்கிரமிப்புக்கு சவால் விடும் வகையில் அமெரிக்காவின் போர்க் கப்பல்கள் அவ்வப்போது தென்சீனக் கடற்பரப்புக்கு அனுப்பப்படுகின்றன.

கடந்த செவ்வாய்க்கிழமையும் அவ்வாறு ஒரு போர்க் கப்பல் தென்சீனக் கடற்பரப்பால் சென்றது என்று சீனா தெரிவித்துள்ளது. (ம)

# 2018 ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்
## வட மாகாண சபை

வட மாகாண சபைக்குட்பட்ட கீழ்க்குறிப்பிடப்படும் மாவட்டங்களுக்கு 2018 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குரிய பொருட்கள், சேவைகளை வழங்குவதற்கு உள்ளூர் வழங்குநர்களாக பதிவு செய்ய விரும்பும் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள தரம் வாய்ந்த வழங்குநர்களிடமிருந்தும் உற்பத்தியாளர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

நிதி திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைவாக தேசிய ரீதியிலான பெறுகைகளின் போது இலங்கை ரெலிகொம் நிறுவனத்தினால் வருடாந்தம் வெளி யிடப்படும் வானவில் பக்கங்களில் (Rainbow Pages) பெயர் குறிப்பிடப்படும் வழங்குநர்களிடம் இருந்தும் விலை மனுக்கள் கோரப்படும்.

1. யாழ்ப்பாணம்
2. வவுனியா
3. மன்னார்
4. கிளிநொச்சி
5. முல்லைத்தீவு

தொகுதி இல: " G "

| உப தொகுதி இல. | பொருள்கள் - விவரம் |
|---|---|
| G-1 | அலுவலக தளபாடங்கள் |
| G-2 | அலுவலக உபகரணங்கள் |
| G-3 | காகிதாதிகள் |
| G-4 | புத்தகங்களும், பருவ வெளியீடுகளும் |
| G-5 | கட்டடப் பொருள்களும் கட்டடப் பிரிவிடுதலும் (Partioning) அலங்காரமும் |
| G-6 | மின் உதிரிகள், பொருத்திகள், மின் உபகரணங்கள் மற்றும் தொடர்பு சாதனங்கள் |
| G-7 | அச்சிடும் பொருள்கள் |
| G-8 | கணனிகளும் உதிரிப்பாகங்களும் |
| G-9 | சமூக நலன் பொருள்கள் |
| G-10 | மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் |
| G-11 | பொது உபகரணங்களும் வீட்டுப் பாவனைப் பொருள்களும் |
| G-12 | கல்விசார் உபகரணங்கள் |
| G-13 | விளையாட்டு உபகரணங்கள் |
| G-14 | இசைக் கருவிகள் |
| G-15 | மருத்துவ உபகரணங்களும் மருந்து வகைகளும் |
| G-16 | ஆயுர்வேத / சுதேச மருந்துகள் |
| G-17 | ஆயர்வேத மருந்துச் சரக்குகளும் பலசரக்குப் பொருள்களும் |
| G-18 | வைத்தியசாலைகளுக்கு உணவு வழங்கல் (உலர் உணவு மட்டும்) |
| G-19 | சமைத்த உணவும் குளிர்பானமும் |
| G-20 | விவசாய எந்திரங்கள், எந்திர உபகரணங்களும் அவை தொடர்பான கருவிகளும் |
| G-21 | விவசாய பொருட்கள், உர வகைகள் மற்றும் விவசாய இரசாயனப் பொருள்கள் |
| G-22 | விவசாய விதைகள், நடுகைப் பொருள்கள் |
| G-23 | கால்நடைகளின் உணவுகள் மற்றும் ஏனைய பொருள்கள் |
| G-24 | கால்நடைகளுக்கான மருந்துகள் |
| G-25 | மீன்பிடி தொடர்பான பொருள்கள் |
| G-26 | கைத்தொழில் மூலப்பொருள்கள் |

தொகுதி இல: "S"

| உப தொகுதி இல | சேவைகள் - விவரம் |
|---|---|
| S-1 | கடிதத்தலைப்பு புத்தகங்கள், வெளியீடுகள் அச்சிடுதல், சுவரொட்டிகள், பதாதைகள் அச்சிடுதல், பெயர் பலகை, குறியீட்டு பலகை எழுத்து பொறித்தல், புத்தகம் கட்டுதல், அச்சு அடிச் சட்டம் (Block) தயாரித்தல், இறப்பர் முத்திரை, திகதி முத்திரை தயாரித்தல். |
| S -2 | அலுவலக தளபாடங்கள் திருத்தம் செய்தல் |
| S -3 | அலுவலக போட்டோ பிரதி இயந்திரங்கள், ரைப்ரைட்டர்கள், றோனியோ மெசின்கள் மற்றும் மின் உபகரணங்கள் பழுது பார்த்தலும் சேவிஸ் செய்தலும் |
| S-4 | க்ணனிகள், பிறின்டர்கள் பழுது பார்த்தலும் சேவிஸ் செய்தலும் |
| S-5 | குளிரூட்டிகள், மின் உபகரணங்கள் மற்றும் மின்வயர்கள் பழுது பார்த்தலும் சேவிஸ் செய்தலும் |
| S-6 | பாதுகாப்பு சேவைகளை வழங்குதல் |
| S-7 | சுத்திகரிப்பு சேவைகள் வழங்கல், கட்டட தளங்கள், கதவுகள், ஜன்னல்கள், திரைச்சீலைகள் சுத்திகரிப்புச் செய்தல் |
| S-8 a or b | அ) வாகனம் பழுது பார்த்தல்:- உள்வாரியான திருத்தங்கள் இயந்திரம் மற்றும் வாகனப்பகுதிகளை பழுது பார்த்தல் மற்றும் ஏனைய திருத்தங்கள்<br>ஆ) வாகனம் பழுது பார்த்தல்:- வெளிவாரியான திருத்தங்கள் தகடுகள் (Tinkering) பழுது பார்த்தலும் பெயின்ட் அடித்தலும். |
| S-9 | வாகனம் பராமரித்தல்: கால அட்டவணைப் பிரகாரம் சேவிஸ் செய்தல், சில்லு ஒழுங்கு (alignment) பரிசீலித்தல், சில்லு சமன் செய்தல், டயர் மாற்றம் செய்தல் மற்றும் வாகன உட்புற சேவிஸ் செய்தலும் மினுக்கம் செய்தலும். |
| S-10 | விவசாய உபகரணங்கள் தயாரித்தல் / வடிவமைத்தல் மற்றும் விவசாய இயந்திரங்கள் உபகரணங்கள் திருத்தம் |
| S-11 | வாடகைக்கு அல்லது குத்தகைக்கு வாகனங்களை வழங்கல் (Passenger Vehicle) |

**நியந்தனைகள்**

1. வழங்குநர்களாக பதிவு செய்தல் 2018 ம் ஆண்டிற்கு மட்டுமே செல்லுபடியானதாகும்.

2.உள்ளூர் பெறுகைகள் பதிவு செய்த வழங்குநர்கள் பட்டியலிலிருந்தும், தேசிய ரீதியிலான பெறுகைகளின் போது இலங்கை ரெலிகொம் நிறுவனத்தினால் வருடாந்தம் வெளியிடப்படும் வானவில் பக்கங்களில் (Rainbow Pages) பெயர் குறிப்பிடப்பட்ட வழங்குநர்களிடமிருந்தும் பொதுவாக விலை மனுக்கள் கோரப்படும். எனினும் பொருள் கொள்பவருக்கு வேறு மூலங்களிலிருந்தும் விலை மனு கோருவதற்கான உரிமையும் உண்டு.

3. விண்ணப்பங்களை பதிவு செய்தலானது முறையான தரப்படுத்தலுக்கும் மதிப்பீட்டுக்கும் உட்படுத்தப்பட்டே மேற்கொள்ளப்படும். பிழையான விபரங்கள் வழங்கப்பட்டிருப்பின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

4.பதிவுக்காக் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களை எதுவித காரணங்களும் தெரிவிக்காமல் ஏற்றுக் கொள்வதற்கும் நிராகரிப்பதற்குமான உரிமையை பிரதம செயலாளர், கொண்டுள்ளார்.

5.மனுக்கள் கோரும்போது சரியான விலை மனுக்கள் சமர்ப்பிக்காத அல்லது கோரப்பட்ட பொருட்களை உரிய காலத்தினுள்ளும் மாதிரிக்கு அமைவாகவும் வழங்காத பதிவு செய்த வழங்குநர்களின் பெயர்கள் எதுவித முன்னறிவித்தலுமின்றி பதிவிலிருந்து நீக்கப்படும்.

6.வியாபார பதிவுச் சான்றிதழில் குறிப்பிடப்பட்ட பொருள்கள், சேவைகளுக்கு மட்டுமே வழங்குநர்கள் பதிவு செய்யப்படுவார்கள்.

7.குறிப்பிடப்படும் பொருள்கள் சேவைகளுக்கு வழங்குநர்களாக பதிவு செய்பவர்களால் சமர்ப்பிக்கப்படும் விபரங்கள் ஆவணங்களின் உண்மைத் தன்மையானது பிரதம செயலா ளரால் நியமிக்கப்படும் குழுவினரால் நேரடியாக சென்று பார்வையிடுவதன் மூலமோ நேர்காணலின் மூலமோ பரீட்சிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்படும். வழங்குநர் குறிப்பிட்ட பொருட்கள், சேவைகளுக்கு வழங்குநர்களாக பதிவு செய்வதற்கு தாங்கள் தகுதியற்றவர் என காணப்படுமிடத்து தங்கள் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

8.பொருள்கள் சேவைகள் விநியோகிப்பதற்கு விருப்பு தெரிவிக்கும் மாவட்டம் / மாவட் டங்கள் வழங்குநர்களால் குறிப்பிடப்படல் வேண்டும்.

9.பழுது பார்த்தலுக்கோ, வாகன பராமரிப்புக்கோ பதிவு செய்யப்படவுள்ள கராஜ்கள், சேவிஸ் நிலையங்கள் என்பன அடிப்படைத் தேவையான் வசதிகளைக் கொண்டிருத்தல் அவசியம். (விண்ணப்பத்துடன் அவர்கள் கொண்டுள்ள உபகரணங்களின் விபரங்களும் பயிற்சி பெற்ற வேலையாட்களின் விபரங்களும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்).தேவையேற்படும் போது இயந்திரப் பொறியியலாளர் மூலம் தரத்தினை பரீசீலனை செய்வதற்கான முழு அதிகாரம் உண்டு.

10. வழங்குநர்களுக்கு பெறுகைகளுக்கான காசு முற்பணம் வழங்கப்படமாட்டாது.

11. பதிவுக்கான விண்ணப்பங்கள் யாவும் தரப்பட்ட மாதிரியில் தயாரிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதியுடனும் வரிப் பதிவுச் சான்றிதழின் பிரதி யுடனும் மீளளிக்கப்படாத வைப்புப் பணத்துடனும் 2017 நவம்பர் மாதம் 27 ஆம் திகதி அல்லது அதற்கு முன்பதாக "பிரதிப் பிரதம செயலாளர்(நிதி). பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம் (நிதி), வட மாகாண சபை, 61/1, நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது அலுவலக வேலை நாட்களில் ( மு.ப 9.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை) நேரடியாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பும் போது தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "2018 ஆம் ஆண்டிற்கான வழங் குனர்களை பதிவு செய்தல்" என குறிப்பிட்டு அனுப்பி வைக்கப் படல் வேண்டும்.

12. முறையாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் பதிவு செய்யப்படவேண்டிய ஒவ்வொரு உப பொருட் தொகுதிக்கும், சேவைக்கும் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா.150/- இற்கான காசுக்கட்டளை "பிரதிப் பிரதம செயலாளர்- நிதி, வட மாகாணம்." என்ற பெயரில் யாழ்ப்பாணம் தபாற் கந்தோரில் மாற்றக்கூடியவாறு பெறப்பட்டு இணைத்து அனுப்புதல் வேண்டும். அல்லது இல. 61/1, நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். எனும் முகவரியில் இயங்குகின்ற பிரதிப் பிரதம செயலாளர் - நிதி அலுவலகத்தில் அலுவலக வேலை நாட்களில் (மு.ப 9.00 மணி முதல் பி.ப 3.00 மணிவரை) நேரடியாகப் பணத்தி னைச் செலுத்திப் பெறுகின்ற பற்றுச் சீட்டினை இணைத்து அனுப்புதல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட உப பொருட்கள் அல்லது உப சேவைகளின் தொகுதிக்கு பதிவு கோருவதாயின், ஒவ்வொரு உப பொருட் தொகுதிக்கும் அல்லது சேவைகளுக்கும் தனித்தனி விண்ணப்பத்துடன் மீளளிக்கப்படாத வைப்பு பணம் ரூபா 150/- உம் சமர்ப்பிக் கப்படல் வேண்டும்.

13. 2017 நவம்பர் மாதம் 27 ம் திகதிக்கு பின்பு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

14. மேலதிக விளக்கங்களுக்கு பிரதம கணக்காளர், பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம் (நிதி), வட மாகாணம்" அவர்களுடன் தொலைபேசி இல 0212220851/0212220854 மூலம் தொடர்பு கொள்ளமுடியும்.

### மாதிரி விண்ணப்பப் படிவம்
### 2018 ஆம் ஆண்டுக்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்
### வட மாகாண சபை

1. வியாபார நிறுவனத்தின் பெயர் :-
2. வியாபார நிறுவனத்தின் முகவரி :-
3. தொலைபேசி இலக்கம் :-
   நிலையானது (Land) :-
   கைத்தொலைபேசி (Mobile) :-
4. தொலைநகல் (Fax) இலக்கம் :-
5. வியாபார பதிவு இலக்கம் :-
6. வியாபாரத்தின் தன்மை :-
7. பதிவு செய்யப்படவேண்டிய பொருள்கள் / சேவைகளின் தொகுதி :-

| தொகுதி இல | பொருள்கள் / சேவைகள் விவரம் |
|---|---|
| | |

8. கணக்கினை பேணும் வங்கிகளின் பெயர்கள் :-
9. கடன் வசதி வழங்கப்படவுள்ள காலப்பகுதி :-
10 வற் (VAT) வரி பதிவு இலக்கம் (இருப்பின்) :-
11. மின்னஞ்சல் முகவரி :-
12 வழங்கல் செய்யக்கூடிய மாவட்டங்களின் பெயர்கள் :-

(விண்ணப்பதாரி வழங்கல் செய்யக்கூடிய மாவட்டம்/ மாவட்டங்களினை "✔" அடையாளத்தினை இடுவதன் மூலம் தெரிவு செய்தல் வேண்டும்)

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | |
| வவுனியா | |
| மன்னார் | |
| கிளிநொச்சி | |
| முல்லைத்தீவு | |

என்னால் / எங்களால் தெரிவிக்கப்பட்ட விபரங்கள் யாவும் சரியானவை எனவும் வட மாகாணசபை பிரதம செயலாளரினால் விதித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக பொருட்கள் / சேவைகளை வழங்குவதற்கும் உறுதியளிக்கிறேன். பதிவுக் கட்டணம் ரூபா. 150/- ற்கு ...................... ஆம் திகதிய ........................இலக்க காசுக் கட்டளை/பற்றுச்சீட்டு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

.......................... .......................... ..........................
விண்ணப்பதாரியின் ஒப்பம் பெயர் திகதி

**அ.பத்திநாதன்,**
**பிரதம செயலாளர்,**
**வட மாகாண சபை,**
**63, நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.**

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## இழுத்தடிப்பு வேண்டாம்!

வடக்கில் படையினர்வசம் உள்ள மக்களின் காணிகளை விடுவிக்க இன்னும் 2 வருட கால அவகாசம் தேவை என்று இராணுவம் தெரிவித்திருக்கிறது. அதனை அரசும் ஆமோதித்திருக்கிறது. இது தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் ஏற்புடையதல்ல.

தாங்கள் ஆட்சிக்கு வந்ததும் மக்களின் காணிகள் அனைத்தும் அவர்களிடமே உடனடியாகத் திருப்பி ஒப்படைக்கப்படும் என்று கூறியே மைத்திரிபால சிறிசேன மற்றும் ரணில் விக்கிரமசிங்க இரண்டு பேரும் ஆட்சிக்கு வந்தார்கள். வடக்கில் நடந்த பரப்புரைக் கூட்டங்கள் எல்லாவற்றிலும் அவர்களும் அவர்களுடன் கூடவே வந்த சந்திரிக்கா அம்மையாரும் இந்த வாசகத்தை மறக்காமல் முழங்கினார்கள்.

ஆனால், பதவிக்கு வந்து இரண்டு வருட காலம் முழுமையாகப் பூர்த்தியாகிய நிலையிலும் படைகள் வசம் உள்ள காணிகளில் பெரும்பாலானவை விடுவிக்கப்பட வில்லை. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மட்டும் சில ஆயிரம் ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டன. அங்கும்கூட இன்னமும் 5 ஆயிரம் ஏக்கர் மக்கள் காணிகள் விடுவிக்கப்பட வேண்டி யுள்ளன.

தவிர, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களிலும் பல ஆயிரம் ஏக்கர் மக்கள் காணிகள் படையினர் வசம் உள்ளன என்று அரச புள்ளி விவரங்களே கூறுகின்றன. இவற்றையெல்லாம் விடுவிப்பதற்கு ஒரு காலத்திட்டம் தயாரித்து படிப்படியாக அவற்றை விடுவிக்க வேண்டும் என்று அரச தலைவரும் தலைமை அமைச்சரும் படையினருக்கு அறிவுறுத்தியிருந்தனர்.

அந்த அறிவுறுத்தலுக்கு 2 வருட காலத்தின் பின்னர் மேலும் இரண்டு வருட காலத்திற்குள் தாம் காணிகளை விடுவிப்போம் என்று இராணுவத்தினர் கூறுகின்றனர். அதிலும் மக்களின் காணிகளை முற்றுமுழுதாக விடுவிப்போம் என்று அவர்கள் கூறவில்லை. பாதுகாப்புத் தேவைக்கான காணிகள் கையகப் படுத்தப்படும் என்றும் அப்படிக் கையகப்படுத்தப்படும் மக்களின் காணிகளுக்குப் பதிலாக மாற்றுக் காணிகள் வழங்கப் படும் என்றும் கூறியிருக்கிறார்கள்.

தேர்தல் வாக்குறுதிகளில் அரசியல் தலைவர்கள் கூறியதற்கு மாறானதாக இது இருக்கின்றது. மக்களின் காணிகள் அனைத்தும் அவர்களிடமே திருப்பி வழங்கப்படும் என்றுதான் தலைவர்கள் வாக்குறுதியளித்தார்கள். ஆனால், இராணுவமோ காணிகள் முழுமையாக வழங்கப்படாது என்று கூறுகின்றது. தங்களுக்குத் தேவையான காணிகள் வசப்படுத்தப்படும் என்றும் கூறுகின்றது. இது தமிழ் மக்களை ஏமாற்றும் செயல்.

வடக்கில் அளவுக்கதிகமான இராணுவத்தினரை வைத்திருப்பதாலேயே அவர்களுக்கு காணிகளும் அளவுக்கதிகமாகத் தேவைப்படுகின்றன. இராணுவத்தினர் 1980களில் இருந்த நிலைகளுக்குத் திரும்ப வேண்டும் என்ற கோரிக்கையை அழுத்தமாக முன்வைத்து அதற்கான தமிழ் மக்களின் ஆணையையும் பெற்றிருந்தது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. இந்த அரசுக்கு வெளியிலிருந்து ஆதரவளித்து வரும் கூட்டமைப்பு மக்கள் தனக்களித்த ஆணையை வலியுறுத்தி செயற்பட வேண்டிய அவசியம் இப்போது வந்துள்ளது.

காணிகளை விடுவிப்பதற்கு இன்னமும் இரண்டு வருட காலம் என்பது காலத்தை இழுத்தடிக்கும் போக்கே. தமது காணிகளை விடுவிக்கக்கோரி முல்லைத்தீவு மாவட்டம் கேப்பாப்பிலவில் 220 நாள்களுக்கு மேலாக போராட்டம் நடத்தி வரும் மக்களுக்கு அவர்களின் காணிகளை விடுவிப்பதாக வாக்குறுதி அளித்து 6 மாதங்கள் கடந்தபோதும் அது நிறைவேற்றப்பட வில்லை.

அப்படியிருக்கும்போது 2 வருட காலத்தில் காணிகளை விடுவிப்பதாக இராணுவம் அளித்திருக்கும் வாக்குறுதி மட்டும் அச்சொட்டாக அப்படியே செயற்படுத்தப்படும் என்று எதிர்பார்க்க முடியாது. அந்த 2 வருட காலத்தின் பின்னர் மேலும் ஒருவருட காலத்தில் இந்த அரசின் ஆயுள்காலம் முடிந்துவிடும். அதுவரை இந்தப் பிரச்சினையை இராணுவம் இழுத்தடித்து விட்டால், மீண்டும் புதிய அரசு இதே பழைய பல்லவியைப் பாடியபடி காலத்தை இழுத்தடிக்க ஆரம்பிக்கும். இதுதானே ஆண்டாண்டு காலமாகத் தமிழர்கள் எதிர்நோக்கி வரும் அவலம். எனவே காணி விடுவிப்பை இழுத்தடிக்காமல் ஒரு சில மாதங்களுக்குள் அதனை முடிக்கக் கூட்டமைப்பும் பன்னாட்டுச் சமூகமும் கொழும்புக்குப் போதிய அழுத்தம் கொடுக்க வேண்டும்.

# முல்லை மக்களது உறுதித்தன்மையற்ற அரசியல் பங்களிப்பு

இரா.தனம்

வன்னிப் பெருநிலப் பரப்பின் ஒரு பகுதியாக முல்லைத்தீவு மாவட்டம் விளங்குகிறது. இந்தப் பகுதி இயற்கையான அழகிய தரைத் தோற்றத்தையும், இப் பகுதி மக்களது தனித்துவமிக்க பண்பாட்டுக் கூறுகளையும் கொண்டுள்ள பிரதேசமாக அமைந்துள்ளது.

தமிழர்களது பாரம்பரிய தாயகமாக இருந்துவந்த இந்த மாவட்டத்தில் வாழும் மக்கள், அனேகமாக வன்னியின் பாரம்பரிய குடிகளாகவே தம்மை அடையாளப்படுத்த விரும்புகின்ற னர். பிரதேச வேறுபாடுகள் காணப் படுகின்றபோதிலும், விவசாயம், மீன்பிடி, சுயதொழில்களில் அதிகமான ஈடுபாடுகொண்டவர்களாக இந்தப் பகுதி மக்கள் இருந்து வந்துள்ளனர். அத்தகைய வாழ்க்கை முறைகளில் கட்டுண்டு, தம்மை அடையாளப் படுத்தக்கூடிய மரபுகளை தம் மத்தியில் கொண்டு, கூத்துமரபுகளைக் கொண்டவர்களாக காத்தவராயன் , கோவலன், கண்ணகி ஆகிய பாரம்பரிய நாட்டுக்கூத்துக்களையும், பண்டாரவன்னியனின் முடியாட்சியையும் பாரம்பரியத்தையும் எல்லாப் பிரதேசங்களிலும் நினைவுறுத்தும் செயற்பாடுகளை முன்னெடுக் கும் முகமாக பண்டாரவன்னியன் நாடகத்தையும் மேடையேற்றி வந்தனர். அதுமட்டுமல்லாது குறித்த அந்த மரபுகளைப் பின்பற்றுபவர்களாகவும் இருந்து வந்தனர்.

### முல்லை மாவட்ட மக்களது தனித்துவமான கலாசார மரபுகள்

இப்படியாக தனித்துவமாக அமைந்துள்ள முல்லை மாவட்டம் தமிழர், முஸ்லிம்கள், சிங்களவர்கள் என பல்லின கலாசார மரபாக தற்போது மாற்றம் கண்டுள்ளது. இதன் ஊடாக எழுந்துள்ள சவால்களை எதிர்கொள்வதற்கான அரசியல் தலைமைகளும், சுதேச பண்பாட்டு அடையாளத்தை பாதுகாக்கும் அதிகாரமையமும் முல்லை மாவட்டத்துக்கு அவசியமானதாக அமைந்துள்ளன. நாடுகளை நிர்வகிப்பதும், பொருளாதார அபிவிருத்தியை உருவாக்குவதும், தேசியவாத உணர்வை எழுச்சிபெறவைப்பதும் அரசியல் செல் நெறிகளுக்கு உட்பட்டவையே. இதனால் பழைய நடைமுறைகளைக் கைவிடும் மரபைவிடுத்து அதனை ஆரோக்கியமானதாக மாற்ற விளைதல் வேண்டும்.

முல்லை மாவட்டத்து நாடாளுமன்ற உறுப்புரிமையை நோக்குமிடத்து, வாக்காளர் தொகையானது, அதன் நாடாளுமன்ற உறுப்புரிமையை உறுதிப்படுத்தக்கூடிய விதத்தில் அமைந்துள்ளது. ஏனெனில் கடந்த அரச தலைவர் தேர்தலிலும் மாகாண சபைத் தேர்தலிலும் இந்த மாவட்ட மக்களின் அரசியல் பங்களிப்பு வலுவானதாகக் காணப்பட்டது. குறிப்பாக கரைதுறைப்பற்று, ஒட்டுசுட்டான், மாந்தை கிழக்கு, துணுக்காய், புதுக்குடியிருப்பு ஆகிய வாக்களிப்பு நிலையங்களைக் கொண்ட முல்லை மாவட்டம் 50 முதல் 60 வீதம் வரையான தேர்தல் வாக்களிப்பு பங்களிப்பை வெளிப்படுத்தியிருந்தது..

### ஏனைய மாவட்டங்களைவிட அரசியல் வலுக்குறைந்தது முல்லை மாவட்டம்

வன்னிப் பெருநிலப் பரப்பின் முக்கிய அங்கமாக முல்லை மாவட்டம் விளங்கிய போதிலும், ஏனைய மாவட்டங்களான வவுனியா, மன்னார், மாவட்டங்களுடன் ஒப்பிடும்போது நாடாளுமன்ற உறுப்புரிமையைபெற முடியாத ஒன்றாக இருந்து வந்துள்ளது.

தற்போது நடைமுறையில் உள்ள விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறையும், கடந்த காலத்தில் பின்பற்றப்பட்ட தொகுதிவாரி தேர்தல் முறையும் முல்லைத்தீவு மாவட்ட வாக்காளரின் பங்களிப்பின் ஊடாக நாடாளுமன்ற உறுப்புரிமையை அதிகரிக்கவில்லை. 1976 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட தேர்தல் தொகுதி நிர்ணய ஆணைக் குழுவின் சிபார்சின்படி முல்லைத்தீவு தனியான தேர்தல் தொகுதியாக நிர்ணயிக்கப்பட்டது.

### முல்லைத்தீவு கடும் பாதிப்பை எதிர்கொண்ட மாவட்டம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்புரிமைக்கான தேர்தலில் வாக்காளரின் மனோநிலை, வாக்களிப்பது பற்றிய அறிவு ,தேர்தலிலும் அரசியலிலும் பங்குபற்றுவதற்கான சூழல் போன்ற பல விடயங்கள் முக்கியமானதாகும். முல்லைத்தீவு மாவட்ட வாக்காளர்களின் மனோநிலை ஏனைய பிரதேச வாக்காளர்களது மனோநிலையினின்றும் மாறுபட்டதாகவே அமைந்துள்ளது.

வாக்காளர்கள் வாக்களிப்பில் கலந்துகொள்வதுடன் மட்டும் தமது அரசியல் பங்குபற்றல் முடிவடைந்ததாகவே கருதுகின்றனர். மேலும் அரசியலில் நேரடியான ஈடுபாடோ அல்லது தலைமை தாங்கும் இயல்போ



முல்லைத்தீவு மாவட்டத்தை பொறுத்தவரை அரசியல் கட்சிகளின் பங்களிப்பை தான் தோன்றித்தனமாக இயங்க விடாது தடுக்க வேண்டும். பொருத்தமான வேட்பாளர்களையும் சரியான கொள்கையையும் வகுக்க ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

மிகக் குறைவாக அமைந்துள்ளது. இதற்கு தனித்து வாக்காளர்கள் மட்டும் பொறுப்பாளிகளாக ஆகி விடமுடியாது.

முல்லைத்தீவு மாவட்டத்தை பொறுத்தவரை அர்சியல் கட்சிகளின் பங்களிப்பை தான் தோன்றித்தனமாக இயங்க விடாது தடுக்க வேண்டும்.

பொருத்தமான வேட்பாளர்களையும் சரியான கொள்கையையும் வகுக்க ஒத்துழைப்பு வழங்க வேண்டும். மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினை முதல் தேசியப் பிரச்சினை வரை கரிசனை காட்டும் அரசியல் தலைமைகள் அதிகாரத்துக்கு வருவதற்கு உதவுதல் வேண்டும். இவற்றை அரசியல் கட்சிகள் செயற்படுத்துமென மௌனமாக இருப்பதனைவிடுத்து, தனித்துவமான கையாளுகையைக் கொண்ட சிவில் அமைப்புகளை ஏற்படுத்த வேண்டும்.



# இந்தியா - சீனா பலப்பரீட்சை இலங்கைக்கு நல்லதல்ல!

இந்துமதி

இலங்கையில் கால் பதிப்பதில் சீனாவும், இந்தியாவும்போட்டா போட்டியில்ஈடுபட்டுக்கொண்டிருப்பதைப் பார்க்கும்போது இலங்கைத் தீவின் இறைமை தொடர்பான கவலைகளும் அதிகரித்துள்ளன.

சீனாவுக்கும்இந்தியாவுக்கும்இடையே நீண்டகாலமாகவேபகைமைநிலவி வருகின்றது. 1962ஆம் ஆண்டில் இடம்பெற்ற இந்திய-சீனப் போர் அந்தப் பகைமையுணர்வை மேலும் அதிகரித்துச் செய்துவிட்டது. போர் இடம்பெற்றபோதுஇந்தியத்தலைமை அமைச்சராக ஜவகர்லால் நேருவும், சீனாவின் தலைமை அமைச்சராக சௌ-என்-லாயும் பதவி வகித்தனர்.

### உலக வல்லரசு நாடுகளில் சீனாவுக்கு முக்கியத்துவம்

உலகிலேயே மக்கள் தொகை மிக அதிகமாகக் கொண்ட முதலிரு நாடுகள்சீனாவும்இந்தியாவும்தான். மிகப் பெரியநிலப்பரப்புடையவையாகவும், நீண்டஎல்லைக்கோட்டையும், இவை கொண்டுள்ளன. இது தொடர்பான பிரச்சினை இவ்விரு நாடுகளுக்குமிடையே நீண்டகாலமாகக் காணப்படுகின்றது. எல்லைப் பிரச்சினை தொடர்பாகவே 1962ஆம் ஆண்டு இந்த இரண்டு நாடுகளும் போரில் ஈடுபட்டன.

சீனாவேமுதலில்போரைத்தொடங்கியமை இங்கு குறிப்பிடத்தக்கது. போரின்முடிவில்மிகப்பெரியபரப்பளவிலானஇந்தியாவுக்குச்சொந்தமான நிலம் சீனாவின் வசமாகியது. இது தொடர்பாகப் பல தடவைகள் பேச்சு இடம்பெற்றபோதிலும் முடிவு எதுவும் இதுவரைஎட்டப்படவில்லை. எல்லாப் பிரச்சினைகளும்நீறுபூத்த நெருப்பாகவே இன்றும் காணப்படுகின்றன.

உலக வல்லரசுகளின் பட்டியலில் சீனாவும்முக்கிய இடம்பிடித்துள்ளது. ஐக்கியநாடுகள்சபையின்பாதுகாப்புச் சபையில் சீனாவுக்கு நிரந்தர இடம் வழங்கப்பட்டுள்ளது. இதனால் வீட்டோ அதிகாரத்தையும் இந்த நாடு கொண்டுள்ளது. பல இலட்சம் படைச் சிப்பாய்களை கொண்ட வல்லமை படைத்த நாடாகச் சீனா விளங்குகின்றது. இதைவிடப் பொருளாதார வல்லமையும் அதற்குண்டு. அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக சீனா சிறந்த பொருளாதாரக் கட்டமைப்பைக் கொண்டுள்ளது. இன்னும்சில ஆண்டுகளில் சீனா பொருளாதார வளர்ச்சியில் அமெரிக்காவை முந்திச் சென்றுவிடுமெனக் கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

### இலங்கைக்கு சீனா பல்வேறு உதவிகள் வழங்குகின்றது

தெற்கு ஆசிய நாடுகளில் சீனா தனது செல்வாக்கை அதிகரித்துக் கொள்வதில் அதிக அக்கறை காட்டிவருகின்றது. இந்தியா தவிர்ந்த ஏனைய நாடுகளுக்கு பொருளாதார ரீதியிலான கடன்களைப்பெரியஅளவில்வழங்கி வருகின்றது. மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் சீனாவிடமிருந்து பெருமளவு கடன்கள் பெறப்பட்டிருந்தன. இதைவிடப் பல்லாயிரம் கோடி ரூபாக்கள்செலவிலானஅபிவிருத்தித் திட்டங்களிலும் சீனா தன்னை ஈடுபடுத்திக் கொண்டது. இதனால் சீனாவின் ஆதிக்கத்திலிருந்து இலங்கையால்சுலபமாகவிடுபடமுடியாதநிலை உருவாகிவிட்டது. இதன் காரணமாகவே இலங்கை மீது சீனா அழுத்தங்களைப் பிரயோகிக்க ஆரம்பித்துவிட்டது. அம்பாந்தோட்டைத்துறைமுகம் சீனாவிடம் வழங்கப்பட்டுவிட்டது. கொழும்பில் துறைமுகநகரை அமைக்கின்ற பணிகளிலும் அது ஈடுபட்டுள்ளது. தற்போது மத்தள பன்னாட்டு வானூர்தி நிலையத்தின் மீதும் அதன் பார்வை பதிந்துள்ளது.

### பாகிஸ்தானைப் பிரித்து பங்களாதேஷ் நாட்டை உருவாக்கிய இந்தியா


இந்தியாவைப் பொறுத்த வரையில் தெற்குஆசியாவின்வல்லரசாகஅந்த நாடு உருவாகியுள்ளது. மிகப்பெரிய நிலப்பரப்பையும்மக்கள்தொகையையும் கொண்ட இந்த நாட்டில் மொழி அடிப்படையிலான மாநிலங்கள் அமைந்துள்ளன. மாநிலங்கள் இலங்கையை விடப் பெரியவை.


1947ஆம் ஆண்டுக்கு முன்னர் இந்தியா ஓர் உபகண்டமென அழைக்கப்பட்டுவந்தது. அதற்குஏற்றாற்போன்று மிகப்பெரிய நிலப் பரப்பை அது கொண்டிருந்தது. 1947ஆம் ஆண்டு இந்தியாவின் ஒரு பகுதி பிரிக்கப்பட்டு பாகிஸ்தான் என்ற பெயரில் தனிநாடு உருவானது. பாகிஸ்தான் ஒரு முஸ்லிம் நாடாகும். 1971ஆம் ஆண்டு இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே போர் மூண்டது. இதில் இந்தியா வெற்றி பெற்று வங்கமொழி பேசுகின்ற முஸ்லிம் மக்களுக்கென பாகிஸ்தானின் கிழக்குப் பகுதியில் பங்களாதேஷ் என்னும் பெயரிலான புதிய நாட்டை உருவாக்கியது. தற்போதுஇந்தியஉபகண்டத்தில்மூன்று நாடுகள் அமைந்துள்ளன.

இந்தியாவும்பாகிஸ்தானும்நட்புநாடுகளாகஒருபோதுமேஇருந்ததில்லை. காஷ்மீர் பிரச்சினையை இதற்கான முக்கிய காரணமாகக் கூறினாலும், அதற்கு அப்பாலும் பல விடயங்கள் பொதித்துள்ளன. எதிரிக்கு எதிரி நண்பன் என்ற வகையில் சீனா பாகிஸ்தானுடன் நெருங்கிய உறவைப் பேணி வருகின்றது. பாகிஸ்தானுக்குத்தேவையான உதவிகளையும் வழங்கி வருகின்றது. இந்தியசீனஉறவில்விரிசல் ஏற்படுவதற்கு இதுவுமொரு முதன்மைக்காரணமாகும். இந்தநிலையில் தான்பூகோளரீதியில் முக்கியத்துவம் வாய்ந்தஇலங்கையில்இந்தஇரண்டு நாடுகளும் கால்பதிப்பதற்குப் போட்டியிடுகின்றன. அம்பாந்தோட்டைத் துறைமுகம் சீனாவுக்கு வழங்கப்பட்டதால் மத்தள வானூர்தி நிலையத்தைத் தனக்கு வழங்குமாறு இந்தியா அடம்பிடித்து வருகின்றது. ஆனால் சீனா, இந்தியாவின் இந்தக் கோரிக்கைக்குப்பலத்தஎதிர்ப்பைவெளியிட்டு வருகின்றது. இலங்கையைப்பொறுத்தவரையில்சீனாவைப்பகைத்துக்கொள்ளமுடியாது. இந்தியாவையும் புறமொதுக்கி விடமுடியாது.

> எதிரிக்கு எதிரி நண்பன் என்றவகையில், சீனா, பாகிஸ்தானுடன் நெருங்கிய உறவைப் பேணி வருகின்றது. பாகிஸ்தானுக்குத் தேவையானஉதவிகளையும்வழங்கி வருகின்றது. இந்திய சீன உறவில் விரிசல் ஏற்படுவதற்கு இதுவுமொரு முதன்மைக் காரணமாகும்.

ஆனால் அணு வல்லமை கொண்டசீனாவும்இந்தியாவும் இலங்கையில் காலூன்றுவது நல்ல சகுனமாகத் தெரியவில்லை. இந்தஇரண்டுநாடுகளுக்குமிடையில் போர் ஒன்று மூளுமானால்அதன்விளைவுகளை இலங்கை அனுபவிக்க வேண்டிய நிலை உருவாகிவிடும்.





## ஆசிரியருக்கான கடிதம்

### அறம் காத்த நேர்மையாளர் பாராட்டுக்கு உரியவர்

உடல் உழைப்பை மேற்கொண்டு, உண்மையாக உடல் வருத்திச் சம்பாதிக்காமல், கொள்ளையடித்தும், விரும்பத்தகாத செயற்பாடுகள், மோசடிகள், வேலைவாய்ப்புப் பெற்றுத்தருவோம், கடனைப்பெற்றுத்தருவோம், அலுவல்களைச் செய்வித்துத் தருவோம், வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்போம், வங்கி அட்டை மோசடி என ஏமாற்றிப்பிழைப்பு நடத்தும் தீயவர்கள் வாழும் நாட்டில் இப்படியும் மனிதர்கள் இருக்கிறார்களா என ஆச்சியப்படும் வகையில் ஒரு பொலிஸ் அதிகாரியின் கண்ணியம், நேர்மை மிக்க அறம்காத்த, செயற்பாட்டுச் செய்தியை கடந்த செப்ரெம்பர் மாதம் 23 ஆம் திகதிய உதயன் பத்திரிகைச் செய்தியூடாக அறிந்து ஆச்சியமுற்று அந்த உத்தமனை நிச்சயம் பாராட்ட வேண்டும் என்ற அவாவின் காரணமாக இதை எழுதுகின்றேன்.

வங்கி உத்தியோகத்தரின் தவறால், வங்கியொன்றின் சிலாபம் கிளையில் பெயர் தெரியாத ஒரு பொலிஸ் அதிகாரி 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவைத் தனது தேவைக்காக மீளப்பெற்றபோது மீளப்பெறல்சிட்டையின் வாசிப்புப் பிழையால் 50 லட்சத்து 50ஆயிரம் ரூபாவை வங்கிக் காசாளர் வழங்கியிருக்கிறார். அதை எண்ணிக் கணக்கிடாமல் பெற்றுச் சென்ற அந்தப் பொலிஸ் அதிகாரி தான் அதிலிருந்து எடுத்த 5 ஆயிரம் ரூபா போக மீதியை மாரவில வங்கியின் கிளையில் வைப்பில் இடப் போனபோது, போடப்பட வேண்டிய 45 ஆயிரம் ரூபாவுக்கு பதில் கூடுதலான 45 லட்சத்து 45 ஆயிரம் ரூபாபணம் அவ்வங்கி உத்தியோகத்தரால் கணக்கிடப்பட்டு பொலிஸ் அதிகாரிக்கு தெரிவிக்கப்பட்டது. அப்போதுதான் பொலிஸ் அதிகாரிக்கு நிலைமை விளங்கியுள்ளது. இதுவிடயத்தில் மாரவில வங்கி உத்தியோகத்தரின் நேர்மையும் கடமையுணர்வும் பாராப்பட வேண்டிய விடயமாகும்.

இந்தநிலையில், தனக்குத்தவறாகவழங்கப்பட்ட மேலதிக வங்கிப் பணமான 45 லட்சம் ரூபாவை மனசாட்சிக்கு விரோதமாகத் தான் சுருட்டி தனது பொக்கற்றை நிரப்ப விரும்பாத அந்த உத்தம பொலிஸ் அதிகாரி, மீளவும் சிலாபம் வங்கிக்குச் சென்று முகாமையாளரிடம் தனக்குத் தவறுதலாக மேலதிகமாக வழங்கப்பட்ட 45 லட்சம் ரூபாவை மீள ஒப்படைத்த விடயம் சாதாரண விடயமல்ல. மனிதநேயம், நேர்மை, கண்ணியம் என்பதுடன் தான் ஒரு பொலிஸ் அதிகாரி என்ற வகையில் கடமைப்பொறுப்புணர்ந்து இவ்விதம் பணத்தை மீளக் கையளித்தமை போற்றப்பட வேண்டிய, ஏனையவர்களுக்கு முன்னுதாரணமாக செயல் என்பதைப் பாராட்டியே ஆக வேண்டும்.

வங்கிப் பணத்தை மோசடி செய்யாமல் தனது நேர்மையை, கண்ணியத்தை, வெளிக்காட்டிய செயல் மட்டுமல்ல, அந்தப் பெரிய தொகைப் பணத்தைத் தவறுதலாக வழங்கிய வங்கி உத்தியோகத்தரின் வாழ்க்கையையும் காப்பாற்றி அவரை சிக்கலில் மாட்டி தவிக்க விடாமல் அறம் காத்த, அந்த மனிதரது செயற்பாடு பாராட்டப்பட வேண்டிய தொன்றாகும்.

வ.க. ஜெயபாலன்,
யாழ்ப்பாணம்.


## பண்டத்தரிப்பு

# பத்திமாகிரியில் இன்று பெருவிழா

## 13.10.2017

**இன்று மாலை 4.30 மணிக்கு
திருப்பலி, திருச்சுரூபப்பவனி,
அன்னையின் திருச்சுரூப ஆசீர்**







பரிசுத்த கன்னிமரியாள் பத்திமா பதியிலே காட்சிகொடுத்ததன் நூறாண்டு நிறைவைக் கொண்டாடும் முகமாக, யாழ்.மறைமாவட்டத்தின் திருத்தலமாக விளங்கும், பண்டத்தரிப்பு பத்திமாகிரியில் அமைந்துள்ள, பத்திமா அன்னை யாத்திரைத்தலத்தில், மிகவும் சிறப்பான முறையில் பெருவிழா இன்று கொண்டாடப் படுகிறது. முதலாம் திருப்பலி காலை 6.30 மணிக்கு நடைபெறும். இரண்டாம் திருப்பலி மாலை 4.00 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து, யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் தலைமையில் திருப்பலியும் அதன் பின்னர் அன்னையின் திருச்சுரூபப்பவனியும் உடனடியாக திருச்சுரூப ஆசீர்வாதமும் இடம்பெறும். அத்தோடு பத்திமா காட்சிகளைச் சித்தரிக்கும் கண்காட்சி ஒன்றும் சுவாமி ஜெலான் இல்லத்தில் அமைக்கப்பட்டு உள்ளது.

மிகவும் அற்புதமான சூரியனை உள்ளடக்கிய பத்திமா மாதாவின் இறுதிக் காட்சி – 13.10.1917 அன்றைய தினத்திலே வழமையைவிட அதிக நேரத்திற்கு முன்பே மூன்று சிறுவர்களும் புறப்பட்டுச் சென்றார்கள். அவர்கள் சென்றடைவதற்கு அதிக தாமதம் ஏற்படும் என்று எதிர்பார்த்தே, அவர்கள் வேளையோடு கிளம்பினார்கள். ஏற்கனவே ஐப்பசி பதின்மூன்றில் நடைபெறப்போகின்ற காட்சியைப் பற்றிய பரந்த பரப்புரையும், நிகழும் என்று எதிர்பார்க்கப்பட்ட அற்புதங்களும் அதிகமான மக்களை காட்சித்தலத்தை நோக்கி ஈர்த்துக்கொண்டிருந்தது. பல்லாயிரக்கணக்கான (ஐம்ப தாயிரத்திற்கும் மேற்பட்ட) மக்கள் பாதைகளைக்கூட நிரப்பிக்கொண்டு நின்றார்கள். அவர்கள் உயரமான இடத்தை நோக்கி செபித்துக்கொண்டும் பாடல்களை இசைத்துக் கொண்டும் முன்னேறிக்கொண்டிருந்தார்கள். மழை பொழிந்து கொண்டிருந்தது. இன்றைக்கு என்ன நேருமோ என்ற பெரும் அங்கலாய்ப்பில் லூசியாவின் தாயும் அவளோடு கூடச்சென்றார். அதுதான் அவளின் வாழ்க்கையின் கடைசி நாளாக இருக்குமோ என்றுகூட தாய் அஞ்சினார். சென்ற மாதம் அதேநாளில் இருந்தது போலவே, ஏன் அதைவிட அதிகமாகவே உள்ளத்தை உருக்கும் வகையில், போகும் வழியில் சூழ்நிலை இருந்தது.

சேறும் சகதியுமாக பாதைகள் இருந்தாலும், மக்கள் இரந்து மன்றாட அங்கு முழந் தாட்படியிடத் தயங்கவில்லை. லூசியா கோவா டா ஈறியாவின் அந்தக் கருவாலி மரத்தடியை அடைந்தாள். அப்போது லூசியாவுக்கு ஏற்பட்ட உள்ளார்ந்த உந்துதலால் குடைகளை மூடி, திருச்செபமாலையை செபிக்க ஆரம்பிக்குமாறு மக்களிடம் சொன்னாள். சிறிது நேரத்தின் பின் சடுதியாக வெளிச்சம் பிரகாசித்தது. காட்சிநாயகி அந்த மரத்தின் மேல் நிற்கின்ற மேரையாய் தோன்றினாள். அப்போது லூசியா "நான் என்ன செய்யவேண்டும் என தாங்கள் விரும்புகிறீர்கள்" என்று கேட்டாள். அதற்கு காட்சி நாயகி "என் பெயரால் இங்கே ஒரு சிற்றாலயம் அமைக்கப்பட வேண்டும்" என்று கூறினார். "நீங்கள் என்ன பெயரால் அழைக்கப்படுகிறீர்கள்" என லூசியா கேட்க, "நான்தான் செபமாலை மாதா. தொடர்ந்து ஒவ்வொருநாளும் செபமாலையை செபியுங்கள். யுத்தம் முடியப்போகின்றது. போர்வீரர்கள் விரைவில் தங்கள் வீடு களுக்குத் திரும்புவார்கள்" என்றார். பின்னர் லூசியா "அம்மணி தங்களிடம் கேட்பதற்கு பல காரியங்கள் உண்டு. சில நோயாளிகளுக்கு குணம் கிடைக்க வேண்டும். பாவிகளை மனந்திரும்பச் செய்யவேண்டும். இப்படியாக..." என்று சொன்னாள். "ஒரு சிலர் குணம் பெறுவார்கள். மற்றவர்கள் தங்கள் தவறான வாழ்க்கையைவிட்டு திருந்தி, தங்கள் பாவங்களுக்கு மன்னிப்புக் கேட்க வேண்டும்" என்று அன்னை மரியாள் கூறினார். பின்னர் மிகுந்த சோகத்தோடு அன்னை மரியாள் உரைத்தாள். "எங்கள் இறைவனாகிய ஆண்டவரை இனிமேலும் நிந்தித்து மனம் நோகச் செய்ய வேண்டாம். ஏனெனில் ஏற்கனவே அவர் அதிகம் அதிகம் துன்பப்படுத்தப்பட்டுவிட்டார்." இப்படிச்சொன்ன பின்னர் அன்னை மேல்நோக்கி எழும்பினார். அந்தவேளையில் இரண்டு கைகளையும் திறந்து, தன் உள்ளங் கைகளிலிருந்து ஒளிக்கீற்றுக்களை சூரியனை நோக்கிச் செலுத்தினார். அப்போது லூசியா, அவளுக்கு ஏற்பட்ட ஒரு உள்ளார்ந்த உந்துதலின் காரண மாக "சூரியனைப் பாருங்கள்" என்று கத்தினாள். திரண்டிருந்த மக்க ளுக்கு சூரியனைக் காட்டுவதற்காக, கருமுகில்கள் நடுவிலே பிளந்து, இருபக்கமும் விலகிச் செல்வது போல, விலகிச் சென்று, ஒளிர்கின்ற ஒரு தட்டாக சூரியனை வெளிப்படுத்தின. சூரியனின் நிறம் ஒரு கத்தியின் வெள்ளி நிறம் போல (வெள்ளித்தட்டு) ஒளிமயமாகக் காட்சியளித் தாலும் கண்களைக் கூசச் செய்யவில்லை. காட்சியாளர்கள் பிரான்சீஸ் கோ, யசிந்தா ஆகியோரின் தந்தையின் விபரிப்பின்படி, சூரியனானது ஒளிர்ந்தும் மறைந்தும் (லைற் பத்திப்பத்தி நூர்வது போல) மின்னியது. மேலும் அதன் கதிர்கள் நாலா பக்கமும் விரிய, ஒவ்வொரு பக்கத்திலும் ஒவ்வொரு நிறமாக மரங்கள், மக்கள், வானம், நிலம் எல்லாமே பல்வேறு வர்ணங்களில் தோன்றியது. ஒரு அற்புதமான காட்சியாக இருந்தது. இந்த அற்புதமான காட்சி சுமார் பத்து நிமிடங்கள் வரை நீடித் தது. சடுதியாக சூரியன் அசையாமல் நின்றதுபோல் தோன்றி, ஆடத்தொடங்கியது. வானத்திலே இருந்து கழன்று மக்கள்மேல் இறங்கிவந்து விழுவது போன்று கீழ்நோக்கி சூரியன் விரைந்து வந்தது. அப்படி கீழே வரும்போது நெருப்பு மயமான ஒரு சில்லைப் போலத் தோற்றமளித்தது. மக்கள் "நாங்கள் எல்லோரும் கொல்லப்படப் போகிறோம். மாதாவே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும். ஆண்டவரே! எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும்." என்று ஓலமிடுவதும் குழறி அழுவதுமாக இருந்தார் கள். பின்னர் இவ்வாறு பூமியை நோக்கி வருவது நின்றது. மீண்டும் சூரியன் மேல்நோக்கி கோணல் மாணலான பாதையை எடுத்து, வானமண்டலத்தில் தான் முன்பிருந்த இடத்திற்குத் திரும்பியது. எல்லோரும் ஆறுதல் பெருமூச்சு விட்டார்கள். நாங்கள் இன்னும் உயிரோடு எஞ்சியிருக்கிறோம் என்றும் அந்த மூன்று சிறுவர் களும் நடக்கும் என்றுசொன்னபடியே பெரிய அற்புதம் நடந்துவிட்டது என்றும் சொன்னார்கள்.

பரிசுத்த கன்னிமரியாள் வான மண்டலத்தில் மிக உயரத்தில் சென்று மறைந்ததும் புனித சூசையப்பர், குழந்தை இயேசுவுடனும், நீலவண்ண தோள்துகிலுடன் வெண்ணிற ஆடை அணிந்தவராய் காணப்பட்ட அன்னை மரியாளுடனும் சூரியனுக்குப் பக்கத்தில் தோன்றியதை லூசியா கண்டாள். புனித சூசையப்பரும் குழந்தை இயேசுவும் சிலுவை அடையாளம் வரைந்து, உலகை ஆசீர்வதிக்கின்ற மேரையாய் காணப்பட்டார்கள். இந்தக் காட்சி மறைந்ததும் எங்கள் ஆண்டவரும் பரிசுத்த கன்னிமரியாளும் மேகங்களின்மேல் காணப்பட்டார்கள். அப்போது தோன்றியது வியாகுல மாதாவின் தோற்றம் போல இருந்தது. எங்கள் ஆண்டவரும் முன்னர் சூசையப்பர் செய்தவாறே உலகத்தை ஆசீர்வதிப்பதாகத் தோன்றியது. இந்தக்காட்சியும் மறையவே, பரிசுத்த கன்னிமரியாள் கார்மேல் மாதாவின் தோற்றத்தில் காட்சி அளித்தாள். கொட்டும் மழையிலே தோய்ந்து, முற்றிலும் ஈரமாக இருந்த மக்களுடைய உடைகளெல்லாம் அழகாக உலர்ந்து காணப்பட்டன. மழை நீரால் நிறைந்திருந்த குட்டைகளும் ஒரு கணப்பொழுதிலே முற்றிலும் வற்றிப் போயின. காட்சி நடந்த இடத்திலிருந்து நாற்பது கிலோமீற்றர்களுக்கு அப்பால் இருந்த வர்கள் பலர், அன்று நடந்த சூரியனை ஈடுபடுத்திய அற்புதக் காட்சியைக் கண்டு, இத்தகைய அதிசயத்தை தாங்கள் கண்டதேயில்லை என்று அங்கு வெளிவந்த செய்தித்தாள்களிலே தங்கள் அனுபவத்தை உடனடியாக பகிர்ந்திருக்கிறார்கள்.

அருட்திரு. கலாநிதி மைக்கல் சவுந்தரநாயகம்,
பங்குத்தந்தையும் பரிபாலகரும்,
பத்திமா யாத்தரைத்தலம்,
பண்டத்தரிப்பு.

**"பக்தர்கள் அனைவரையும்
வாழ்த்தி வரவேற்கிறோம்"**

# கருட பகவான்

## அவதார மகிமையுடைய விஸ்ணுவின் பெரிய திருவடிச் சேவகன்

இரா.நிஷாந்தன்



உலகெலாம் வியாபித்துள்ள விஸ்ணு பகவானை வேண்டிப் பணிந்து இருவர் சேவை புரிகின்றனர் என்று புராணங்கள் கூறுகின்றன. இவர்கள் பெரிய திருவடி, சிறிய திருவடி எனச் சிறப்பிக்கப்படுவதுடன் பெரிய திருவடியானவர் கருடன் எனவும், சிறிய திருவடியானவர் அனுமன் எனவும் பெயர் குறிப்பிடப்படுகின்றனர்.
பறவைகளின் அரசனாக அறியப்படும் கருடன் பேராற்றலும், பெரு வலிமையும் கொண்டவனாக பகவான் விஸ்ணுவிற்கு சேவை புரிய அவரது திருவடிகளில் வீற்றிருக்கின்ற சிறப்புக்குரியவன். விஸ்ணுவின் வாகனமாகவும், கொடியாகவும் திகழ்கிறான். இதன் காரணம் கொண்டே கருடபகவான், கருடாழ்வார், பட்சிராஜன், சுவர்ணன் என பல நாமங்களால் கருடன் சிறப்பித்து அழைக்கப்படுகிறான்.

**கருட அவதாரம்**

இத்தகைய கருடனின் அவதாரம் என்பது சிறப்பிற்குரியதாக நோக்கப்படுகிறது. காசிப முனிவருக்கு இரு மனைவியர் இருந்தனர். அவர்களுள் ஒருவர் கத்ரு. மற்றையவர் வினதை. காசிப முனிவரின் வரத்தினால் கத்ருவுக்கு ஆயிரம் நாகங்கள் பிள்ளைகளாகப் பிறந்தன. வினதை வேண்டியதன் படி இரு பிள்ளைகளை ஈன்றெடுப்பதற்கான (இரு முட்டை) அருள் கிடைக்கப்பெற்றது. ஆனாலும் அவற்றிலிருந்து நீண்ட காலமாகியும் புதல்வர்கள் வெளிவராமை கண்டு வேதனை கொண்டாள் வினதை. ஒரு முட்டையை உடைத்தும் பார்த்தாள். அங்கிருந்து உடலின் பாதிப்பாகங்கள் வரை அதாவது, இடுப்புப்பகுதி வரை வளர்ச்சி அடைந்த நிலையில் இருந்த புதல்வன் ஒருவன் வெளிவந்தான். அவன் அருணன் என்ற நாமம் கொண்டு அழைக்கப்பட்டான். தன் நிலைக்கு காரணமான தாயை விழித்த அருணன், "தாயே...! நீங்கள் அவசரம் கொண்டு எனக்கு இந்த நிலையை அழித்துவிட்டீர்கள். எனவே நீங்கள் சிறிது காலம் அடிமை வாழ்வு வாழ வேண்டும்" எனக் கூறி சாபம் அளித்தான். பின்பு அங்கிருந்து புறப்பட்டு சூரிய தேவனிடம் சென்றான். அவரது தேர்ச் சாரதியாக கடமை புரிந்தான். இன்றும் சூரியன் கிழக்குத் திசை முகம் தனில் உதிப்பதற்கு முன்பாக கீழ்வானம் சிவந்து காணப்படும் தன்மைய்ய அவதானிக்கிறோம். அது அருணோதயம் என அழைக்கப்படுகின்றது.
இதன் பின்பு நீண்ட காலங்கள் கழித்து மற்றைய முட்டையிலிருந்து தானாகவே கருடன் தோன்றி வெளி வந்தார். ஆவணி மாதம் வளர்பிறைப் பஞ்சமி திதியும் சுவாதி நட்சத்திரமும் கூடிய நன்நாளிலேயே கருட பகவான் அவதரித்தார். அவர் மேனி ஒளி பொருந்தியதாகவும், வலிமை பொருந்தியதாகவும் இருந்தன. கூரிய அலகையும், கூர்மையான நகங்களையும் கொண்டு விரைவாக பறந்து செல்லும் ஆற்றல் படைத்தவராகவும் கருட பகவான் திகழ்ந்தார். அது மட்டுமன்றி கத்ருவின் பிள்ளைகளான நாகங்களுக்கு பரம விரோதியாகவும் இவர் விளங்கினார்.

> “மகாபாரதத்தில் பாண்டவர்கள் கருட வியுகம் அமைத்த செய்தியை மகாபாரதம் உரைக்கின்றது. இன்றும் விஸ்ணு ஆலய கொடித்தம்பத்திற்கு முன்பாகக் கருடன் எழுந்தருளியிருப்பதைக் காணலாம். மேலும், கருடனது தரிசனம் கிடைக்கப் பெறுதல் வாழ்வில் அதிக சௌபாக்கியங்களைத் தரும். ஆலயங்களின் கும்பாபிசேக நாள்களில் ஆகாயத்தில் கருடன் வட்டமிடுவதனைக் காணமுடியும்.

**கத்ரு மற்றும் வினதை இடையேயான கதையாடலும் சூழ்ச்சியும்**

ஒருமுறை கத்ருவும், வினதையும் ஒன்றாக ஆகாய வீதியில் பயணிக்கும் சந்தர்ப்பத்தில் தேவலோகத்தின் 'உச்சசைசிரவஸ்' எனும் குதிரை உலாவிக் கொண்டிருந்தது. அப்போது கத்ரு வினதையை நோக்கி "அக் குதிரையின் வாலின் நிறம் என்ன..?" எனக் கேட்டாள். அக் குதிரை வெள்ளை நிறம் உடையது என்பதை அனைவரும் அறிவர். அந்தவகையிலே வினதையும் "வெள்ளை நிறம்" எனப் பதிலளித்தாள். ஆனாலும் அதனை ஏற்க மறுத்த கத்ரு, "இல்லை.. அது கறுப்பு நிறம்" எனக் கூறினாள்.
இருள் கவிந்து மாலை நேரமாகியதால் நாளைய பொழுதில் இது பற்றி விவாதிக்கலாம் எனக் கூறினாள் வினதை. அதற்கு கத்ருவும் ஒப்புக்கொண்டாள். ஆனாலும் கோரிக்கை ஒன்றினை வினதை யிடத்தில் முன்வைத்தாள். "நாளை நீ சொல்வது போல குதிரையின் வால் வெள்ளையாக இருந்தால் நான் உனக்குத் தாசியாக இருந்து சேவை செய்வேன். அது போலவே அப்பகுதி கறுப்பாக இருந்துவிட்டால் நீ எனக்குத் தாசியாக இருந்து சேவை புரிய வேண்டும்" எனக் கூறினாள்.
வினதையும் நிகழவிருக்கும் விபரீதம் தனை அறியாது கத்ருவின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டாள். கத்ரு தான் திட்டமிட்டபடியே நடந்துகொள்ளத் தலைப்படுகிறாள். அன்றிரவே தன் பிள்ளைகளான கருநாகங்களை தன்னிடத்தில் அழைப்பித்து, " நீங்கள்விரைந்து சென்று 'உச்சைச்சிரவஸ்' எனும் குதிரையின் வாலைப் பற்றுங்கள். அப் பகுதியை கருமை நிறமாக்கி விடுங்கள்" எனக் கூறினாள். அதன்படியே அனைத்தும் நடந்தேறின. மறுநாள் கத்ருவும், வினதையும் குதிரையைக் காணச் செல்கின்றனர். குதிரையின் வால் கறுப்பாக இருப்பதை அவதானம் கொண்டனர். வினதை தன் தோல்வியை ஒப்புக்கொண்டாள். கத்ருவுக்கு அடிமையாகி அவளுக்கும், அவளது பிள்ளைகளுக்கும் சேவையாற்றி வந்தாள்.



**வினதை முன்பாக கருடனின் பிரசன்னம்**

இவ்வாறு இருக்கும் சந்தர்ப்பத்திலே ஒருநாள் கருடன் தன் தாயைக் காணச் செல்கிறார். அங்கு நிகழும் சம்பவங்களைக் கண்டுகொண்டு மனம் தாங்கவொணாது, "தாயே...! தாம் ஏன் கத்ருவுக்கும், அவரின் புதல்வர்களுக்கும் தாசியாக இருந்துகடினமாக உழைக்கின்றீர்கள்" எனக் கேட்டார். வினதையும் நடந்த சம்பவங்கள் அனைத்தையும் கூறினாள். கருடன் கத்ருவிடம் விரைந்து சென்றார். "என் தாயை அடிமைத் தனத்திலிருந்து விடுவிக்க நான் என்ன செய்ய வேண்டும்" என கேட்டார். அதற்குப் பதிலுரைத்த கத்ருவும், "தேவர்கள் உண்ணும் அமிர்தத்தை எமக்கு கொண்டு வந்து தர வேண்டும். அப்படித் தரும் பட்சத்திலே உன் தாயை நான் விடுவிப்பேன்" என உறுதியளித்தாள். கருடனும் அப்படியே ஆகட்டும் எனக் கூறினார். "நான் அமிர்த கலசத்தை கொண்டு வந்து தந்துவிட்டு என் தாயை விடுவிக்கின்றேன்" எனக் கூறித் தன் தாயிடம் ஆசி பெற்றுத் தேவலோகம் நோக்கிப் புறப்பட்டுச் சென்றார்.

**தேவலோகத்தில் இருந்து அமிர்தகலசம் கொண்டுவரல்**

தேவலோகத்தை அடைந்த கருடபகவான் அமிர்த கலசத்தை எடுக்க முயன்றார். ஆனாலும் தேவர்கள் அதற்கான அனுமதியை வழங்கவில்லை. இதனால் கருடன் தேவர்களுடன் போர் புரிந்தார். அனைவரையும் தோல்வியடைச் செய்தார். இந்த அசம்பாவிதங்களைக் கண்ணுற்ற தேவர்களின் தலைவன் இந்திரன் திகைப்படைந்தான். இந்தச் சந்தர்ப்பத்திலே தேவர்களின் துயர் துடைக்கின்ற விஸ்ணு பகவான் அங்கு எழுந்தருளினார். கருடனின் போராற்றல் கண்டு மகிழ்ச்சி கொண்டார். கருடனை நோக்கியபடி "இன்று முதல் என்னைச் சுமந்து செல்லும் வாகனமாக இருக்கின்றாயா" எனக் கேட்டார். கருடனும் அதற்கு ஒப்புதல் தெரிவித்தார். அமிர்த கலசத்தை எடுத்துச் செல்வதற்கான அனுமதியையும் விஸ்ணு பகவான் கருடனுக்கு வழங்கினார்.
அமிர்த கலசத்தை எடுத்து வந்து கத்ருவிடம் கொடுத்து விட்டு தன் தாயை அடிமைத்தளையிலிருந்து விடுவித்தார் கருடன். அமிர்த கலசத்தைப் பெற்றுக்கொண்ட கத்ரு தர்ப்பைப் புற்களால் இழைக்கப்பட்ட ஓர் பாயில் அமிர்த கலசத்தை வைத்து விட்டு தன் பிள்ளைகளை நீராடி வருமாறு பணித்தாள். அதன்படி பிள்ளைகளான நாகங்கள் நீராடச் சென்றனர். இந்த சமயத்தில் இந்திரன் அவ்விடம் வருகை தந்து அமிர்த கலசத்தை எடுத்துச் சென்றார். நீராடி விட்டு வந்த நாகங்கள் அமிர்த கலசத்தைக் காணாது ஏமாற்றம் அடைந்தன. சில அமிர்தத் துளிகள் பாயில் சிந்தியிருப்பதைக் கண்டுகொண்டு தம் நாக்கினால் அவற்றைச் சுவைத்தன. இதன் காரணமாக அவற்றின் நாக்குகள் இரண்டாக பிளவுபட்டன. இன்றும் பாம்பின் நாக்கு பிளவுபட்ட நாக்காக இருப்பதற்கான காரணம் இதுவே என்பது புராண வரலாற்றின் அடிப்படைகளாக கூறப்படுகின்றன.

**கருட பகவானின் சிறப்பு**

இவ்விதம் கருட பகவானின் பிறப்பும் அவரது ஆற்றலும் சிறப்புப் பொருந்திய வரலாறாக விளங்குகின்றன. அவருடைய சிறப்புக்கள் எண்ணில் அடங்காதவை. கஜேந்திரன் எனும் யானையின் துயரம் நீக்க பகவான் விஸ்ணுவை கண் இமைக்கும் நேரத்தில் அவ்விடத்திற்கு கொண்டு வந்து சேர்த்தார் கருடபகவான். துருவன் எனும் சிறுவன் மேற்கொண்ட தவத்திற்கு மனம் இளகிய பகவான் நாராயணரை துருவன் இருக்கும் இடத்திற்கு கொண்டு சென்றார். அதேபோன்று இராமபிரானும், இலக்குவனனும் இராவணன் மகன் இந்திரஜித் ஏவிய 'நாக பாசம்' எனும் அஸ்திரத்தில் கட்டுண்டு உடல் முழுவதும் விசம் பரவி உயிருக்குப் போராடிய போது கருட பகவான் அவ்விடம் வந்து இராம, இலக்குவனர் உடலில் பரவியிருந்த விசத்தினைப் போக்கி அவர்களைக் காத்தருளினார்.
விஸ்ணுவின் பெருமை கூறும் புராணங்களில் கருடபுராணம்முதன்மை பெறுகிறது. கருடன் தன் மனதில் தோன்றிய சந்தேகங்களை பகவான் விஸ்ணுவிடம் கேட்க அதற்கு விஸ்ணு விளக்கமளிக்கும் வகையில் அமைந்த பகுதிகள் கருட புராணத்தில் இடம்பெற்றுள்ளன. இது மட்டுமன்றி போர்க் களத்தில் 'கருட வியுகம்
அமைக்கப்படும் தன்மையும் இங்கு சிறப்புப் பெறுகின்றது. மகாபாரதத்தில் பாண்டவர்கள் 'கருட வியுகம்' அமைத்த செய்தியை மகாபாரதம் உரைக்கின்றது.

**வழிபாடும் அருட்சிறப்பும்**

இன்றும் விஸ்ணு ஆலய கொடித்தம்பத்திற்கு முன்பாக கருடன் எழுந்தருளியிருப்பதைக் காணலாம். மேலும் கருடனது தரிசனம் கிடைக்கப் பெறுதல் வாழ்வில் அதிக சௌபாக்கியங்களைத் தரும். ஆலயங்களின் கும்பாபிசேக நாள்களில் ஆகாயத்தில் கருடன் வட்டமிடுவதனைக் காணமுடியும். அல்லது அக்காட்சி நிகழ வேண்டும் என பக்தர்கள் அனைவரும் காத்திருப்பர். இதுமாத்திரமன்றி விஸ்ணு ஆலய பிரம்மோற்சவ காலங்களில் கருடனுக்கென்று சிறப்பு வழிபாடுகள் இடம்பெறுகின்றன. நாராயண மூர்த்தி சிறீதேவி பூமி தேவி சமேதராய் எழுந்தருளி அடியவர்களுக்கு அருட்காட்சி தரும் கோலங்கள் அற்புதமானவை. நாக தோசம், நவக்கிரக தோசம் என்பவற்றை நிவர்த்திக்கின்றார். மேலும் பில்லி, சூனியம் நீங்கப்பெறும். பகைவர்களை வெல்லும் ஆற்றல், தடைகளைத் தாண்டிச் செல்லும் வலிமை, நல்ல நினைவாற்றல் எனும் கொழிப்பு என்பன கருடபகவானை வழிபடுவதால் கிடைக்கப் பெறும் என்கின்றன புராணங்கள். ஆக, இத்தகு மகத்துவங்களை உணர்ந்து கொண்டவர்களாக கருட பகவானை வழிபாடு இயற்றி அவரது அருட்கடாட்சத்தை பெற்று உய்வோமாக.

"ஓம் தத்புருஷாய வித்மஹே
ஸ்வர்ண பக்ஷாய தீமஹி
தன்னோ கருட ப்ரசோதயாத்...!"


# புத்தகங்களால் மாறிய புவி



எழுத்துக்கலை தோன்றியதை அடுத்தே புத்தக உருவாக்கம் ஆரம்பமானது.

பேச்சுக்கலை தோன்றி நீண்ட காலத்துக்குப் பின்னரே எழுத்துக் கலை தோற்றம் பெற்றது. இந்த எழுத்துக்கலை மொசப்பத்தேமிய நாகரிகத்திலேயே முதன் முதல் தோற்றம் பெற்றதாக வரலாற்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். ஆரம்பத்தில் எழுதுவதற்கு களிமண் தட்டுக்கள் பயன்படுத்தப்பட்டன. சில நூற்றாண்டுகள் கழிந்த பின்னர் 'பெப்பிரஸ்' என்னும் இலை எழுதுவதற்கு பயன்பட்டதையடுத்து களிமண் தட்டுக்களில் எழுதும் வழக்கம் இல்லாமற் போனது. இந்த 'பெப்பிரஸ்' இலைகள்தான் புத்தகங்கள் அச்சிடும் முறை தொடங்குவதற்கு மூலகாரணமாக இருந்தது. இதன் மூலம் புத்தகங்களைத் தயார் செய்தனர். உரோமனியர்கள் அதனை 'வெலியூமென்' என அழைத்தனர். இதனை அடுத்து தற்போது பாவனையிலுள்ள பொலியூம் (புத்தகம்) எனும் சொல் உருவாகியது. இதன் பின்னர் 'பெப்பிரஸ்' இலைக்குப் பதிலாக 'பாச மன்ட்' எனப்பட்ட கடதாசி வகையும் ஒரு வகையான மென்மையான தோலும் பு பயன்பட்டன. 'பாச்மன்ட்' எனப்படுவது செம்மறி ஆடுகளினது தோலிலிருந்து உருவாக்கப்படும் ஒரு வகைக் கடதாசி. ஆண் கன்றுகளின் தோல் மென்மையாகக் காணப்பட்டதால் இதனையே புத்தகம் கட்டுவதற்கு பிரயோகித்தனர். ஐந்தாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்து புத்தகம் உருவாக்க பயன்பட்ட தோல் கனமானதாக இருந்தது. இதன் இருபக்கங்களிலும் எழுதக் கூடியதாக இருந்தது. இருபக்கமும் எழுதப்பட்ட பின்னர் அடுத்த கட்டம் புத்தகம் கட்டல். இப்போது எழுதப்பட்ட தோலின் பக்கங்கள் சரியாக அடுக்கப்பட்டு நூலினால் தைக்கப்படும்.

புத்தகத்தின் அட்டை மரப் பலகையினால் தயாரிக்கப்பட்ட ஒன்று . எழுதப்பட்ட பக்கங்களை மேலும் கீழுமாக மரப் பலகையில் வைத்து புத்தகம் கட்டுவதற்கு விடப்பட்ட துவாரம் வழியாக நாடாவை அனுப்பி அவற்றை ஒன்றோடொன்று இணைப்பர். பின்னர் பெரிய தோல் துண்டு ஒன்றை வெட்டி மரப்பலகையின் மேல் வேப்பம் பிசினால் ஒட்டுவர். இவ்வாறு முதன் முதலாக உருவாக்கப்பட்ட புதக்கங்கள் இன்று அச்சுப் பெறும் புத்தகங்களுக்கு சமமானதாக இருந்தன. இதனைத் தொடர்ந்து இரு பிரதான செயற்பாடுகள் முக்கியம் பெற்றன. அவை புத்தகங்களை அலங்கரித்தல், பாதுகாத்தல் என்பனவாம். மத சம்பந்தமான புத்தகங்களே முதலில் கூடுதலாக உருவாக்கம் பெற்றன. பிற்காலத்தில் இயற்கை, வரலாறு, மருத்துவ விஞ்ஞானம் மற்றும் வம்சக் கதைகள் எனும் புத்தகங்களும் வெளிவந்தன. இவ்வாறு படிமுறை வளர்ச்சியால் புத்தகங்கள் தோன்றி தற்காலத்தின் வளர்ச்சியான இணையம் வரை நகர்ந்து சென்றுள்ளன. இத்தகைய பல துறைகளிலும் எழுதப்பட்ட புத்தகங்கள் புவியினை மாற்றி யமைத்துள்ளன. புத்தகங்களைப் புவியும், மாற்றியிருக்கின்றது. மனிதனின் புத்தியிலிருந்து வழிவதைப் புத்தகங்கள் பத்திரமாய்ப் பிடித்து வைத்திருக்கின்றன. அன்று பனை ஓலைமுதல் இன்று காகிதங்கள் வரை புத்தகமானது மனிதனின் பூரண வளர்ச்சிக்கு உதவி நிற்கின்றது. எனவே தினமொரு நல்ல புத்தகத்தைத் தெரிந்து வாசித்து பயனடைவோம்.



# வர்ணம் தீட்டுவோம்



# எங்களுக்கும் முதுமை வரும்



அந்த முதியவருக்கு 60 வயதுக்கு மேல் இருக்கும். ஆனால் அந்த வயதிலும் அவர் ஓய்வில்லாமல் உழைத்துக் கொண்டிருந்தார். தனது வயல் நிலத்தில் காலச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு நெல், சோளம், கரும்பு, கேழ்வரகு, நிலக்கடலை, உழுந்து, துவரை போன்றவற்றைப் பயிர் செய்வார். அவற்றைத் தலை நகருக்கு கொண்டு சென்று விற்று குடும்பம் என்னும் வண்டியை ஓட்டிக் கொண்டிருந்தார். இவரது வயோதிப மனைவியும் இவருடன் சேர்ந்து வயலில் பாடுபடுவார். இவருக்கு ஒரு மகன். அவன் வாலிபப் பருவத்தை அடைந்து நல்ல திடகாத்திரமான உடலைக் கொண்டவனாக இருந்தான். ஆனால் பொறுப்பற்று மூன்று வேளையும் வயிறு முட்ட உண்டு ஊரைச் சுற்றி வருவான். தந்தையும் தாயும் வயோதிபத்திலும் பாடுபட்டு உழைப்பதைப் பற்றி அவனுக்கு வருத்தமே கிடையாது. அவனை ஒரு பொறுப்புள்ளவனாக ஆக்க தந்தை எவ்வளவோ முயற்சித்தும் எதுவும் பயனில்லை.

வாழ்க்கை இப்படியே சென்று கொண்டிருந்தது. ஒருநாள் தன் வயலில் விளைந்த உழுந்து மூடைகளை அவர் தனது மாட்டு வண்டியில் சிரமப்பட்டு ஏற்றிக் கொண்டிருந்தார். வயதான அவரால் கனமாக மூடையைத் தூக்க முடியவில்லை. அப்போது மகன் கொய்யா மரமொன்றில் ஏறியிருந்து கொய்யாப் பழங்களை ருசித்துச் சாப்பிட்டுக்கொண்டிருந்தான். தந்தைக்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் சிறிதுமே அவனுக்கு ஏற்படவில்லை. தாய்க்கு இந்தக் காட்சியைக் காண அவன் மேல் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அவள் மெல்ல மெல்ல வந்து கணவனுக்கு மூடையை ஏற்ற உதவி செய்துவிட்டு, மகனைத் திட்டித் தீர்த்தாள். "ஒரே ஒரு பிள்ளை என்று செல்லம் கொடுத்ததால் நீ குட்டிச் சுவராய் போய் நிற்கிறாய். இனி மேல் நீ சும்மா இருந்தால் உனக்கு சோறில்லை. அப்பாவுடன் சந்தைக்கு சென்றுவா அப்போது தான் உனக்கு சோறு போடுவேன்" என மகனை விரட்டினாள். தந்தையோ "போனால் போகட்டும் விடு அவன் என்னவாவது செய்யட்டும்" என்று கூறிவிட்டு சந்தைக்கு வண்டியுடன் புறப்பட்டார். கோபமடைந்த மகனோ கொய்யாப்பழத்தை விட்டெறிந்து விட்டு வீட்டை விட்டு வெளியேறினான். நாள்கள் ஓடிமறைந்தன. மகன் வீடு வந்து சேர இல்லை. புத்திரனைப் பிரிந்த சோகத்தால் பெற்றோர் இருவரும் கலங்கிப் போயிருந்தனர். ஆனால் வயிற்றுப் பசிக்காக உழைத்தேயாக வேண்டுமே. அன்று தந்தை வழமைபோல உழுந்து மூடைகளுடன் உடல் தளர்ந்த நிலையில் வண்டியில் சென்று கொண்டிருந்தார். அப்போது இரண்டு மூடைகள் வண்டியில் இருந்து தவறிக் கீழே விழுந்தன. "கடவுளே எனக்கேன் இந்தச் சோதனை" என்று முனகிய படி மூட்டையை தூக்கும் முயற்சியில் இறங்கினார். அப்போது அந்த ஒற்றையடிப் பாதையில் குதிரை வண்டியில் வந்து கொண்டிருந்த ஓர் இளைஞன் இவர் நிலைகண்டு இரங்கி கீழிறங்கி மூடைகளைத் தூக்கி வண்டியில் வைத்தான். அப்போது கைகள் நடுங்க இரு கரங்களைக் கூப்பி அவனைக் கும்பிட்ட பெரியவர்" தம்பி நீ யார் பெத்த பிள்ளையோ நல்லாய் இருப்பாய்" என வாழ்த்தினார். பின்னர் அவனிடம் யாரென வினவ, அவன், தான் அந்நாட்டு இராச குமாரன்; சும்மா ஊரைச் சுற்றிப் பார்த்து பார்க்க அவ்வழியே வந்ததாகக் கூறினான். வயோதிபர் அவனை யாரென அறிந்ததும் வியந்து நின்றார். நடந்தவற்றையெல்லாம் மரங்களின் மறைவில் நின்று கவனித்துக் கொண்டிருந்த வயோதிபரின் மகன் மனம் திருந்தி தந்தையிடம் ஓடிவந்து காலில் விழுந்து மன்னிப்புக் கோரி தந்தையின் வண்டியைப் பொறுப்புள்ளவனாக தானே சந்தைக்கு ஓட்டிக் கொண்டு சென்றான்.


# குழந்தைகள் இப்படித்தான் வளருவார்கள்



1. எப்போதும் குறை கூறிக்கொண்டிருப்பவர்களின் சூழலில் வளரும் குழந்தைகள் மற்றவர்களைக் குறிகூறிக் கொண்டே இருப்பார்கள்.
2. எப்போதும் விரோத மனப்பான்மைச் சூழலில் வளரும் குழந்தைகள் மற்றவர்களோடு சண்டைபோடும் குணத்துடன் வளருவார்கள்.
3. மற்றவர்களால் ஏளனத்துக்கு ஆளாகும் சூழ்நிலையில் வளரும் குழந்தைகள் எப்போதும் அமைதியான சுபாவம் கொண்டு ஒதுங்கியே இருப்பார்கள்.
4. அவமான உணர்ச்சியோடு வளர்க்கப்படும் குழந்தைகள் குற்ற உணர்ச்சி கொண்டதாக இருப்பார்கள்.
5. பொறுமையான சூழ்நிலையில் வளர்க்கப்படும் குழந்தைகள் சகிப்புத் தன்மைகொண்டதாக வளருவார்கள்.
6. உற்சாகப்படுத்தி வளர்க்கப்படும் குழந்தைகள் தன்னம்பிக்கையுடன் வளருவார்கள்.
7. பாராட்டுக்களைப் பெறுவதற்கு வாய்ப்புப் பெற்ற குழந்தைகள் நல்லவற்றைப்போற்றுகின்ற குணம் உடையதாக இருப்பார்கள்.
8. நியாய உணர்வில் வளர்க்கப்படும் குழந்தைகள் நீதி உணர்ச்சியோடு நடந்து கொள்ளுவார்கள்.
9. பாதுகாப்பைப் பெற்று வளரும் குழந்தைகள் மற்றவர்களிடம் நம்பிக்கை வைத்து வளருவார்கள்.
10. அங்கீகாரத்துக்கு உட்பட்டு வளரும் குழந்தைகள் தன்னைத் தானே நேசிக்கக் கற்றுக் கொள்ளுவார்கள்.
11. நட்புணர்வோடும் வரவேற்புடனும் வளர்க்கப்படும் குழந்தைகள் உலகமே அன்பு மயமாக இருப்பதைப் போல எண்ணி மகிழுவார்கள்.

# அன்பு எனும் பண்பு

1. புகழைப் பார்க்கிலும் அன்பே சிறந்தது.
2. அன்பு விலைக்கு வாங்கவோ விற்கவோ முடியாத ஒரு பொருள்.
3. அன்புள்ள இதயம் என்றும் இளமையானது.
4. அன்புக்கு என்றும் அழிவேயில்லை.
5. அன்பாலும் சத்தியத்தாலும் உலகை வெற்றி கொள்ள முடியும்.
6. அன்புதெய்வீகத்தன்மை பெற்ற நற்குணம்.
7. அன்புக்கு விலை அன்பே தான்
8. அன்பைக் கொடுக்கத் தெரிந்தவனே அதைப் பெறவும்தகுதியுடையவனாகின்றான்.
9. பிறர்மீது அன்பு செலுத்துவது மேன்மையின் அடையாளமாகும்.






# 'மேயாத மான்'

## அடுத்த மாதம் வருகிறது

ரத்ன குமார் இயக்கத்தில் நடிகர் வைபவ், நடிகை பிரியா பவானி நடிப்பில் உருவாகியுள்ள 'மேயாத மான்' படம் அடுத்த மாதம் 17ஆம் திகதி திரைக்குவரும் என்று தெரிவிக்கப்படுகிறது.

பிரதீப் குமார் மற்றும் சந்தோஷ் நாராயண் இசையமைப்பில், பாடல்கள் அண்மையில் வெளியாகி நல்ல வரவேற்பைப் பெற்றன. இந்த நிலையில் படம் திரைக்கு வரும் திகதியை படக்குழு அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. இதன்படி படம் எதிர்வரும் 17ஆம் திகதி திரைக்குவரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விக்கிபீடியா கட்டுரை சுருக்கங்கள்




விக்கிபீடியாவில் தகவல்களைத் தேடும்போது நீளமான கட்டுரைகளைப் படிக்க கஷ்டமாக இருந்தால், அவற்றின் சுருக்கத்தை மட்டும் படித்துப் பார்க்கும் வசதி இருப்பது பற்றித் தெரியுமா? குறிப்பிட்ட விக்கிபீடியா கட்டுரைக்கான பிரவுசர் முகவரியில், உங்கள் மொழியைக் குறிக்கும் இ.என். எனும் ஆங்கில எழுத்துக்களுக்குப் பதிலாக சிம்பிள் எனும் ஆங்கில எழுத்தை டைப் செய்தால் அந்தக் கட்டுரையின் சுருக்கமான வடிவத்தை வாசிக்கலாம். ஆங்கில மொழிக் கட்டுரைகளுக்கு மட்டுமே இந்த வசதி இருக்கிறது. அதிலும் எல்லா நீளமான கட்டுரைகளுக்கு இந்த வசதி இல்லை.

## வீட்டுக்கு வீடு செல்லப்பிராணி வளர்த்தவர்களுக்கு....




'செல்'லே பிராணி தான் இப்போது.....

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** புதியவர்களின் நட்பு அனுகூல பலன் தரும். செயல்களில் அதிக ஈடுபாடு கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சியும், மதிப்பும் கிடைக்கும்.

**இடபம்:** உங்களைச் சிலர் குறை சொல்லிப் பேசுவர். பதற்றம் வேண்டாம். பணவரவு சுமார் என்பதால் சிக்கனம் அவசியம். சீரான ஓய்வு உடல் நலத்தைப் பாதுகாக்க உதவும்.

**மிதுனம்:** உங்கள் பேச்சில் நேர்மைக் குணமும், வசீகரமும் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரம் செழிக்கும். ஆதாய பணவரவு எதிர்பார்த்தபடி கிடைக்கும்.

**கடகம்:** கடந்தகால அனுபவங்களை எண்ணி, தைரியத்துடன் செயல்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் பணிச்சுமை ஏற்படும். எதிர்பார்த்த பணவரவு கிடைப்பதில் தாமதம் உண்டு.

**சிங்கம்:** உங்களின் வெகுநாள் இலட்சியக் கனவு இனிதாக நிறைவேறும். சமூகத்தில் நன்மதிப்புப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி திருப்திகரமாகும்.

**கன்னி:** திட்டங்களைப் பொறுப்புடன் செயற்படுத்துவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்திப் பணி, திட்டமிட்டபடி நிறைவேறும்.

**துலாம்:** உங்கள் சிரமங்களை பிறரிடம் சொல்லக்கூடாது. தொழில், வியா பாரத்தில் வருகிற குறுக்கீடுகளை உடனடியாகச் சரி செய்ய வேண்டும்.

**விருச்சிகம்:** உங்கள் செயல்களில் கூடுதல் கவனம் வேண்டும். தொழில், வியாபாரத்தில் இருப்பதைப் பாதுகாப்பது அவசியம். வரவை விட செலவு அதிகரிக்கும்.

**தனுசு:** உங்கள் செயல்களில் உற்சாகம் ஏற்படும். திகைப்பு தந்த பணியை எளிதாக நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரம் செழித்து தாராள பணவரவு கிடைக்கும்.

**மகரம்:** உங்கள் பேச்சில் மங்கலத்தன்மை நிறைந்திருக்கும். தொழில், வியாபாரம் செழிக்க தேவையான மாற்றம் செய்வீர்கள். எதிர்பார்த்த இலாபம் பெறுவீர்கள்.

**கும்பம்:** செயல்கள் தாமதம் ஆவதால் மனம் வருந்த நேரிடும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற கடுமையாகப் பாடுபட வேண்டும்.

**மீனம்:** எவரிடமும் வெளிப்படையான குணத்துடன் பழகுவீர்கள். உங்களின் நல்ல செயல்களை சிலர் பரிகாசம் செய்வர்.



**நீதிபதி:** "நீ அந்த ஆள் துப்பாக்கியால் சுட்டதை நேரில் பார்த்தாயா?"

**சாட்சி:** "இல்லை ஐயா! ஆனால் சுடும் சத்தத்தைக் கேட்டேன்."

**நீதிபதி:** "அது போதுமான சாட்சியம் ஆகாது."

உடனே சாட்சி, கூண்டிலிருந்து வெளியேறி நீதிபதிக்கு முதுகைக் காட்டிய வண்ணம் பலமாக சத்தம் போட்டுச்சிரித்தான். நீதிபதி அவனைக் கூப்பிட்டு நீதிமன்றத்தை அவமதித்ததற்காக நடவடிக்கை எடுக்கப் போவதாகச் சொன்னார்.

**சாட்சி:** "நீங்கள், நான் சிரித்ததைப் பார்த்தீர்களா ஐயா?"

**நீதிபதி:** "இல்லை. ஆனால் நீ சிரித்த சத்தம்தான் எல்லோருக்கும் கேட்டதே."

**சாட்சி:** "அது குற்றத்தை நிரூபிக்கப் போதுமானது இல்லையே ஐயா!"

- சம்பளம் மட்டுமில்ல... ருத்பேஸ்ட் வாங்கினாலும் ஆரம்பத்தில கொஞ்சம் தாராளமாகத்தான் செலவு பண்றோம்!
- தடுக்கி விழுந்தவுடன் அடிபட்ட இடத்தைப் பார்க்காமல், தடுக்கி விழுந்த இடத்தைப் பார்ப்பவனே மனிதன்!
- ஒரு ரூபாவை கண்டக்டர் மீதி தராதபோது, ரூபாயின் மதிப்பு சட்டென்று உயர்ந்துவிடுகிறது.



## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 5 | | | 9 | | | | |
| 4 | | | 7 | | | 3 | | |
| 3 | | | | | 1 | | | |
| | | 3 | | | 6 | 5 | 4 | |
| | 4 | | | 5 | | | 3 | |
| | 9 | 7 | | | | 6 | | |
| | | | 4 | | | | | 2 |
| | | 2 | | | 7 | | | 3 |
| | | | | 1 | | | 7 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. [உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்]. இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் [மீண்டும் மீண்டும்] வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

நேற்றைய சுடோக்குக்கான விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 8 | 5 | 2 | 1 | 7 | 3 | 9 | 6 |
| 9 | 7 | 3 | 8 | 4 | 6 | 1 | 2 | 5 |
| 2 | 1 | 6 | 3 | 9 | 5 | 7 | 4 | 8 |
| 1 | 6 | 9 | 4 | 5 | 3 | 2 | 8 | 7 |
| 3 | 4 | 2 | 6 | 7 | 8 | 9 | 5 | 1 |
| 8 | 5 | 7 | 9 | 2 | 1 | 4 | 6 | 3 |
| 7 | 9 | 1 | 5 | 8 | 4 | 6 | 3 | 2 |
| 5 | 3 | 4 | 1 | 6 | 2 | 8 | 7 | 9 |
| 6 | 2 | 8 | 7 | 3 | 9 | 5 | 1 | 4 |

# வரலாற்றில் இன்றைய தினம்

## 13.10.2017



1821 - மெக்சிகன் பேரரசின் சுதந்திரம் பகிரங்க மாக அறிவிக்கப்பட்டது.

1892 - எட்வெட் எமர்சன் பேனாட்டால், டி-1892வால்நட்சத்திரம்ஒளிப்படக் கருவிகளின் உதவியுடன் முதன் டு தலாகக் கண்டு பிடிக்கப்பட்டது.

1923 - துருக்கியின்தலைநகர்இஸ்தான்புல்இல்லை என்று அறிவிக்கப்பட்டது. இதன்படி அங்காரா தலைநகரானது

1943 - இத்தாலி, ஜேர்மனி மீது போர் அறி விப்புச் செய்தது.

1944 - லத்வியாவின் தலைநகர் றிகாவில் சோவியத்தின் செம்படை நிலை கொண்டது.

1976 - பொலிவியாவின் போயிங்-707 வானூர்தி விபத்துக்கு உள்ளான தில் சுமார் 100 பேர் உயிரிழந்த னர்.

1992-- எகிப்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் சுமார்ஆயிரம்பேர்உயிரிழந்தனர்.

1994 - இலக்கியத்துக்கான நோபல் பரிசு ஜப்பானைச் சேர்ந்த கென்பு றோக்கு வழங்கப்பட்டது.

2007 - கடற்படைக்கப்பல்அழிப்பு. மூன்று சடலங்கள் மீட்பு.

## நாளை

**14.10.2017**
சனிக்கிழமை

**புரட்டாதி 28**

திதி: நவமி கா. 06.08 வரை
நட்சத்திரம்: தசமி பி.இ. 04.15 வரை
சுபநேரம்: 03.02–04.32 வரை
ராகுகாலம்: 09.02–10.32 வரை

## 'இன்ஷா அல்லாஹ்' என்ற சொல்லின் பொருள்



'இன்ஷா அல்லாஹ்' (இறைவனை நாடினால்) என்ற வார்த்தை இறைவன் மீது பெரும் நம்பிக்கை வைத்துச் சொல் லப்படுகிற பொருள் பொதிந்த வார்த்தையாகும்.

இறைவன் திருக்குர்ஆனில் மனிதர்களை, "இறை நம்பிக்கை யாளர்களே" என்றுதான் அழைக்கிறான். மனிதர்கள் இறை நம்பிக்கையோடும், இறையச்சத்தோடும் வாழ வேண்டும் என்பதே அவனுடைய ஆசையும், விருப்பமும்.

இஸ்லாம் மார்க்கத்தில் இறை நம்பிக்கையும், இறையச்சமும் நாணயத்தின் இரு பக்கங்களைப் போல பிரிக்க முடியாதவை; ரயில் தண்டவாளங்களைப் போல இணை பிரியாதவை.

"உண்மையில் உயிரைக் கொடுப்பவனும், உயிரைப் பறிப்பவ னும் அல்லாஹ்வே ஆவான்" (திருக்குர்ஆன்3:156)

"நீங்கள் எங்கிருந்தபோதிலும் உங்களை மரணம் அடைந்தே தீரும். நீங்கள் மிகவும் உறுதியாகக் கட்டப்பட்ட கோட்டைகளில் இருந்தபோதிலும் சரியே!" (திருக்குர்ஆன்4:78) என்கிறது, திருமறை.

'இன்ஷா அல்லாஹ்' (இறைவனை நாடினால்) என்ற வார்த்தையை முஸ்லிம்கள் மட்டுமல்ல, இறைவனை நம்புகிற அனைவருமே பயன்படுத்தலாம். பிற மதத்தைச் சேர்ந்த பலர் இந்த வார்த்தையைப் பயன்படுத்தி வருவதைப் பார்க்கிறோம்.



# திருமணத் தடை நீக்குபவரே ஆஞ்சநேயர்

ஆஞ்சநேயரின் படங்களை நாம் வீட்டில் வைத்து வழிபாடு செய்ய லாம். சிலர் ஆஞ்சநேயரை வீட்டில் வைத்து வழிபாடு செய்யக்கூடாது என்று சொல்வதுண்டு.

ஏனெனில் பிரம்மச்சாரியான ஆஞ் சநேயரை வழிபாடு செய்பவரும் திருமணம்ஆகாமல்பிரம்மச்சாரியா கவே இருந்து விடுவார் என்ற மூட நம்பிக்கை பரவி இருப்பதே இதற்குக் கார ணம் ஆகும்.

ஆனால் உண்மையில் அனுமன் ராமபிரா னின் பக்தன் மட்டுமல்லாமல் ராமனின் உற்ற நண்பரும் ஆவார்.

சிவபெருமானின் அம்சமான ஆஞ்சநேயர் ஒரு பிரம்மச்சாரி மட்டுமல்ல ஒரு சிரஞ்சீவியும் ஆவார். பிரிந்து கிடந்த ராமன், சீதையை மீண்டும் ஒன்று சேர்த்தவர் வாயு புத்திரனான ஆஞ்சநேயரே ஆவார்.

இந்திரஜித்தின் நாகாஸ்திரத்தினால் உயிருக் குப் போராடிய லட்சுமணனை சஞ்சீவி மூலி கையைக் கொண்டு வந்து உயிர்ப்பித்தவரும் ஆஞ்சநேயரே. தமது நண்பன் சுக்ரீவனுக்கும் நல்வழி காட்டியவர் ஆஞ்சநேயரே.

எமது வீடுகளில் இருக்க வேண்டிய மூர்த்தி களில் ஆஞ்சநேயரும் ஒருவர். பஞ்சமுக ஆஞ் சநேயரே வீட்டில் வைத்து வழிபாடு செய்யத் தக்கவர். ஆஞ்சநேயரின் வடிவங்களில் சஞ் சீவிராய ஆஞ்சநேயரே மிகவும் வலிமை மிக்கவர். இத்தகைய ஆஞ்சநேயரை வீட்டில் வைத்து வணங்கும்போது கட்டாயம் ராமபிரா னின் படம் இருக்க வேண்டும்.

வழிபாடு செய்யும் காலத்தில் ராம நாமத்தினை நாம் சொல்ல வேண்டும். எமது அனைத்து விதமான கோரிக்கைகளையும் அவரிடம் வைத்து வணங்க வேண்டும். கோரிக்கைகள் ஏதுமில்லாமல் ஆஞ்சநேயரை வழிபாடு செய் யக்கூடாது. அவ்வாறு கோரிக்கை இல்லாமல் செய்யும் வழிபாட்டால் வழிபாடு செய்பவர் ஆஞ்சநேயர் போல் பிரம்மச்சாரியாகவே இருந்து விட வாய்ப்புண்டு என்று கருதப்பட்டு வருகிறது.எனவே, அனுமனிடம் திரும ணத் தடை நீக்குமாறு வேண்டுவது உத்தமம். ஆஞ் சநேயரிடம் வைக்கும் கோரிக்கைகள் அனைத்தும் கண்டிப்பாக நிறைவேறும் என்று சொல்லப்படுகிறது.

ராமனை துதிக்கும் மக்களின் துதியை கேட்ப தற்காகவே ஆஞ்சநேயர் சிரஞ்சீவியாக வாழ்ந்து மக்களின் விருப்பங்களை நிறை வேற்றிக் கொண்டிருக்கிறார்.

வரையறுக்கப்பட்ட லங்கா உரக் கம்பனி
CEYLON FERTILIZER COMPANY LTD

இலங்கை அரச உரக்கூட்டுத்தாபனமான நாம், மேதகு ஜனாதிபதி அவர்களின் வழிகாட் டலில் கௌரவ அமைச்சரின் செயற்படுத்தலின் கீழ் முன்னெடுக்கப்படும் நஞ்சு விசம் அற்ற நாடு செயற்திட்டத்தை வலுவுடையதாக மாற்ற மூன்று புதிய கரிம உர வகைகளை இலகுவில் பெற்றுக் கொள்ளக் கூடியதாக அறிமுகம் செய்துள்ளோம்.

சேதன கூட்டெரு



நன்கு உலர்ந்த
99% களை விதைகள்
அற்ற இயற்கை எரு

உள்ளீடுகள்:
கோழி எரு .1
மாட்டு எரு .2
பசுந்தாள் எரு .3
இயற்கை உள்ளீடுகள் .4

சேதன குருளை எரு



கூட்டெருவை விட
4 மடங்கு அதிக
தாவர போசனை
பிரமானம்

உள்ளீடுகள்:
வேப்பம்பிண்ணாக்கு.1
ஆமணக்குப்பிண்ணாக்கு.2
இறப்பர்,மரமுந்திரிகை விதைஓடு.3
சிப்பித்தூள்,HERP.4
அரிசித்தவிடு,குறுனல்.5

சேதன திரவ உரம்



வரட்சி, நோய்த்தாக்கத்தால்
பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு
ஊட்டமளித்து
வளர்ச்சியை சீராக்கும்

உள்ளீடுகள்:
தாவரங்கள் பழவகைகளின் இரசம்.1
விலங்கு எலும்புக் கூறுகள்.2
தாவர விலங்கு புரத நொதிய சேர்மானம்.3
16L tank ற்க்கு 70ml போதுமானது.4

அனைத்து கமநல சேவை நிலையங்கள் மற்றும் அங்கிகரிக்கப்பட்ட விற்பனை முகவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்

| மாவட்டம் | களஞ்சியசாலை | தொலைபெசி |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | கோண்டாவில் | 778268430 |
| வவுனியா | | 774486076 |
| கிளிநொச்சி | தபால் நிலையம் அருகில் | 778268430 |
| முல்லைத்தீவு | ஒலுமடு | 773789602 |
| மன்னார் | முருங்கன் | 774486076 |


அருகில் உள்ள களஞ்சியசாலைக்கு விஜயம் செய்து மேலதிக தகவல்களை பெற்றுக்கெள்வதோடு அனைத்து உரவகைகளுக்கும் விசேட விலைகளிவையும் பெற்றுக்கொள்ளலாம்

வ/ப இலங்கை உரக் கம்பனி
(கமத்தொழில் அமைச்சு)
குனுப்பிட்டிய, வத்தளை

# மனிதன் காணும் வயது முதிர்ச்சி

## புரதங்களின் உட்புற உறுதிநிலைக் குலைவின் கூறு

சிவசங்கரி




உலகத்தில் பிறந்த அனைத்து உயிரினங்களும் ஒரு நாள் இறப்பை சந்திக்கத்தான் வேண்டும் என்பது நியதி. ஆனாலும் அது ஏன் என்பதற்கான பதில் மட்டும் இது வரை யாருக்குமே தெரியாது.

அதேசமயம் இந்த உலகத்தில் பிறக்கும் ஒவ்வொருவரும் எப்படி இறந்து போகிறார்கள் என்று கேட்டால் அதற்கு எம்மால் ஓரளவுக்கு பதில் சொல்ல முடியும். அது பிறந்த ஒவ்வொரு உயிரினங்களும் இறந்து போவதற்கு காரணம் வயதாகிப்போதல் அல்லது மூப்படைவதுதான் என்பதாக அமைந்திருக்கும்.

### 'இ.எல்.எல்.பி' புரதங்கள்

ஆனால் தற்போது அமெரிக்காவின் 'சால்க்' ஆய்வு மைய விஞ்ஞானி 'மார்ட்டின் ஹெட்சர்' நியூரான்கள் என்னும் நரம்பு உயிரணுக்களின் மையக்கருவான நியூக்ளியசின் மேற்புறத்தில் 'இ.எல்.எல்.பி' (ELLP) என்னும் ஒரு வகை புரதங்கள் இருக்கின்றன என்கிறார்.

'இ.எல்.எல்.பி' என்றால் மிக மிக நீண்ட ஆயுளை உடைய புரதங்கள் என்று பொருள். நியூக்ளியசிற்கு உள்ளேயும், நியூக்ளியசிலிருந்து வெளியேயும் என்னென்ன பொருள்கள் செல்ல வேண்டும் என்பதை தீர்மானிப்பதே இந்தப் புரதங்கள்தான். இதனால் இவற்றுக்கு "போக்குவரத்து வழித்தடப் புரதங்கள்" என்று மற்றொரு பெயரும் உண்டு.

முக்கியமாக நச்சுப்பொருள்கள் நியூக்ளியசிற்கு உள்ளே செல்லாமல் தடுப்பது இந்தப் புரதங்களே. உடலின் பிற புரதங்கள் சேதமடைந்தால் உடனே அவை புதிய புரதங்களால் நிரப்பப்படும்.


ஆனால் வேதியியல் மாற்றங்கள் மற்றும் பிற பாதிப்புகளால் 'இ.எல்.எல்.பி' புரதங்கள் சேதமடையும்போது அவற்றுக்கு மாற்றாக புதிய புரதங்கள் உற்பத்தி செய்யப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

> நியூரான்கள் தவிர்த்த உடலிலுள்ள பிற உயிரணுக்களின் செயற்பாடுகள் குறையும்போது அவை அவற்றின் சேதமடைந்த பழைய புரதங்களை அழித்து புதிய புரதங்களை உற்பத்தி செய்துவிடுகின்றன. இதனால் அவற்றின் செயற்பாடு மீண்டும் அதிகரித்துவிடுகிறது. ஆனால் நியூரான்களிலுள்ள புரதங்கள் ஒருமுறை சேதமடைந்தால் அவற்றுக்கு மாற்றாக புதிய புரதங்கள் உற்பத்தி செய்யப்படுவதில்லை என்பது துரதிர்ஷ்டவசமான செய்தியே.

இதன் காரணமாக பல நச்சுப்பொருள்கள் நியூக்ளியசிற்கு உள்ளே சென்று நியூரான்களின் உள்ளே இருக்கும் மரபுப்பொருளான மரபணுவைப் பாதிக்கின்றன. இதனால் மரபணுக்களின் செயற்பாடுகள் மாற்றப்பட்டு உயிரணுக்கள் மூப்படைகின்றன என்று கண்டறிந்துள்ளனர் 'மார்ட்டின் ஹெட்சர்' தலைமையிலான ஆய்வாளர்கள்.

### புரதங்களின் ஆயுள்

பொதுவாக உடலிலுள்ள புரதங்களின் வயது இரண்டு அல்லது மூன்று நாள்கள் மட்டுமே. அதாவது மூன்று




நாள்களுக்குப் பின்னர் அவை செயலிழந்து போகும். ஆனால் 'இ.எல்.எல்.பி' (24ஆம் பக்கம் பார்க்க...)

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1406 சீட்டிழுப்பு திகதி 2017.10.12
வெற்றி இலக்கங்கள் 05 09 21 52 Y
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 10,370,732/-

சீட்டிழுப்பு வாரம்: 43
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2017.10.12
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 62,063,805/-
அத கோடிபதி
வெற்றி இலக்கங்கள் 27 49 69 70 H

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள் சீட்டிழுப்பு வாரம் ▶ 714
சீட்டிழுப்பு திகதி ▶12.10.2017 வியாழக்கிழமை
N 08 21 59 63
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 41,876,684/-
தொ.பே : 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் ▶ 082
சீட்டிழுப்பு திகதி ▶ 12.10.2017 வியாழக்கிழமை
Development Fortune
வெற்றி இலக்கங்கள் 45 49 62 64
சுப்பர் இலக்கம் 01
அதிர்ஷ்ட மாதம் மார்ச்
அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் ரூ. 17, 833, 374/=
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4, 230, 818/=
அடுத்த ஜக்பொட் ரூ. 3, 399, 964/=
2017.10.14 ம் திகதி சனிக் கிழமை இளஞ்சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

## கேள்வி அறிவித்தல். நல்லூர் பிரதேச சபை
## மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதி
## (PSDG - 2017, கட்டம் - I, II தொடர்ச்சி .. )

01. தலைவர் பெறுகைக்குழு நல்லூர் பிரதேச சபை கொக்குவில் அவர்களினால் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ் குறிப்பிட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு வேலைகளுக்காக கோருகின்றார்.

02. தேசிய போட்டிக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் 2016.09.30 ஆம் திகதி 04/ 2016 (1) ஆம் இலக்க பொதுநிதி சுற்றறிக்கையின்படி வடமாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி புனரமைப்பு வேலைகளுக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாணதொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிக்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் 'தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில் எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் - 021-222-2700 – 021-300-2508) இல் இருந்து மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், பெறுகைக்குழு நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில் என்னும் இடத்திலிருந்து 2017.10.13ம் திகதியிலிருந்து 2017.10.26 ம் திகதி வரை அலுவலக நாள்களில் மு.ப 9.00 தொடக்கம் பி.ப 3.00 வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2000.00 (வரிநீங்கலாக) பணமாகச் செலுத்திபெற்றுக் கொள்ளலாம்.

07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில் என்னும் முகவரிக்கு 2017.10.27 ம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08. கேள்வி கோரப்பட்டுள்ள சகல வீதி வேலைகளுக்குமான கேள்வியானது செல்லுபடியாகும் காலம் கேள்வி சமர்ப்பிக்கும் இறுதி திகதியிலிருந்து 63 நாள்கள் ஆகும்.

09. கேள்வி பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | வேலைவிபரம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (Vat நீங்கலாக) | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் (VAT,NBTநீங்கலாக) | வேண்டப்படும் தரம் | கேள்வி பிணை வைப்பு (ரூபா) | ஒப்பந்த காலம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | கருவேப்புலம் வீதி, காப்பெற் வீதியாக (Asphalt Road) புனரமைப்பு | 2.84 | 2,000.00 | C8 | 28,500.00 | 45 நாள்கள் |
| 02 | சம்பியன் வீதி காப்பெற் வீதியாக (Asphalt Road) புனரமைப்பு | 4.54 | 2,000.00 | C8 | 45,500.00 | 45 நாள்கள் |
| 03 | முத்தட்டுமட வீதி காப்பெற் வீதியாக (Asphalt Road) புனரமைப்பு | 4.04 | 2,000.00 | C8 | 40,500.00 | 45 நாள்கள் |
| 04 | பிள்ளையார் வீதி, காப்பெற் வீதியாக (Asphalt Road) புனரமைப்பு | 3.04 | 2,000.00 | C8 | 30,500.00 | 45 நாள்கள் |

குறிப்பு:-பந்தி 2இல் கூறப்பட்ட நிபந்தனைகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளில் வேண்டப்படும் தரம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு இல்லாதவிடத்து அதனிலும் கூடிய தரம் சமர்ப்பித்த கேள்விகள் பரிசீலிக்கப்படலாம்.

10. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் 2017.10.23ஆம் திகதி நல்லூர் பிரதேச சபை கலாச்சார மண்டபத்தில் மு. ப. 10.00 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்திற்கு ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் கலந்துகொள்ளமுடியும்.

**தலைவர்**
**பெறுகைக்குழு,**
**நல்லூர் பிரதேசசபை,**
**கொக்குவில்.**

**2017.10.13**

# உடலுக்கு விஷமாகும் மிளகுத்தூள்

ஒவ்வொரு வீட்டு சமையலறையிலும் இருக்கும் ஒரு பொருள்தான் மிளகு. இந்த மிளகில் ஏராளமான நன்மைகள் அடங்கியுள்ளன என்று அனைவருக்குமே தெரியும். இது உணவில் கார சுவையைக் கொடுப்பதோடு, தனித்துவமான வாசனை யும் கொண்டுள்ளதால் உணவின் மணமும் அற்புதமாக இருக்கும்.

மிளகில் ஆன்டிஒக்ஸிடன்ட்டுகள், நொதிகள், புரதங்கள், விற்றமின்கள் போன்ற உடலின் அத்தியாவசிய செயற்பாட்டிற்கு தேவையான அனைத்து சத்துக்களும் உள்ளது. என்ன தான் ஆரோக்கியமான உணவுப் பொருளாக இருந்தாலும், ஒருவர் தங்கள் உணவில் மிளகை அளவுக்கு அதிகமாக சேர்த்தால், பல தீவிர பிரச்சினைகளை சந்திக்க நேரிடும். இங்கு மிளகை உணவில் அதிகம் சேர்ப்பதால் சந்திக்கும் பக்கவிளைவுகள் பட்டியலிடப்பட்டுள்ளன.

**இரைப்பை**

மிளகை அதிகமாக உணவில் சேர்த்தால், இரைப்பை, உணவுக்குழாய் பிரச்சினைகள் ஏற்படும்.

**வயிற்று எரிச்சல்**

அளவுக்கு அதிகமாக மிளகை உணவில் சேர்ப்பதன் மூலம், வயிற்றில் எரிச்சல் மற்றும் அது சார்ந்த அசௌகரியம் ஏற்படும். எனவே மிளகை அளவாக உணவில் சேர்த்துக் கொள்ளுதல் நன்று.

**சுவாசப் பிரச்சினைகள்**

மிளகை அதிகம் சாப்பிட்டால் சுவாசப் பிரச்சினை களைச் சந்திக்க வேண்டியிருக்கும். குறிப்பாக இதனை அளவுக்கு அதிகமாக சேர்க்கும் போது தொண்டையில் எரிச்சல், ஆஸ்துமா பிரச்சினைகள் மற்றும் இதர சுவாசப் பிரச்சினைகள் ஏற்படும்.

**சரும வறட்சி**

ஆய்வுகளின்படி மிளகு தூளை ஒருவர் அதிகமாக உணவில் சேர்க்கும் போது வறட்சி ஏற்படும். அசிங்கமாக தோல் உரிய ஆரம்பிக்கும். எனவே ஏற்கனவே வறட்சியான சருமம் கொண்டவர்களானால், மிளகை அதிகம் உணவில் சேர்ப்பதைத் தவிர்ப்பது நல்லது. மேலும் அதிக மென்மைத் தன்மையுடைய சருமம் உள்ளவர்களும், இதைத் தவிர்ப்பது நல்லது.

**கர்ப்ப காலம்**

கர்ப்ப காலத்தில் பெண்களின் உடல் மிகவும் மென்மையாக இருக்கும். கர்ப்பிணிகள் எப்போதும் மிளகில் இருந்து சற்று விலகி இருப்பது நல்லது. இல்லாவிட்டால், அது மிகுந்த அசௌகரியத்தை உண்டாக்கும். ஒரு வேளை காரமாக சாப்பிட ஆசை இருந்தால் மிளகை அளவாக எப்போதாவது சிறிது சேர்த்துக் கொள்ளுங்கள். அளவுக்கு அதிகமாக கர்ப்பிணிகள் மிளகை உணவில் சேர்த்தால் கருச்சிதைவு ஏற்படும் வாய்ப்பு அதிகம் உள்ளது.

**தாய்ப்பால் கொடுக்கும் போது...**

தாய்ப்பால் கொடுக்கும் பெண்களும் மிளகைத் தவிர்ப்பது நல்லது. ஏனெனில் மிளகை தாய்ப்பால் கொடுக்கும் பெண்கள் அதிகம் சேர்த்துக் கொண்டால், அது தாய்ப்பாலின் சுவையை மாற்றுவதோடு, குழந்தைக்கு உணவு சமிபாடு அடைதல் ரீதியான பிரச்சினைகள்ள ஏற்படுத்தும்.

## மரண அறிவித்தல்

### திருமதி பவானி தியாகராஜா

43, இராஜவீதி, நல்லூர்,யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி பவானி தியாகராஜா நேற்று (12.10.2017) வியாழக்கிழமை காலை 4.30 மணியளவில் காலமானார்.

அன்னார் கனகசபைமுதலி தியாகராஜாவின் அன்பு மனைவியும் யோகேந்திரன், வத்சலா, ஜெயக்குமார், வனிதா, தயாளன், வாசுகி தியாகராஜா, நிசங்கன் ஆகியோரின் அன்புத்தாயாரும் நிசங்கன் லவீனாவின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

## தேவை

ஸ்ரான்லி வீதி, காட்வெயார் கடை, போட்டோ கொப்பி கடைக்கும் வேலையாள்கள் தேவை. யாழ்ப்பாணம், நல்லூர் எல்லைக்குள் வசிப்பவர்கள் மட்டும்.

**தொடர்பு - 077 757 0150**

## தவறிவிட்டது

அல்வாய் ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் சுற்றாடலில் Samsung Galaxy J5 ரக கைத்தொலைபேசி தவறி விழுந்து விட்டது.

**கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும் :075 788 7333**

**குறியீடுகள் : 8 806088 390802 356388/08/522799/8**

**ART Code : Sm- J510FZKNNEE**

**Colour : Black**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**தோற்றம்** 08 . 08 . 1957



**மறைவு** 24 . 09 . 2016

### அமரர் நடேசன் பாலச்சந்திரன்

திதி : அபர பக்க நவமி (13 . 10 . 2017)

எம் குடும்பத்தின்
மூத்த பிள்ளையும் நீரே !!
செல்லப்பிள்ளையும் நீரே !!
அதனாலோ என்னவோ வாழ்வில் நினைத்ததெல்லாம் சாதித்தீர்கள்
மணவாழ்வின் மூவிரு திங்களில் அண்ணியையும் இழந்து
முதன் முதலாய் மனம் கலங்கி நின்றபோது
நாமும் கலங்கி நின்றோம்-உமக்காக.
மூத்த பிள்ளையாதலால் இன்னுமோர்
தந்தை நீரே எம் ஐவருக்கும்
நீர் உதித்த கருவறையில் நாமும் -ஜனித்தது தான்
நாம் செய்த பாக்கியமே !!
கடவுள் தந்த வரம் போல -எம்
கஷ்டத்தில் எல்லாம் துணை நின்றீர்.
சகோதர பாசத்தால் சந்தோசத்தில்
திளைக்கவைத்து -கடைசியில்
பாச வலையை பிரிக்க வந்தான்
காலனவன் பாதி வயதினிலேயே
அகவை என்ன உமக்கு -ஆக 59 தானே அண்ணா !
இன்னுமொரு ஜென்மம் இருந்தால் -உம்முடன்
கூடிப்பிறக்க வேண்டி நிற்போம்.
என்றும் உங்கள் அழியா நினைவுகளுடன்

இல . 24 கந்தபுராண வீதி,கந்தர்மடம்

சகோதரி மற்றும் சகோதரர்களும்.

MAJESTIC CINEPLEX
A CEYLON THEATRES CINEMA Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்










விசாரணை 021- 2227712
facebook. MajesticCineplexSL
www.ceylontheatres.lk

## மனிதன் காணும் வயது முதிர்ச்சி

(23ஆம் பக்கத் தொடர்ச்சி)

புரதங்களின் வயதோ மிக மிக அதிகம். உதாரணமாக எலிகளின் உடலிலுள்ள 'இ.எல்.எல்.பி' புரதங்களின் வயதும் எலியின் வயதும் ஒன்று என்கிறார் மார்ட்டின் ஹெட்சர்.

இத்தகைய விசேட பண்புடைய 'இ.எல்.எல்.பி' புரதங்களையும்.இந்தப் புரதங்களுக்கும் மூப்படைதலுக்கும் தொடர்பு உண்டு என்பதையும் உலகில் முதன்முதலில் கண்டறிந்த பெருமை ஆய்வாளர் 'மார்டின் ஹெட்சரையே' சேரும் என விஞ்ஞானிகள் குறிப்பிடுகின்றனர்.

மூப்படைதல் தொடர்பான இதற்கு முன்னைய ஆய்வுகளில் இயல்பான மரபணுச் செயற்பாடுகளில் ஏற்படும் மாற்றங்களே மூப்படைதலுக்குக் காரணம் என்று கூறப்பட்டது. ஆனால் உயிரணுக்களின் நியூக்ளியசில் இருக்கும் 'இ.எல்.எல்.பி' புரதங்கள் பாதிப்படைவதால் நியூக்ளிய சிற்கு உள்ளே நச்சுப்பொருள்கள் சென்று உள்ளிருக்கும் மரபணுவை சேதப்படுத்துவதாலேயே மரபணு செயற்பாடுகள் மாற்றமடைகின்றன என்று ஆய்வாளர் மார்ட்டின் ஹெட்சர் கண்டறியும் வரை மரபணுச் செயற்பாட்டு மாற்றங்களுக்கான காரணம் என்னவென்று உலகின் பிற ஆய்வாளர்களுக்குத் தெரியாது என்பதும் குறிப்பிடத்தக்கது.

**உயிரணுக்களில் நிகழும் புரதச் சமன்பாடு**

உடலின் முக்கிய பாகங்களான இதயம் மற்றும் மூளையின் செயற்பாடுகள் குறைந்து போவதுதான் மூப்படைதலின் முதல் மற்றும் அடிப்படை அறிகுறி. இந்தப் பாகங்களின் உயிரணுக்களில் நிகழும் புரதச் சமன்பாடு (protein homeostasis) அல்லது உட்புற உறுதி நிலை (internal stability) பாதிக்கப்படுவதே அவற்றின் செயற்பாடு குறைவதற்கான முக்கிய காரணம் என்கிறது அண்மைய ஆய்வு முடிவுகள். ஆய்வாளர் மார்ட்டின் ஹெட்சரின் ஆய்வு முடிவுகளில் மூளை உயிரணுக்களான நியூரான்களின் செயற்பாடுகள் குறைவதற்கு 'இ.எல்.எல்.பி' புரதங்கள் சேதமடைவதே காரணமாக இருக்கக்கூடும் என்று கண்டறியப் பட்டுள்ளது.

நியூரான்கள் தவிர்த்த உடலிலுள்ள பிற உயிரணுக்களின் செயற்பாடுகள் குறையும் போது அவை அவற்றின் சேதமடைந்த பழைய புரதங்களை அழித்துப் புதிய புரதங்களை உற்பத்தி செய்துவிடுகின்றன. இதனால் அவற்றின் செயற்பாடு மீண்டும் அதிகரித்து விடுகிறது. ஆனால் நியூரான்களிலுள்ள புரதங்கள் ஒருமுறை சேதமடைந்தால் அவற்றுக்கு மாற்றாக புதிய புரதங்கள் உற்பத்தி செய்யப்படுவதில்லை என்பது துரதிர்ஷ்டவசமான செய்தியே.

## மரண அறிவித்தல்

### நவரட்ணம் ஸ்ரீதரன் (ராஜன்)



யாழ்ப்பாணம், இருபாலையை பிறப்பிடமாகவும் Canada, Scarbrough வசிப்பிடமாகவும் கொண்ட நவரட்ணம் ஸ்ரீதரன் (ராஜன்) கடந்த (10.10.2017) செவ்வாய்க் கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நவரட்ணம் (நாராணி) மற்றும் நாகபூசணி (கிளி) தம்பதி யினரின் அன்பு மகனும் சாந்தன், பிரதீபன், மிதுனா, பார்த்தீபன், ரவிராஜ் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும் .இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திரு .திருமதி வரதராஜா
ஜெகதீஸ்வரி குடும்பத்தினர்.
(கிளி அத்தை குடும்பம்)

**விளையாட்டரங்க வீதி,**
**கோப்பாய்தெற்கு, கோப்பாய்.**

**Sharwn Balasingam ( Cousin) Canada : 001 647 839 6016**
**Sanjeev Balasingam (Cousin) Canada : 001 647 835 1062**
**Ravi Navaratnam (Brother) : 001 647 854 1313**

## மரண அறிவித்தல்



### இரத்தினசபாபதி இராஜபாலன் (கண்ணன்)

ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும், ஸ்ரேசன் வீதி, கோண்டாவிலை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட இரத்தினசபாபதி இராஜபாலன் (கண்ணன்) (11.10.2017) புதன்கிழமை காலமானார்.

அன்னார் இரத்தினசபாபதி (சிவானந்தம்) மகேஸ்வரி தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற நாகராசா மற்றும் சரஸ்வதி தம்பதியரின் அன்புமருமகனும் ரஜனியின் (ரஜோ) அன்புக்கணவரும் கிஷோவர்மன், கபிலஷா, றோசினி, கிசானன் ஆகியோரின் அன்புத்தந்தையும் சக்திராஜா (கொழும்பு), மாலினி, வசந்தராஜன், ரோகினி, குகதாஸன் (மாவட்ட நீதிமன்றம் ஊர்காவற்றுறை) ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.10.2017) வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**49/4, ஸ்ரேசன் வீதி,**
**(கோண்டாவில் உப்புமட விநாயகர் முன் வீதி),**
**கோண்டாவில். 077 3075 330, 077 7563 710**

தகவல்:
குடும்பத்தினர்

## வடக்கில்...

இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்து இன்றைய கடையடைப்புக்கு தமது முழுமையான ஆதரவை வழங்கியுள்ளது.
இது தொடர்பில் சங்கம் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,
போராடித்தான் இவற்றைப்பெறவேண்டும் என்ற நிலைக்கு தமிழர்கள் தொடர்ந்தும் தள்ளப்படுகின்றனர். எமது இனத்தின் மென்போக்கையும், விட்டுக்கொடுப்புக்களையும் அரசும், அதில் அதிகாரம் மிக்கவர்களும் இனிமேலும் புறந்தள்ள முடியாது. பன்னாடுகள் சுட்டிக்காட்டியும் தமிழர்களையும், தமிழினத் தலைவர்களையும் பேரின அரசு தொடர்ந்தும் ஏமாற்றிவருகின்றது.
இதனை மக்களின் ஒட்டுமொத்த எழுச்சியாக வெளிப்படுத்த இன்று நடைபெறும் முழுமையான கடையடைப்புக்கு அனைவரும் ஒத்துழைத்து தமது ஆதரவை வழங்க வேண்டுமென்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள்விடுக்கின்றது-என்றுள்ளது. (4)

## மைத்திரி...

கள் எவையும் விடுக்கப்படவில்லை. எனினும் சனிக்கிழமை யாழ்ப்பாண நிகழ்வுக்காக அன்றைய தினத்தில் வேறு எந்த நிகழ்விலும் கலந்துகொள்வதைத் தவிர்த்து வந்த அவர், நேற்று அத்தகைய வேறு நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்குச் சம்மதித்து சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவித்திருந்தார் என்று உதயன் அறிந்தான்.
தமிழ் அரசியல் கைதிகளின் விவகாரம் தொடர்பில் பேசுவதற்கு நேரம் ஒதுக்கித் தருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரச தலைவரிடம் கோரிக்கை விடுத்திருந்தது. அதற்கான நேரமும் ஒதுக்கப்படவில்லை. இதனை அடுத்தே அரச தலைவரின் நிகழ்வில் கலந்துகொள்ளாமல் இருப்பது என்கிற இறுக்கமான முடிவை சம்பந்தர் எடுத்திருப்பார் என்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.
நிகழ்வில் தான் பங்கேற்க மாட்டார் என்பதை நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு நேற்றைய தினமே தொலைநகல் ஊடாக அறிவித்தார் என்று அறிய முடிந்தது. நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன் மற்றும் சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் இன்றைய தினம்அறிவிக்கவுள்ளனர்என்றும்அறியவந்தது.
இதேவேளை, அரச தலைவரின் வருகையையொட்டி தேசிய தமிழ்த் தின விழா நடைபெறும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வளாகத்தைச் சுற்றி பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் நேற்றுமுதலே போடப்பட்டுள்ளன. ஆயுதம் தாங்கிய படையினர் காவலுக்கு நிறுத்தப்பட்டுள்ளனர்.
(உ-5-101)

## உறுதியான...

அவர் நேற்று விடுத்துள்ள நீண்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.
தமிழ் மக்களின் போராட்டங்களை கொழும்பு அலட்சியப்படுத்தியதன் விளைவே இன்றைய போராட்டம் எனக் குறிப்பிட்டுள்ள அவர், கடந்த காலங்களில் பலமுறை அரசியல் கைதிகள் போராட்டம் நடத்தியபோதும் அவர்களுக்கு நீதி கிடைக்கவில்லை என்றும் தெரிவித்தார்.
சாட்சிகளுக்குப் பாதுகாப்பு இல்லை என்று கூறுவது நொண்டிச்சாட்டு என்று அவர் குறிப்பிட்டுள்ளார். "வவுனியா இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் இல்லையா? ஒரு பொலிஸ் நிலையத்தால் நீதிமன்றச் சாட்சிகளுக்குப் பாதுகாப்பு வழங்கமுடியாதா?" என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.
குமாரபுரம்'படுகொலை வழக்கில் எதிரிகளுக்கு பாதுகாப்பில்லை என்று கூறி வழக்கை இடமாற்றி படையினரை விடுவித்த அரசு, சாட்சிகளுக்குப் பாதுகாப்பில்லை என்று கூறி வழக்கை அநுராதபுரத்துக்குமாற்றி தமிழ் அரசியல் கைதிகளை தண்டிக்க முனைகின்றது என்றும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.
கடந்த காலங்களில் கிளர்சியில் ஈடுபட்ட ஜே.வி.பியினருக்கு பொதுமன்னிப்பு வழங்க முடியும் என்றால், தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஏன் வழங்க முடியாது என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (உ-5)

## விபத்தில்...

தப்பட்டிருந்த அரை சொகுசுப் பேருந்தை வீதியிலிருந்து பொலிஸார் அகற்றாத நிலையில் அதன் மீது மோட்டார் சைக்கிள் மோதியதில் விபத்து நிகழ்ந்தது.
கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்தை நோக்கி வந்து கொண்டிருந்த பேருந்து நேற்றுமுன்தினம் கட்டுப்பாட்டை இழந்து பாலத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. பேருந்தில் மோதியே இந்த விபத்து நடந்துள்ளது. விபத்தில் சிக்கிய பேருந்து அகற்றப்படாது நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் அதனுடன் மோதினார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
விபத்துத் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (உ-ற-ரி2.35)

## மைத்திரி, சம்பந்தர்...

மைச்சர் உள்பட, மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களை பொது அமைப்புகளும், அரசியல் கட்சிகளும் கேட்டுக்கொள்வதாக நேற்றிரவு அனுப்பப்பட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலர் செ.கஜேந்திரனின் மின்னஞ்சலில் அனுப்பி வைக்கப்பட்ட இந்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:
அநுராதபுரத்தில் மூன்று தமிழ் அரசியல் கைதிகள் தொடர் உணவு ஒறுப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். தீர்க்கமான முடிவெடுக்கும் அதிகாரமுடைய அரச தலைவரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டிருந்த போதிலும் கூட இதுவரை எந்தவொரு காத்திரமான நடவடிக்கையும் கைதிகளின் கோரிக்கை தொடர்பில் எடுக்கப்படவில்லை.
இது தொடர்பில் அரச தலைவருக்கு அழுத்தம் கொடுக்க வேண்டிய பொறுப்பிலிருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் இதுவரை எந்தவொரு காத்திரமான நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பதுடன், அரசை உள்நாட்டிலும் பன்னாட்டு மட்டத்திலும் காப்பாற்றி வருகின்றார்.
தமிழ் அரசியல் கைதிகள் மூவரினதும் கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு அரச தலைவர் மீதும் எதிர்கட்சித் தலைவர் மீதும் அழுத்தம் கொடுக்கும் முகமாக இன்று வெள்ளிக்கிழமை வடக்கு மாகாணம் தழுவிய வகையில் கதவடைப்புப்போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.
அரசியல் கைதிகள் தங்களின் உயிர்களைப் பணயம் வைத்துப் போராடிவருகின்ற நிலையில், அவர்களது நியாயமான கோரிக்கைகளைப் பொருட்படுத்தாது, அரச தலைவரும், எதிர்கட்சித் தலைவரும் பல்வேறு நிகழ்வுகளில் பங்குகொள்வதற்காக யாழ்ப்பாணத்துக்கு நாளை வருகை தரவுள்ளனர். இது தமிழ் மக்களுக்கு எந்தவகையிலும் ஏற்புடையது அல்ல என்பதுடன், வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியதுமாகும்.
உணவு ஒறுப்பில் ஈடுபட்டுவரும் அரசியல் கைதிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றாது அரச தலைவரோ, எதிர்க்கட்சித் தலைவரோ வெறுமனே நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக வருகை தருவார்களாக இருந்தால், அவர்களுக்கு எதிராக காத்திரமான எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டிய நிலைக்கு தமிழ் மக்கள் நிர்பந்திக்கப்படுவார்கள் என்றுள்ளது.
இந்த அறிக்கையின் கீழே ஏற்பாடு, பொது அமைப்புக்களும் மற்றும் அரசியல் கட்சிகளும் என்று மாத்திரம் குறிப்பிடப்பட்டுள்ளது. இன்றை போராட்டத்துக்கு அழைப்பு விடுத்து விடுக்கப்பட்ட அறிக்கையில் அமைப்புகள் அரசியல் கட்சிகள் என 19 பேரினது கையெழுத்துக்கள் காணப்பட்டன. ஆனால் நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையில் ஒப்பம் எதுவும் வைக்கப்பட்டிருக்கவில்லை.
முன்னதாக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்க அறையில் நேற்று மாலை பத்திரிகையாளர் சந்திப்பு நடைபெறவுள்ளதாக, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலர் செ.கஜேந்திரன் அறிவித்திருந்தார். செய்தியாளர்கள் அங்கே சென்ற பின்னர், தாங்கள் கூடி முடிவெடுத்து ஊடகங்களுக்கு அறிவிப்போம் என்று தெரிவித்தார்.
பல்கலைக் கழகத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரையும், பத்தி எழுத்தாளர்கள் சிலரையும் தவிர வேறு எவரையும் காண முடியவில்லை என்று எமது செய்தியாளர்கள் தெரிவித்தனர்.
இந்த விடயங்கள் தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலரிடம் வினவியபோது, "கையெழுத்திடுவதற்கு நேரம் போதாமல் போய்விட்டது. 19 அமைப்புக்களும் இணைந்துதான் முடிவெடுத்தோம்" என்று குறிப்பிட்டார். (உ-5.101)

## வளத்தை...

கொழும்பு, ஒக். 13
இந்தியாவானது இலங்கையின் வளங்களை வாங்குவதை உடனடியாக நிறுத்திக் கொள்ளாவிட்டால் இலங்கை மக்கள் இந்தியாவுக்கு எதிராகத் திரும்பும்நிலை உருவாகும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச.
இது தொடர்பில் ஜப்பானில் இருந்தபடி மகிந்த ராஜபக்ச மேலும் தெரிவித்ததாவது:
நாங்கள் இங்கே சிரமப்பட்டு செய்த திட்டத்தை இந்தியா இலகுவில் எடுத்துக்கொண்டு செல்ல முயல்கிறது. இது நீதியல்ல. அவர்கள் எங்களுடன் இதுபற்றியெல்லாம் பேசுவதில்லை. எமது நாட்டில் உள்ளவற்றை விலைக்கு வாங்க இந்தியா முயலக் கூடாது. அதனை அவர்கள் நிறுத்திக் கொள்ள வேண்டும். நாட்டு வளங்களை விற்கும் செயற்பாடுகளுக்கு எமது நாட்டு மக்கள் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர்.
அவர்கள் இந்தியாவையும் எதிர்க்கத் துணிவார்கள். கவனம். நான் இந்தியாவுக்கு எதிரியல்ல. ஆனால், எனது நாடும் மக்களும் எனக்கு முக்கியம். தொலைநோக்கு பார்வையில் இந்தியா செயற்படவேண்டும். பின்னர் வருந்தவோ கவலைப்படவோ கூடாது - என்றார் மகிந்த ராஜபக்ச. (உ-5)

## அரசியல்...

என்று அரச தலைவர் மைத்திரிபாலவுக்குச் சுட்டிக்காட்டியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், தமிழ் அரசியல் கைதிகளை தாமதமின்றி விடுதலை செய்யுமாறு கேட்டுக் கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.
இந்த விடயம் தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் நேற்றுக் கடிதம் எழுதினார்.
அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:
பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டுள்ள இந்தக் கைதிகள், தண்டனை விதிக்கப்பட்டவர்களோ, குற்றம் சுமத்தப்பட்டவர்களாகளோ அல்லர். மேலும் சிலருக்கு குற்றச்சாட்டுக்கள் வழங்கப்படாதபோதும் அவர்கள் அனைவரும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழேயே கைது செய்யப்பட்டார்கள். அவர்களுக்கு எதிரான சகல நடவடிக்கைகளும் அந்தச் சட்டத்தின் கீழேயே மேற்கொள்ளப்பட்டன.
பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் கொடூரமான, வெறுக்கத்தக்க ஒரு சட்டம் என்பதும் அது காலத்துக்குப் பொருத்தமற்றதென்பதும் இலங்கை அரசால் உள்நாட்டிலும் பன்னாட்டு சமூகத்தின் முன்னும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்தை நீக்கிவிட்டு பன்னாட்டு நியமங்களுக்கு ஏற்புடைய வகையில் புதிய சட்டமொன்றை உருவாக்கப் போவதாக உள்நாட்டிலும் பன்னாட்டு மட்டத்திலும் அரசு உறுதி வழங்கியிருந்தது.
அதனை இலங்கை அரசு இன்னமும் நிறைவேற்றவில்லை. இந்தச் சட்டம், சட்டப் புத்தகங்களில் தொடர்ந்திருக்க மாட்டாதென்று இலங்கை அரசு உறுதியளித்த கடப்பாட்டிலிருந்து அது தவற முடியாது.
இந்த நபர்களில் அநேகமானவர்களுக்கு எதிராக இருக்கும் ஒரேயொரு சான்று அவர்களின் விருப்பத்துக்கு மாறாகப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் மட்டுமே. அது சாதாரணமான நீதிமன்றத்தில் அவர்களுக்கு எதிரான சாட்சியமாக ஏற்கப்பட மாட்டாது. வழக்குத் தொடுநர்களிடம் போதிய சாட்சியங்கள் இல்லாமை காரணமாக அநேக வழக்குகள் ஒத்திவைக்கப்பட்டு வருகின்றன.
அநேகமாக இவர்கள் எல்லோருமே கைதுசெய்யப்பட்டவுடன் குற்றத் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தால் சிறைவாசம் அனுபவிக்க வேண்டிய காலத்தையும் தாண்டி நீண்ட காலத்திற்குத் தடுப்புக்காவல் கைதிகளாகவே இருக்கின்றனர்.
தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள இவர்களின் குடும்பங்கள் அவர்களின் உழைப்பாளிகளின் ஆதரவு இல்லாமல், நீண்டகாலமாக வேதனையில் வாடுகின்றன. மிகவும் காத்திரமான இந்த முக்கிய விடயத்துக்கு இதுவரை கவனம் செலுத்தப்படவில்லை.
பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் தீய அம்சங்களுக்கும் புறம்பாக, மக்கள் விடுதலை முன்னணியினர் (ஜே.வி.பி.) கிளர்ச்சிகளை மேற்கொண்ட வேளையில் கைது செய்யப்பட்டவர்கள் யாவரும் மன்னிப்பளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர். இதேபோன்ற ஒரு கொள்கையை தற்போதுள்ள இந்தக் கைதிகள் விடயத்திலும் செயற்படுத்த முடியாமலிருப்பது ஏன் என்பதை விளங்கிக் கொள்ள முடியாதுள்ளது.
இந்த வழக்குகள் முழுமையாகச் சட்டமா அதிபர் திணைக்களத்தின் பொறுப்பில் உள்ளவை என்பதாகக் கருத முடியாது. அரசின் தலைமைச் சட்ட ஆலோசகர் என்ற வகையில் சட்டமா அதிபருக்குரிய மதிப்பை வழங்கும் அதேவேளை, இந்த வழக்குகள் அரசியல் அடையாளங்களையும் கொண்டிருப்பதனால் இவை முழுமையாகச் சட்டம் சம்பந்தப்பட்டவை என்று கருதிவிட முடியாது.
தேசியப் பிரச்சினைக்கு உரிய நேரத்தில் தீர்வு காணப்பட்டிருந்தால், கைதிகளாக உள்ளவர்களில் அநேகமானவர்களுக்குத் தற்போது ஏற்பட்டுள்ள நிலமை ஏற்பட்டிருக்கமாட்டா. அவர்கள் பயனுள்ள குடிமக்களாக இருந்திருப்பார்கள் என்றும் கூறுவதில் நியாயமிருப்பதைத் தெரிவிக்க முடியும்.
இத்தகைய சூழ்நிலையில், இந்த விடயத்தை அரசியல் ரீதியாகவும் நோக்க வேண்டிய கடப்பாடு உருவாக்கியுள்ளது. இந்த விடயம் அரசியல் ரீதியாகக் கையாளப்படாமலிருப்பது இன இணக்கத்தை ஏற்படுத்துவதிலும், நன்மதிப்பையும் அமைதி நிலைமையையும் மீள ஏற்படுத்துவதிலும் வலுவான தடையாகவே அமையும்.
சில வழக்குகள் வவுனியாவில் இருந்து அநுராதபுரத்துக்கு இடமாற்றப்பட்டதன் மூலம் சில தேவையற்ற முரண்பாடுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சாட்சிகளுக்குப் பாதுகாப்பு அவசியமாயின் வழக்குகளை இடமாற்றம் செய்யாமல், சாட்சிகளுக்கான பாதுகாப்பை வழங்கியிருக்க முடியும்.
இந்தக் கைதிகள் மேலும் தாமதமின்றி விடுவிக்கப்பட வேண்டுமென நான் வலுவான கோரிக்கையை விடுக்கின்றேன் என்றுள்ளது. கடிதத்தின் பிரதிகள் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, நீதி அமைச்சர் தலதா அத்துக்கோரள மற்றும் சட்டமா அதிபர் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (உ-5)

## வடக்கில் இன்று...

மூடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வைத்தியசாலைகளிலும் போராட்டம் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால் வெளிநோயாளர்கள் பிரிவில் சிகிச்சை பெற விரும்பு வோர் இன்று அதனைத் தவிர்த்து சிரமங்களைக் குறைத்துக் கொள்வதே சிறந்தது என்று அறிவுறுத்தப்படுகிறது.
வடக்கு மாகாண மக்கள் ஓரணியில் திரண்டு தமது தார்மீக ஆதரவை இன்றைய முழு அடைப்புப் போராட்டத்துக்கு வழங்கவேண்டும் என்று வடமாகாணப் பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.
இன்றைய போராட்டத்தின் ஒரு பகுதியாக காலை 9.30மணிக்கு வடக்கு மாகாண ஆளுநரின் செயலகம் முன்பாக அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி கவனவீர்ப்புப் போராட்டமும் முன்னெடுக்கப்பட வுள்ளது.
அநுராதபுரம் சிறைச்சாலையில் 3 தமிழ் அரசியல் கைதிகள் கடந்த 18 நாள்களாகத் தொடர் உணவு ஒறுப்புப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். வவுனியா மேல் நீதிமன்றத்தில் நடைபெற்ற அவர்களது வழக்கு அநுராதபுரம் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டதை எதிர்த்தே அவர்கள் இந்த உணவு ஒறுப்புப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.
அவர்களது கோரிக்கைக்கு அரசு செவிசாய்ப்பதுடன் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கவேண்டும் என்று வலியுறுத்தியும் இன்றைய போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் ஏற்கனவே நடத்தப்பட்ட போராட்டங்கள் எவற்றுக்கும் அரசு செவி சாய்க்காத நிலையில், இன்றைய முழு அடைப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (உ-5)

## பாடசாலைகளையும்...

லைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:
தமிழ் அரசியல்கைதிகள் மூவர் கடந்த 18 நாட்களாக அநுராதபுரம் சிறைச்சா லையில் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.
அவர்களின் உடல்நிலை மோசமடைந்து வருகின்றது. ஏற்கனவே நாம் கடந்த 04.10.2017 அன்று கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டு இருந்தோம். ஆனால் உரிய தரப்பினர் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவர்களது நியாயமான கோரிக்கைகள் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும்.
இன்று வெள்ளிக்கிழமை வடக்கு - கிழக்கு மாகாணம்தழுவியரீதியில்முழுக்கடையடைப்பு முன்னெடுக்கப்படு கின்றது. இதற்கு வர்த்தக சங்கங்கள், பாடசாலைகள், சிவில் சமூக அமைப்புகள், அரச நிறுவனங்கள் மற்றும் ஏனைய தனியார் நிறுவனங்களும் ஆதரவு வழங்கவேண்டும். இதுவும் பயனளிக்காவிடின் தொடர்ந்து எமது போராட்ட வடிவங்கள் மாற்றப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ய)

# கலைமதி அணி அரையிறுதிக்கு தகுதி பெற்றது

யாழ்ப்பாணம், ஒக். 13
மணற்காடு சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில், கலைமதி அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.
கலைமதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கலைமதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விண்மீன் விளையாட்டுக் கழக அணி மோதியது. ஆட்டத்தின் ஆரம்பம் முதல் இரண்டு அணிகளும் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தின. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு



வந்தது முதல் பாதி. இரண்டாவது பாதியிலும் கோல்கள் பதிவாகவில்லை. இதனால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 6:5 என்ற கோல் கணக்கில் கலைமதி அணி வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. ஆட்டநாயகனாக கலைமதி அணியின் சந்துரு தெரிவானார்.

(ம-23)

# வயாவிளான் மத்தியின் வீராங்கனைக்கு வரவேற்பு



யாழ்ப்பாணம், ஒக். 13
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட பளுதூக்கல்போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற வயாவிளான் மத்திய கல்லூரி வீராங்கனை ரெஜீனாவுக்கு கல்லூரிச் சமூகத்தால் நேற்றுமுன்தினம் சிறப்பான வரவேற்பு வழங்கப்பட்டது.
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட பளுதூக்கல் போட்டி அண்மையில் நடை பெற்று முடிந்தது. ரெஜீனா 20 வயது பெண்களுக்கான 75 கிலோ எடைப்பிரிவில் 107 கிலோ பளுவைத்தூக்கி தங்கப் பதக்கத்தைத் தனதாக்கியிருந்தார். இவர் கடந்த வருடம் நடைபெற்ற தேசிய மட்டப் போட்டியிலும், தெற்காசிப் போட்டியிலும் வெள்ளிப் பதக்கத்தை வென்றமை குறிப்பிடத்தக்கது. (ம-23)

# தேசிய உயரம்பாய்தலில் மகாஜனாவின் ஹெரீனா தங்கப் பதக்கம் வென்றார்

யாழ், ஒக். 13
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் உயரம் பாய்தலில் மகாஜனக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த சந்திரகுமார் ஹெரீனா தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்தார்.
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட தடகளத் தொடர் கொழும்பு தியகம ராஜபக்ச மைதானத்தில் நடைபெற்று வருகிறது. 18 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு உயரம் பாய்தல் நேற்று நடைபெற்றது. தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த சந்திரகுமார் ஹெரீனா 1.58 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்தார்.
(ம-422-108)



# தேசியமட்டத் தட்டெறிதல் போட்டியில் இமையாணன் அ.த.க. வித்தியாலயம் வெள்ளிப்பதக்கத்தைத் தனதாக்கியது



யாழ்ப்பாணம், ஒக். 13
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப்போட்டியில் 16 வயது ஆண்கள் பிரிவு தட்டெறிதலில் இமையாணன் அரசினர் தமிழ் கலவன் வித்தியாலயத்துக்கு வெள்ளிப் பதக்கம் கிடைத்தது.
தியகம விளையாட்டரங்கில் நேற்று இடம்பெற்ற இந்தப் போட்டியில் இமையாணன் அரசினர் தமிழ் கலவன் வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த முத்துராசா திவான்சன் 47.89 மீற்றர் தூரத்துக்கு எறிந்தே வெள்ளிப்பதக்கம் வென்றார்.
(ம-108)

# ஆதிசக்தி அணி அரையிறுதியில்

யாழ்ப்பாணம், ஒக். 13
மணற்காடு சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில், நேற்று முன்தினம் இடம்பெற்ற காலிறுதி ஆட்டத்தில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது ஆதிசக்தி அணி.
சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ஆதிசக்தி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அண்ணாசிலையடி விளையாட்டுக் கழக அணி மோதியது. 3:0 என்ற கோல் கணக்கில் ஆதிசக்தி அணி வெற்றிபெற்றது. ஆட்டநாயகனாக ஆதிசக்தி அணியின் கௌரிதரன் தெரிவானார்.

(ம-23)

# ஹென்றிஸின் வீரர்களுக்கு கோலாகலமான வரவேற்பு

யாழ்ப்பாணம், ஒக். 13
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்டப் போட்டியில் வெற்றிபெற்ற இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரியின் வீரர்களுக்கு கல்லூரிச் சமூகத்தால் நேற்றுச் சிறப்பான வரவேற்பு வழங்கப்பட்டது.
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான கால்பந்தாட்டத்தில் சம்பியன், 16 வயதுக்கு உட்பட்ட பிரிவில் வெண்கலப்பதக்கம், உடற்பயிற்சிப் போட்டியில் வெண்கலப் பதக்கம், 20 வயதுக்கு உட்பட்ட கபடியில் வெண்கலப் பதக்கம் ஆகியவற்றை ஹென்றிஸ் கல்லூரியின் அணிகள் தமதாக்கியிருந்தன. இந்த அணிகளில் இடம்பிடித்த வீரர்களுக்கு கல்லூரிச் சமூகத்தால் நேற்றுச் சிறப்பான வரவேற்பு வழங்கப்பட்டது. கல்லூரி முதல்வர் அருட்தந்தை ஹொட்விற் ஜோயல் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன் கலந்து கொண்டார். (ம-422)

# சரஸ்வதி ச.ச.நிலைய பூப்பந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக். 13
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தினால் தீபத் திருநாளை முன்னிட்டு வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு இடையில் அமரர்கள் கனகலிங்கம், மகாலிங்கம் ஞாபகார்த்தக் கிண்ணத்துக்காக நடத்தப்பட்ட பூப்பந்தாட்டத் தொடர் குறித்த சனசமூக நிலையத்தின் பூப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று முடிந்துள்ளது.



பெண்கள் ஒற்றையர் பிரிவில் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த ம.ஜோய்காருண்யா முதலாமிடத்தையும், வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ஆர்.ராகவி இரண்டாமிடத்தையும் பெற்றனர். இரட்டையர் பிரிவில் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி என்.ஹரிகரன், ம.ஜோய்காருண்யா இணை முதலாமிடத்தையும், யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த எம்.ஹம்சாயினி, வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த பி.துவாரகா இணை இரண்டாம் இடத்தையும் பெற்றன. (ம-23)



# கொலின்ஸ் அணி இலகுவான வெற்றி

யாழ்ப்பாணம், ஒக். 13
திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின் வைர விழாவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் கொலின்ஸ் அணி வெற்றிபெற்றது.
திக்கம் மத்திய சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில், கலைமதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொலின்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. இந்த ஆட்டத்தில் கொலின்ஸ் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. இந்த ஆட்டத்தில் ஆட்டத்தில் இரண்டு அணியினரும் நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் தலா ஒரு கோலைப் பதிவுசெய்தமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (ம-23)

# கிளி. மாவட்ட பாடசாலைகளின் கால்பந்தாட்ட முடிவுகள் சில

யாழ்ப்பாணம், ஒக். 13
மைலோ கிண்ணத்துக்காக நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரில், கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளின் 14 வயதுப்பிரிவு அணிகளுக்கு இடையில் நேற்று இடம்பெற்ற ஆட்டங்கள் சிலவற்றின் முடிவுகள் வருமாறு.
கிளிநொச்சி உதயதாரகை விளையாட்டுக் கழக மைதானத்தில் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்றன. திருவையாறு மகா வித்தியாலய அணிக்கும், கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா ஒரு கோலைப் பதிவுசெய்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத்



தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. கிளிநொச்சி இந்துக்கல்லூரி அணி3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
சிவநகர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணிக்கும் பிரமந்தனாறு மகா வித்தியாலய அணிக்கும் இடையிலான ஆட்டத்தில், சிவநகர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய அணிக்கும், பூநகரி சிறி விக்னேஸ்வரா வித்தியாலய அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணிக்கும் வலைப்பாடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் வலைப்பாடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது
சிவநகர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணிக்கும் இரணைதீவு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரணைதீவு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது
பூநகரி சிறி விக்னேஸ்வர மகா வித்தியாலய அணிக்கும் வட்டக்கச்சி மத்திய கல்லூரி அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் வட்டக்கச்சி மத்திய கல்லூரி அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
(ம-23)



# பாரதி அணி அசத்தலாட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 13
மைலோ கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் யாழ்ப்பாண மாவட்ட அணிகளுக்கு இடையில் நேற்று இடம்பெற்ற ஆட்டமொன்றில் பாரதி அணி வெற்றிபெற்றது.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்றுப் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அண்ணா ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. றெம்சன், சதீஸ் இருவரும் இரண்டாவது பாதியில் கோல்களைப் பதிவுசெய்ய முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது பாரதி அணி.
(ம-23)

## தேசியமட்ட கோலூன்றிப்பாய்தலில்

# அருணோதயவுக்கு கிடைத்தது தங்கம்

யாழ்ப்பாணம், ஒக். 13
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட கோலூன்றிப் பாய்தலில் அளவெட்டி அருணோதயக் கல்லூரிக்கு தங்கப் பதக்கம் கிடைத்தது.
கொழும்பு தியகம மகிந்த ராஜபக்ச விளையாட்டு மைதானத்தில் இந்தத் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற 20 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் அளவெட்டி அருணோதயக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த க.நெப்தலி ஜொய்சன் 4.45 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்தார்.
(ம-422)





# பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் அருணோதய வீராங்கனைக்குத் தங்கம்



யாழ்ப்பாணம், ஒக். 13
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான கோலூன்றிப் பாய்தலில் 20வயது பெண்கள் பிரிவில் அருணோதயக் கல்லூரி வீராங்கனை தங்கப்பதக்கம் வென்றார்.
கொழும்பு தியகம மகிந்த ராஜபக்ச மைதானத்தில் இந்தப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. நேற்று நடைபெற்ற 20வயது பெண்கள் பிரிவு கோலூன்றிப் பாய்தலில் அளவெட்டி அருணோதயக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த வ.சாத்வீகா 3.00 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்தார்.
(ம-422)

# ஈட்டி எறிதல் போட்டியில் சாவகச்சேரி இந்துவுக்கு கிடைத்தது தங்கப்பதக்கம்

யாழ்ப்பாணம், ஒக். 13
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான 18 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான ஈட்டி எறிதலில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.சங்கவி தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்தார்.
கொழும்பு தியகம மகிந்த ராஜபக்ச மைதானத்தில் நேற்று நடைபெற்ற 18 வயது பெண்கள் பிரிவு ஈட்டி எறிதலில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.சங்கவி 37.34 மீற்றர் தூரத்துக்கு எறிந்து தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்துள்ளார்.
(ம-422)

# ஓய்வு பெறுகிறார் நெக்ரா

இந்திய அணியில் நீண்டகாலமாக இடம்பிடித்து விளையாடிவந்த வேகப்பந்து வீச்சாளர் நெக்ரா, அடுத்த மாதம் முதலாம் திகதியுடன் பன்னாட்டு அரங்கில் இருந்து விடைபெறுகிறார்.
இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. இந்தத் தொடர் முடிவடைந்த பிற்பாடு இந்தியா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையில் மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரும், மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடரும் நடைபெறவுள்ளன. ரி-20 தொடரின் முதலாவது ஆட்டம் டெல்லியில் நவம்பர் மாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ளது. இந்த ஆட்டமே நெக்ரா ஒரு வீரராகக் களமிறங்கும் கடைசி ஆட்டமாகும்.
18 ஆண்டுகால கிரிக்கெட் வாழ்க்கையில் நெக்ரா 17 டெஸ்ட் ஆட்டங்களில் மட்டுமே விளையாடி 44 இலக்குகளைக் கைப்பற்றியுள்ளார். 120 ஒருநாள் ஆட்டங்களில் 157 இலக்குகளைக் கைப்பற்றியுள்ளார். 26 ரி-20 ஆட்டங்களில் 34 இலக்குகளைக் கைப்பற்றியுள்ளார்.
1999ஆம் ஆண்டு இலங்கைக்கு எதிராக அறிமுக டெஸ்டில் விளையாடிய நெக்ரா, 2004ஆம் ஆண்டில் ராவல்பிண்டியில் பாகிஸ்தானுக்கு எதிராக கடைசி டெஸ்ட் ஆட்டத்தில் விளையாடினார். ஒருநாள் ஆட்டங்களைப் பொறுத்தவரை ஹராரேயில் 2001ஆம் ஆண்டு சிம்பாப்வேக்கு எதிராக பயணத்தைத் தொடங்கிய நெக்ரா, 2011ஆம் ஆண்டு உலகக்கிண்ணத் தொடரில் பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் கடைசியாக விளையாடினார்.
2005ஆம் ஆண்டு செப்ரெம்பர் முதல் 2009ஆம் ஆண்டு ஜீன் மாதம் வரை இந்தியாவுக்காக ஒரு ஆட்டத்திலேனும் நெக்ரா விளையாடவில்லை. காரணம் உடலின் பல்வேறு பகுதிகளிலும் தொடர் காயங்கள் அவரை ஆட்கொண்டிருந்தன. இதை அவரே ஒரு முறை "என் உடலில் காயங்கள் என்பதை விட காயங் களுக்கிடையில் என் உடல்" என்றார். 12 அறுவைச் சிகிச்சைகள் செய்து கொண்டு அவர் இன்னமும் பந்து வீசிவருவது மிகமிக ஆச்சரியமான ஒன்று. காயங்களையும் மீறிய மன உறுதிதான் அசாருதீன் முதல் கோக்லி வரை அத்தனை தலைமைகளுக்குக் கீழ் நெக்ராவை விளையாட வைத்துள்ளது.
(ம)

ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்ந்தது
06.06.1970

உதிர்ந்தது
09.10.2012



திருமதி காயத்திரி
பாலமுரளீதரன்
(ஆசிரியர் - கொக்குவில் இந்துக்கல்லூரி)

எம்முயிருடன் ஒன்றாய்க் கலந்த எம் அம்மா
ஆண்டுகள் ஐந்தாச்சு எமைவிட்டு சென்று
உம் பிரிவு தந்த சோகங்கள்
வடுக்களாய் நெஞ்சமதில்
ஆறமுடியாமல் அரற்றுகின்றோம் தினமும் நாம்.

திதி -
அபரபக்க நவமி

அம்மா காயத்திரி, உங்கள் ஆன்மா அம்பிகை நாகபூசணியின்
பாத கமலத்தைப் பற்றி நிற்க என்றென்றும் வேண்டுகின்றோம்.

19, 6 ஆம் ஒழுங்கை,
பலாலி வீதி, கந்தர்மடம்.

நீங்கா நினைவுடன்:
குடும்பத்தினர்.



## வேலைவாய்ப்பு

சாவகச்சேரியில் அமைந்துள்ள YMK Trade Expo Pvt Ltd நிறுவனத்திற்கு பின்வரும் ஊழியர்கள் தேவைப்படுகின்றார்கள்.

**உதவி முகாமையாளர்**

**கல்வி தகைமைகள் :** தமிழ், சிங்களம், ஆங்கிலம் மும்மொழிகளுடன், பொருளாதார தகைமையும் வாகன அனுமதி பத்திரமும் உள்ளவர்கள் தேவைப்படுகின்றார்கள்.

**பத்திரிகை ஆசிரியர்**

**கல்வி தகைமை :** பத்திரிகை சம்பந்தமாக அனுபவம் உள்ளவரும், கணினி பாவிக்கக் கூடியவராகவும் ஆங்கில அறிவு எழுத, பேச, வாசிக்கக்கூடியவராகவும் தேவைப்படுகின்றார்கள்.

**கணினி புரோகிராமர்**

**கல்வி தகைமை :** தமிழ், ஆங்கிலம், சிங்களம் மும்மொழிகளும் தெரிந்தவராகவும்.

1. Php>5.6
2. Angular 2/4
3. Zend Framework
   3e zeland - expressive - framework php
4. Jquerye javascript
5. Mysqi Database
6. Git
7. Jenkins
8. Bash Script
9. Htmls e bootstrap3

தங்களுடைய கல்வித் தகைமைகளையும் ஏனைய சான்றிதழ்களையும் (Curriculum Vitae) பின்வரும் E.mail இல் அனுப்பிவைக்கவும். இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

E.mail : - neworkcompany@gmail.com



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
மாணவியும்,
விக்னேஸ் ஜெயசோதி
தம்பதிகளின்
செல்வப் புதல்வியுமாகிய
செல்வி
சகானா விக்கினேஸ்
180 புள்ளிகள்

2017 இல் நடைபெற்ற 05ஆம் ஆண்டு புலமைப்பரிசில்
பரீட்சையில் 180 புள்ளிகளை பெற்றதுடன் பாடசாலை
மட்டத்தில் முதலாம் இடத்தை பெற்றமையை இட்டு
அவரை வாழ்த்துவதோடு கல்வியில் மேன்மேலும் பல
பட்டங்களை பெற்று சீரும் சிறப்புடனும் வாழ
செட்டியார்மடம் வீரகத்தி விநாயகரை
பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்,
தாத்தா, அம்மம்மா, அப்பம்மா, உதயன் மாமா,
பெரியம்மா, ராஜ் மாமா, தயா சித்தி


# கோலூன்றிப் பாய்தலில் மகாஜனவுக்கு வெள்ளி

யாழ்ப்பாணம், ஒக். 13

இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட கோலூன்றிப் பாய்தலில் 20 வயது ஆண்கள் பிரிவில், மகாஜனக் கல்லூரியின் டிலக்சன் வெள்ளிப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

கொழும்பு தியகம மகிந்த ராஜபக்ச விளையாட்டு மைதானத்தில் இந்தத் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற 20 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் மகாஜனக் கல்லூரியின் சிவநாதன் டிலக்சன் 4.20 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

(ம-422)




**SALE**

தீபாவளியை முன்னிட்டு
ஏசியன் தளபாடத்திற்கான
மாபெரும் மெகா Sale

இலுப்பையடிச் சந்திக்கும் ஆனைப்பந்திக்கும் இடையில்

076 821 9415/ 021 492 7791



**வேலைவாய்ப்பு தேவை**

யாழ் நகரில் இயங்கும் பிரபல புடைவையகத்திற்கு பெண் பணியாளர்கள் தேவை. அனுபவம் அவசியம் இல்லை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும் வயதெல்லை (18-30)

077 400 2955



**வேலையாள்கள் தேவை**

பேக்கரியில் பணியாற்றுவதற்கு நன்கு அனுபவமுள்ள பாஸ், வான் சாரதி பாண் விற்பனையாளர் ஆகியோர் தேவை.

புதிய துர்க்கா வெதுப்பகம்
கலைவாணி வீதி,
கொக்குவில் கிழக்கு, யாழப்பாணம்.



**KBK Accounting Centre**

☆ கந்தர்மடச்சந்தி (Tue, Fri → 3 - 6 pm)
☆ கொழும்புத்துறை (Sat, Sun → 2 - 6 pm)

A/L 2018 — உயர்தரக்கணக்கீடு — A/L 2019
MR.BALAKAJEN
B.com (Jaf), H.N.Dip - in - ACC (ATI), Dip - in - Edu (ousc), M.com

பிரத்தியேக மற்றும் குழு வகுப்புக்கள் ஆரம்பமாகி நடைபெறுகின்றது.
(O/L Grade - 10 - வணிகக்கல்வியும் கணக்கீடும்)

உங்கள் அனுமதிகளுக்கு : 076 565 5956


# ஆஸி. - இந்தியா கிண்ணம் எவருக்கு?



இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடரின் மூன்றாவதும் இறுதியானதுமான ஆட்டம் இன்று இரவு 7 மணிக்கு நடைபெறுகிறது.

ஆஸ்திரேலிய அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரை 4:1 என்ற அடிப்படையில் இந்திய அணி கைப்பற்றியது. ரி-20 ஆட்டம் தற்போது நடைபெற்று வருகிறது. முதலாவது ஆட்டத்தில் இந்தியா வெற்றிபெற்றது. இரண்டாவது ஆட்டத்தில் ஆஸ்திரேலியா வெற்றிபெற்றது. இன்று நடைபெறும் மூன்றாவது ஆட்டத்தில் வெற்றிபெறும் அணியே சம்பியன் என்ற காரணத்தால் இரண்டு அணிகளும் வாழ்வா? சாவா? நிலையில் களமிறங்குகின்றன.

(ம)


**அமெரிக்க லொத்தர் இலவச விசா**

உடனடியாக பதிவு செய்யுங்கள்
இறுதி சந்தர்ப்பம்
யாரும் இலவசமாக அமெரிக்கா போகலாம்
அமெரிக்கா செல்லும் 51 வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்.

0768226243

**V2 TRAVELS**

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் 0768226241 | கிளிநொச்சி 0768226240 |
| சாவகச்சேரி 0768226242 | நெல்லியடி 0776699892 |
| பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 |



**போட்டிப்பரீட்சை வகுப்புக்கள்**

1. **அதிபர் சேவை வகுப்பு** III இற்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்கான வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
   (சனி, ஞாயிறு பி.ப.2.00 - 6.00 pm)
2. **அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை** விசேட தரத்திற்குதரம் உயர்த்துவதற்கானமட்டுப்படுத்தப்பட்ட பரீட்சை - 2017
   ஆரம்பம் : 21.10.2017 சனி 10.00 மணி

Note : மேற்படி இரு பரீட்சைக்குரிய வகுப்புக்கள் துறைசார்ந்த விரிவுரையாளரினால் நடத்தப்படும்.

நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்.நகர்.
T.P. 077 469 6695



**போட்டிப் பரீட்சை வகுப்புகள்**

திட்டமிடல் சேவை
பிரதி சனி
10.00 → 2.00

SLAS
மீள் பரீட்சை IQ
பிரதி சனி
10.00 → 1.00

தொடர்புகளுக்கு
021 222 3382
யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டப்படிப்புகள் பிரிவு
யாழ். நகர்.



**பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்புக்கள்**

வடமாகாண சபையால் கோரப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான தரம் III,II க்குரிய தடைகாண் பரீட்சைகளுக்கான வழிகாட்டல் வகுப்புக்கள்.

2017/10/14 திகதி
9.00 மணிக்கு
உயர்கலைக்கல்லூரி
ஆரியகுளச்சந்தி,
யாழ்ப்பரணம்.
வளவாளர் :
திரு. ஆ.சத்தியமூர்த்தி
077 167 6457



**வட இந்திய காசி யாத்திரை**

**நாள்கள்: 10** — **ஆரம்பம்: 22.10.2017**

**செல்லும் இடங்கள்:** டெல்லி, நாராயணசுவாமி கோயில், ஆக்ரா, தாஜ் மஹால், செங்கோட்டை, மதுரா, கிருஸ்ணஜென்மபூமி, பிரேம்மந்திர் பிரமாண்டமான கிருஷ்ணர் கோயில், காசியில் 2நாள் (வாரணாசி), கயா காலமானவர்களுக்கு பிதிர்க்கடன் செய்யுமிடம், புத்தகயா (புத்தாலயங் கள்), அலகாபாத் (கங்கா, யமுனா, சரஸ்வதி), திருவேணி சங்கமம், சீத்தாமடி (சீதை தாயாருடன் பூமிக்குள் புதையுண்ட இடம்) வேறு இடங்களும் காணலாம். அத்துடன் இராமேஸ்வரம், நவபாஷாணம், உத்திரகோஷமங்கை, திருப்புலானி, மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரத் தரிசனம், அப்துல்கலாமின் மணிமண்டபமும் காணலாம். ஒரு நாள் சொப்பிங்.

**பெற்றுக் கொள்ளும் ரூபாய்க்கு எமது சேவைகள்**

4 விமான பயண டிக்கெட், மடப்பள்ளி ஆள்கள் சமைத்த சுத்தமான சைவ உணவு (மூன்று வேளை), கோப்பி, ரீ, குடிநீர் (மினரல் வோட்டர்) 2பேருக்கு கட்டில் மெத்தை, வெஸ்ரன் கொமட், குளியலறை இணைந்த அறைகள், யாத்திரை முழுவதும் A/C வாகன வசதி மேலும் கொழும்பிலிருந்து எயார் போட் போக வர வாகன வசதி.

குறிப்பு : மேலும் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வரவும் திரும்ப கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் செல்லவும் எமது செலவில் வாகன வசதி செய்து தரப்படும். மடப்பள்ளி ஆள்கள் சமைப்பதால் பிராமண சமூகத்தினரும் எவ்வித தயக்கமுமின்றி கலந்து கொள்ளலாம். விவரங்களை கேட்டு அறிந்து பதிவு செய்யவும்.

விஸ்வப்பிரம்மஸ்ரீ கலாநிதி T. ஸ்ரீரெங்கநாதன் மகன் ராஜன்
No: 59, 3/6, செட்டியார் தெரு, கொழும்பு - 11
T.P : 077 768 0102, 077 736 2154



**D.M.I**

வெலிங்ரன் சந்தி
(Honda காட்சியறைக்கு முன்)

வகுப்புக்கள்

திட்டமிடல் சேவை
பிரதி ஞாயிறு
9.30 → 2.00

முகாமைத்துவ உதவியாளர்
19 ஆம் திகதி பரீட்சைக்கு
சனி 3.00 → 5.30
ஞாயிறு 11.00 → 3.00

பிரத்தியேக பொது உளச்சார்பு பொதுஅறிவு
விடயங்கள்
சனி, ஞாயிறு 3.00 → 5.30

தொடர்புகளுக்கு
076 688 3394


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.10.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.